தமிழ்
மரபு
அறக்கட்டளை
பன்னாட்டு
அமைப்பு

தமிழ் மரபுத் தினை

Bulletin of Tamil Heritage Foundation *international* - THFi

ஜனவரி – 2026

39

தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பின்

தமிழ் மரபுத் திணை மாதாந்திர இதழ்

Tamil Marabu Thinai

தமிழ் மரபுத் திணை — 39

திருவள்ளுவர் ஆண்டு 2056 - தை

[ஜனவரி — 2026]

தமிழ் மரபுத் திணை

ஆசிரியர்:
முனைவர் க. சுபாஷிணி
பொறுப்பாசிரியர்:
மரிய ஜெரின்

Websites:
https://www.tamilheritage.org
https://academy.tamilheritage.org

Facebook:
Tamil Heritage Foundation
THF Student Heritage Network
Tamil Heritage Foundation Research - Korea India
Der Kural Des Thiruvalluvar

Youtube:
https://www.youtube.com/thfichannel

Instagram:
https://instagram.com/TamilHeritageFoundation

Twitter:
https://twitter.com/HeritageTamil

E-mail: mythforg@gmail.com

THFi - HQ: Germany

Branches: India, Srilanka, Malaysia, Denmark, Norway, France, USA.

Thinai Monthly Newsletter:
https://thf-news.tamilheritage.org/category/thinai

Tamil Marabu Thinai
தமிழ் மரபுத் திணை

Editorial Board
1. Dr.K. Subashini
2. Dr.J.S. Themozhi
3. Dr.Siva Ilango
4. Mr.Gowthama Sannah
5. Dr.Bhakthavatsala Bharathi
6. Dr.Kannan Narayanan

E-Journal Web Link:
https://tamilmarabuthinai.blogspot.com/
The E-Journal of Tamil heritage Foundation International: https://tamilheritage.org/

Attribution-NonCommercial-ShareAlike
4.0 International (CC BY-NC-SA 4.0)

~'~'~'~'~'~'~

குறிப்பு:
தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பின் பதிப்பகப் பிரிவின் வெளியீடு இது. இந்த நூல் தமிழ் ஆய்வுப்புலத்தின் தேவை கருதி அனைவருக்கும் இலவசமாக வழங்கப்படுகிறது. இந்நூலை மறுபதிப்பு செய்ய விரும்புவோர் அல்லது ஏதாவது ஒரு வகையில் தங்கள் படைப்புகளில் பயன்படுத்த விரும்புவோர் தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பினைத் தொடர்பு கொண்டு அனுமதி பெற்று உசாத்துணைகளை வழங்கி மீள்பதிப்பு செய்யலாம்.
- தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பின் பதிப்பகப் பிரிவு

https://tamilheritage.org/

உள்ளடக்கம்

தலையங்கம்.....8

புத்தாண்டு வாழ்த்துகள்.....12

1. ஆன்மிக வழியைக் கைவிடும் மக்கள்.....14

2. மரபு-இலக்கணம்-கணக்கு.....24

4. சங்க இலக்கியத்தில் ‘மீம்’.....31

5. வரலாறு என்பது கற்பிதம் - நூலாய்வு 2.....35

8. விருப்பமான வெப்பம்.....55

9. "நம்பத் தகுந்த ஆய்வாளர்".....63

10. மாத்திரை ஞெரேரென (பாகம் - 1).....65

11. மாத்திரை ஞெரேரென (பாகம் - 2).....73

12. "அண்ணாச்சி - தெக்க வாழும் ஒரு மனிதனின் கதை" - நூல் விமர்சனம்.....83

13. தமிழ் மரபு அறக்கட்டளை ஆய்வுப் பயணம் / களப்பணி.....89

க. மலேசியா, இந்தோனேசியாவிற்கு ஓர் ஆய்வுப் பயணம்.....89

உ. இந்தோனேசியாவின் ஆச்சே நகர் தமிழ் அடையாளங்கள்.....98

ங. இந்தோனேசியாவின் மேடான் - தமிழர் குடியேற்றம்.....117

ச. இந்தோனேசியா - களப்பணி.....130

ஞ. தனிநாயம் அடிகளாரின் ஆவணப்பட உருவாக்கம்.....134

ட. பொருநை அருங்காட்சியகம் திறப்பு.....139

13. தமிழ் மரபு அறக்கட்டளை நிகழ்ச்சிகள்.....145

க. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் அறிஞர்கள் அவையம்: ஒரு மனப்பதிவு!.....145

உ. நந்தனம் அரச கல்லூரி கருத்தரங்கம்.....152

ங. அயல்நாடுகளில் தமிழரும் தமிழும் - அறிஞர்கள் அவையம்.....159

ச. மலேசிய நாட்டின் கிள்ளான் - பாராட்டு விழா.....167

ஞ. கந்தசாமி நாயுடு கல்லூரி கருத்தரங்கம். 170

சூ. அன்னை ரமாபாய் விருது பெற்றார் முனைவர் சுபாஷிணி.....173

எ. மதுரை கிளையில் வெள்ளிவிழா சிறப்பு நிகழ்ச்சி.....175

அ. ஐரோப்பியத் தமிழ் ஆவணங்களை உலகமயமாக்கலின் தேவை - சிறப்பு சொற்பொழிவு.....178

14. தமிழ் மரபு அறக்கட்டளை செயல்பாடுகள். 181

க. இணையவழி திசைக்கூடல் நேரலைகள். 181

உ. மரபுக் காணொளி வெளியீடு.....182

ங. நூல் பரிசளிப்பு.....186

தலையங்கம்

— முனைவர் க. சுபாஷிணி

வணக்கம்.

தமிழ் மரபுத் திணை மாதாந்திர இதழ் வழி உங்கள் அனைவரையும் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

தென்கிழக்கு ஆசியாவுடன் தமிழர்களுக்கு உள்ள தொடர்பு பலநூற்றாண்டுகள் பழமையானது. புலம்பெயர் தமிழர் வாழ்வியல் தொடர்ந்து ஆய்வுக்கு உள்ளாக்கப்படவேண்டிய ஓர் ஆய்வுப்புலம். அதற்கு முக்கியத்துவம்

கொடுக்கும் வகையில் சென்ற மாதம் இந்தோனேசியாவின் ஆச்சே மற்றும் மேடான், மலேசியா ஆகிய நகரங்களில் கள ஆய்வுப் பயணம் முடித்துள்ளோம்.

இந்தோனேசியாவில் தமிழ்ப் பள்ளிகளுக்குத் தமிழ்நாடு அரசின் அயலகத்துறை ஏற்பாட்டில் முதற்கட்டப் பணியாக நான்கு ஆசிரியர்களையும் ஒரு கலை ஆசிரியரையும் அனுப்பும் திட்டம் தொடர்பாக மேடான் நகரில் எங்களது ஆய்வு இரண்டு நாட்கள் நடைபெற்றது. இந்தோனேசியா மேடான் நகரில் வசிக்கின்ற தமிழ் மக்களின் நலனுக்காகத் தமிழ்ப் பள்ளியைத் தொடங்கும் முயற்சியைத் தமிழ் மரபு அறக்கட்டளை, இந்தோனேசியா ஆசியத் தமிழ்ச் சங்கத்துடன் இணைந்த வகையில் தொடங்குகின்றோம். தென்கிழக்கு ஆசியப் பயணம் குறித்த மேலும் விரிவான செய்திகள் இந்த இதழில் இடம் பெறுகின்றன.

தமிழ்ச் சூழலில் இன்று நூல்கள் வாசிப்பு வளர்ச்சி கண்டு வருகின்றது. இது மிக ஆரோக்கியமான ஒரு வளர்ச்சி. புதிய தமிழ் நூல்கள் பதிப்பு ஒவ்வொரு ஆண்டும் அதன் எண்ணிக்கையில் அதிகரித்துக் கொண்டே வருகின்றது. விரிவான நூல் வாசிப்பும் தரமான ஆய்வு சிந்தனையும்

தமிழ்ச் சமூகத்தின் சிந்தனைப் போக்கிற்கு உரமாக அமையும். தொடர்ந்து வாசிப்போம், தமிழர் சிந்தனைக்கு வளம் சேர்ப்போம்! இதழின் இறுதியில் நம் தமிழ் மரபு அறக்கட்டளையின் நூல்கள் பட்டியல் இணைக்கப் பட்டுள்ளது.

இம்மாதாந்திர தமிழ் மரபுத் திணை இதழ், பொறுப்பாசிரியராக நம்முடன் இணைந்துள்ள திரு. மரிய ஜெரின் அவர்களின் மேற்பார்வையில் வெளியாகிறது. அவரது இதழியல் நற்பணிக்கு நம் வாழ்த்துகள். பல்வேறு தலைப்புகளில் அறிஞர்களது கட்டுரைகளைத் தாங்கி மலர்கின்றது இவ்விதழ். ஒவ்வொரு கட்டுரையும் முன்வைக்கின்ற கருத்துக்கள் தமிழ்ச்சமூகத்தின் சிந்தனைக்கு விருந்தாக அமையும். கட்டுரைகளோடு நூல் திறனாய்வுகளும் நூல்கள் பற்றிய செய்திகளும் இவ்விதழைச் சிறப்பிக்கின்றன.

நமது வெள்ளி விழா தொடக்க நிகழ்வில் குறிப்பிட்டதைப் போன்று இந்த வெள்ளி விழா ஆண்டு முழுவதும் டாக்டர் சேவியர் எஸ். தனிநாயகம் அவர்களது தமிழ்ப்பணிகள் குறித்த விழிப்புணர்வைக் கருத்தரங்குகள்

வழியாக ஏற்ப்படுத்தி வருகிறோம். அவைகளும் இவ்விதழுல் அருமையாக வெளிவந்துள்ளது.

அனைவருக்கும் இனிய 2026 புத்தாண்டு, தமிழ்ப் புத்தாண்டு, தைப்பொங்கல் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். தமிழ்ப்பணியில் தொடர்ந்து செயலாற்றுவோம்.

தமிழால் இணைவோம்!

அன்புடன்
முனைவர் க சுபாஷிணி
தலைவர்
தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு

புத்தாண்டு வாழ்த்துகள்

— மரிய ஜெரின்

அனைவருக்கும் இனிய ஆங்கிலப் புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துகள்!

நீண்ட நாட்களுக்குப் பின் மீட்டுருவாக்கம் பெற்று மாதாந்திர இதழாக வெளிவரும் தமிழ் மரபுத் திணை இதழ் வழியாக உங்களுடன் உரையாடுவதில் மகிழ்ச்சி.

முதலில் இம்மாதம் முதல் இவ்விதழுக்கான பொறுப்பாசிரியர் பதவியை எனக்கு அளித்தமைக்கு நமது தமிழ் மரபு அறக்கட்டளை தலைவர் முனைவர் க. சுபாஷிணி அவர்களுக்கு எனது நன்றி. தற்போது மென்பொருள் துறையில் எனது நாட்டம் அதிகம்

இருந்தாலும், எனது கடந்த கால இதழியல் துறை அனுபவம் இப்பணியைச் சிறப்பாக செய்ய உதவும் என்று நம்புகிறேன்.

இவ்விதழில் சிறப்பம்சமாக கருத்தரங்குகள், பாராட்டு விழாக்கள் இடம்பெற்றுள்ளது. மேலும், இதில் வெளிவந்துள்ள கட்டுரைகள் அனைத்தும் நமது THFi-மரபுப் பாதுகாவலர்கள் வாட்ஸ்அப் குழுவில் சென்ற மாதம் பதியப்பட்டவை, அவை இங்கு தேதியின் அடிப்படையில் அமைந்துள்ளது.

புதிதாக இவ்விதழில் களப்பணிகள் பற்றியான பிரிவு அமைந்துள்ளது. நமது தலைவர் சுபாஷிணி அவர்கள் ஆய்வுச் சார்ந்த தகவல்களை தன்னுடைய பயணங்களில் வழியாக உடனடியாக நாட்குறிப்புகள் போன்று பதிவிடும் வழக்கம் உள்ளதால், இந்தப் பிரிவானது அவற்றை ஆவணப் படுத்துவதற்கு வசதியாக இருக்கும். அந்த வகையில் சென்ற மாத களப்பணிக் குறிப்பகள் சிறப்பாக வந்துள்ளது, அவற்றை வாசித்துப் பயன்பெறுங்கள். நன்றி!

அன்புடன்
மரிய ஜெரின்
பொறுப்பாசிரியர்
தமிழ் மரபுத் திணை இதழ்

1. ஆன்மிக வழியைக் கைவிடும் மக்கள்

— முனைவர் தேமொழி

உலகின் பல நாடுகளில், குறிப்பாக மேலை நாடுகளான ஐரோப்பா மற்றும் வட அமெரிக்க நாடுகளிலும், ஆஸ்திரேலியாவிலும் மக்களிடையே சமயச் சார்பு, இறை நம்பிக்கை ஆகியன குறைந்து வரும் காரணத்தால் தேவாலயங்கள் போகும் வழக்கம் மக்களிடையே குறைந்து வருகிறது. அத்துடன், உலக அளவில் இறைநம்பிக்கை/சமயம் சாராதவர் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது.

தோராயமாக; இன்றைய உலகில் 4 பேரில் ஒருவர் கிறித்துவராகவும் (28.8%), ஒருவர் இஸ்லாமியராகவும் (25.6%), ஒருவர் கடவுள்/சமய நம்பிக்கை சாராதவராகவும்(24.2%), மற்றும் ஒருவர் எந்த பிற சமயத்தவராகவோ(இந்து/பௌத்தம்/யூதம்/மற்றும் பிற=21.4%) இருப்பதாக பியூ ஆய்வு நிறுவனத்தின் (Pew Research Center) அறிக்கை கூறுகிறது.





உலகில் உள்ள ஒரு குறிப்பிட்ட அளவு மக்கள் தொகையில் இந்து மதத்தினர் அதிகம் இருப்பதற்கு ஒரே காரணம் இந்தியாவின் மக்கள்தொகை அதிகம் இருப்பதாலும், அவர்களில் 80% மக்கள் இந்து மதத்தைப் பின்பற்றுவதாலும்

மட்டுமே. இந்து சமயத்தை வளர்க்க வேண்டும் என்றால் இந்திய-இந்துக்களின் மக்கள் தொகையை அதிகரித்தால் மட்டும்தான், அவர்களும் இந்து சமயக் கொள்கையைத் தொடர்ந்தால் மட்டும்தான் இயலும்.

உலகின் பல நாடுகளில், குறிப்பாக மேற்கு ஐரோப்பா மற்றும் வட அமெரிக்கா முழுவதும், தேவாலயங்கள் விற்பனைக்கு வருவது வழக்கம். இதற்கு முக்கியமான காரணம் ஆலயங்களுக்கு வரும் மக்கள்தொகை குறைவது, அதன் தொடர் விளைவாகப் பெரிய வழிபாட்டு இடங்களைப் பராமரிக்கும் செலவும்

கட்டுப்படியாகாமல் போவதும்தான். சமயம் இறை நம்பிக்கை ஆகியன குறித்து மக்கள் மனப்பாங்கில் ஏற்படும் மாற்றமும், நகரமயமாக்கல் வளர்ச்சியும் ஆலயங்களுக்கு மக்கள் செல்லும் நிலை குறைவதன் மூல காரணங்களாக அமைகின்றன.

ஐரோப்பிய நாடுகளான பெல்ஜியம், டென்மார்க், பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி நாடுகளிலும்; அமெரிக்கா, கனடா ஆகிய வட அமெரிக்க நாடுகளிலும்; ஆஸ்திரேலியாவிலும் மக்கள் வருகையற்ற ஆலயங்கள் முதலில் பராமரிக்க இயலாமையால் மூடப்படுகின்றன. பல ஆண்டுகளாகப் பயன்பாட்டில் இல்லாத வழிபாட்டு ஆலயங்கள் பின்னர் கட்டிட விற்பனை சந்தையில் வைக்கப்படுகின்றன (https://www.churchesforsale.com/). அவற்றை வாங்குபவரின் திட்டப்படி பின்னர் அவை மிகப் பெரிய வணிக வளாகங்கள், வர்த்தக நிறுவன கட்டிடங்கள், தங்கும் விடுதிகள், அடுக்குமாடிக் குடியிருப்புக் கட்டிடங்கள், சிறு தொழிற்சாலைகள், உடற்பயிற்சிக் கூடங்கள், பண்பாட்டு மையங்கள் என்ற மாற்றங்களைப் பெறுகின்றன.

பொது வெளியில் சமய விழாக்கள், வழிபாடுகள் நடத்தப்படுவது குறைவதும்;

இயல்பாகவே ஏற்படும் பிற வாழ்வியல் நடைமுறை மாற்றங்களால் வெளிப்படையாக மத அடையாளங்களை அணிவதை, பொது வெளியில் மதம் குறித்த உரையாடல்களை மக்கள் கைவிடுவதும் காலப்போக்கில் சமய சச்சரவால் ஏற்படும் கலவரங்களையும் அதனால் ஏற்படும் இழப்புகளையும் குறைத்து விடும். மக்கள் அனைவரும் தத்தம் கைப்பேசியில் ஆழ்ந்திருக்கும் போது, நேரில் அருகில் உள்ளவர்களிடையே உரையாடலே இருப்பதில்லை. பிறகு, சர்ச்சைக்குரிய உரையாடலால் ஏது? பின்னர் அதனால் ஏற்படக்கூடிய மனக்கசப்பு, சண்டை சச்சரவுதான் ஏது? இதனால் தொலைநுட்ப வளர்ச்சிக்குத்தான் நாம் நன்றிக் கடன் பட்டிருக்கிறோம்.

இன்றைய புள்ளிவிவரங்களின் படி சீனா (1.3 பில்லியன்), அமெரிக்கா (101 மில்லியன்), ஜப்பான் (73 மில்லியன்) ஆகிய நாடுகளில் சமயம்-இறை சாரா கொள்கை கொண்டவர் எண்ணிக்கை மிகுதி. இந்த நாடுகள் தொழில்நுட்ப வளர்ச்சியில் முன்னணியில் இருப்பதும், அவர்கள் உருவாக்கித் தரும் கண்டுபிடிப்புகளைக் கொண்டு இந்திய ஆன்மிக மக்கள் தங்கள் மதச் சடங்குகள் வழிபாடுகள் ஆகியவற்றின் மூலம் மதத்தை

வளர்க்கிறார்கள் என்பதுதான் நகை முரண்.

அண்மையில் அடுக்குமாடிக் குடியிருப்பு புதுமனைப் புகுவிழாவில் வேதியர் மந்திரம் சொல்ல ஒரு தானியங்கு பசு பொம்மை பயன்படுத்தப் பட்டு சடங்குகள் செய்யப்பட்ட காணொளி ஒன்று இணையத்தில் வலம் வந்ததை இங்கு நினைவு கூரலாம் (https://www.youtube.com/shorts/f99bGVFtatM).

இக்கருத்தை அறிஞர் அண்ணாதுரை சென்ற நூற்றாண்டில் எழுதிய ஆயுத பூஜை கட்டுரையிலேயே சுட்டிக் காட்டி இருப்பார்.

புதிய தொழில் நுட்பத்தைக் கண்டுபிடிப்பதைவிடக் கண்டுபிடிக்கப்பட்டவற்றை இந்தியர் பயன்படுத்துவதில் ஆர்வம் காட்டுபவர்களாகவே இருக்கும் நிலை

மாற வேண்டும் என்றால் இந்திய மக்களிடம் அறிவியல் சிந்தனையும் மனப்பாங்கும் வளர வேண்டும். அந்த மானப்பான்மையையும் அரசியலமைப்பு வரையறை கொண்டு இந்தியாவில் வளர்க்க வேண்டிய நிலை. அறிவியல் கருத்தரங்குகளில் ஆன்மிகப் புராணக்கதைகளைப் பேசி திரிக்கும் நிலையும் நடைமுறையாக இருக்கிறது. அறிவியலுக்கான நோபல் பரிசு பெற்ற அறிவியல் அறிஞர் வெ.ராமகிருஷ்ணன் இந்தியா அறிவியல் கருத்தரங்கங்கள் சர்க்கஸ் போல நடைபெறுகின்றன அவற்றில் நான் இனி பங்கேற்க மாட்டேன் என்று அறிவித்ததை நாம் கடந்து போக இயலாது.

உலகின் மகிழ்ச்சியான நாடுகளின் மக்களிடையே சமயச்சார்பின்மையும் இறைநம்பிக்கை இன்மையும் அதிகம் இருப்பதை ஆய்வறிக்கைகள் காட்டுகின்றன. பின்லாந்து, டென்மார்க் மற்றும் ஸ்வீடன் போன்ற நாடுகள்

மகிழ்ச்சியான நாடுகள் எனத் தொடர்ந்து தரவரிசைப் படுத்துதலில் முன்னிடங்களில் உள்ளன. இந்நாடுகள் மதச்சார்பற்றவையாகவும் அதிக அளவில் இறை நம்பிக்கையற்ற மக்கள் வாழும் நாடுகளாகவும் அறியப்படுகின்றன. இந்நாடுகளில் நிலவும் பொருளாதாரம், மக்களுக்கு ஆதரவான சமூக சூழ்நிலை, தனிமனித உரிமை ஆகியவையும் (Economic prosperity, High social support, Freedom to make life choices) மேம்பட்ட நிலையில் இருப்பவை. பொருளாதார வளர்ச்சியின் விளைவாக இந்நாடுகளின் மக்கள் வாழ்வில் பசி, வறுமை, நோய் குறித்த கவலைகளும் குறைவு. மனித நேய அடிப்படையில் சமூக ஆதரவுகள் அதிகம் இருப்பதுடன், தனி மனித வாழ்க்கையில் அவர்களின் வாழ்வின் விருப்பத்தைக் கட்டுப்படுத்தும் முன்னேற்றத்தைத் தடுக்கும் சமூகக் கட்டுப்பாடுகளும் குறைவு.

எங்கு மக்களுக்கு அடிப்படைத் தேவைகள் நிறைவேறுவதில் சிக்கல் இல்லையோ, எங்குத் தனிமனித உரிமை மதிக்கப் படுகிறதோ அந்தச் சூழலில் அவர்களுக்குப் பொதுவாழ்வில் மனமகிழ்ச்சி ஏற்படுவதும்; அதன் காரணமாக அம்மக்கள் தங்களுக்கு இறைமூலமோ சமயம் மூலமோ மீட்சி மற்றும் உதவி தேவை என்ற நிலையில்

இல்லாமல் இருப்பதையும் புரிந்து கொள்ளலாம். துன்பம் ஏற்படக்கூடும் என்ற கலக்கமும், மக்களுக்குத் துன்பம் நேர்கையிலேயே கடவுள் குறித்த எண்ணம் உருவாவதன் உளவியல் அடிப்படைக்குச் சான்றாகவும் இதனைக் கருதலாம். "மதம் மக்களின் போதைப்பொருள்" ("religion is the opium of the people") என்ற கார்ல் மார்க்ஸின் கூற்று இதனை விளக்கக்கூடிய ஓர் உண்மையே. சமய போதையில் ஆழ்ந்து மக்கள் கவலைகளை எதிர்கால அச்சத்தை மறக்க முயல்கிறார்கள்.

சான்றாதாரங்கள்:

How the Global Religious Landscape Changed From 2010 to 2020
https://www.pewresearch.org/religion/2025/06/09/how-the-global-religious-landscape-changed-from-2010-to-2020/
June 9, 2025

List of religious populations
https://en.wikipedia.org/wiki/List_of_religious_populations

Indian Science Congress is a circus, won't attend it: Nobel laureate V Ramakrishnan

https://www.firstpost.com/india/indian-science-congress-is-a-circus-wont-attend-it-nobel-laureate-v-ramakrishnan-2572268.html#google_vignette
January 6, 2016

These Are the World's Happiest Countries in 2025
https://www.afar.com/magazine/the-worlds-happiest-country-is-all-about-reading-coffee-and-saunas
By Michelle Baran, March 20, 2025

2018 data: Across countries, the happiest ones are the least religious
https://whyevolutionistrue.com/2018/03/22/2018-data-across-countries-the-happiest-ones-are-the-least-religious/
March 22, 2018

Are religious people happier, healthier? Our new global study explores this question
https://www.pewresearch.org/short-reads/2019/01/31/are-religious-people-happier-healthier-our-new-global-study-explores-this-question/

2. மரபு-இலக்கணம்-கணக்கு

— அருள் மெர்வின்

101010000101010

10 10 100 00 10 10 10

10 10 100 00
10 10 10

நிரைநேர் நிரைநேர் நிரைநேர்நேர்
நேர்நேர்
நிரைநேர் நிரைநேர் நிரைநேர்

புளிமா புளிமா புளிமாங்காய் தேமா
புளிமா புளிமா புளிமா

புளிமா புளிமா புளிமாங்காய் தேமா
புளிமா புளிமா பிறப்பு*

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு

YX YX YXX XX
YX YX _ /_ (பிறப்பு)

XY XY XYY YY
XY XY _ _

(*வெண்பா புளிமாவில் முடிந்தால் அந்த சொல்லை யாப்பிலக்கணத்தில் 'பிறப்பு' என்கிறார்கள்.)

அருஞ்சொற்பொருள்:

YX - ஆண்; YXX - பெரும்பாலும் ஆண்; XX - பெண்.

XY - ஆண்; XYY - பெரும்பாலும் ஆண்; YY - சாத்தியமில்லை, 00.

உரை:

எத்தனை புளிமாக்களும், புளிமாங்காய்களும் உலகத்தில் இருந்தாலும் பிறப்பு நிகழ்ந்து உலகம் பிழைக்க ஒரு தேமா தேவை.

- அருள் மெர்வின் (01-12-2025)

3. வரலாறு என்பது கற்பிதம் - நூலாய்வு 1

— முனைவர். க. சுபாஷிணி

"வரலாறு என்பது கற்பிதம்" என்ற தலைப்பில் அறிஞர் பொ. வேல்சாமி அவர்கள் எழுதிய நூல் மறுபதிப்பாக கலப்பை பதிப்பகத்தால் அண்மையில் வெளிவந்திருக்கின்றது. அதில் உள்ள ஒவ்வொரு கட்டுரைகளும் சாதாரணமாக கடந்து விடாமல் எதிர்கொள்ள வேண்டிய செய்திகள் என்ற அடிப்படையில் முக்கியத்துவம் பெறுகின்றன.

நேரம் கிடைக்கும் பொழுது கட்டுரை ஒவ்வொன்றையும் சற்று அறிமுகம் செய்யலாம் என நினைக்கிறேன்.

இன்று இந்த நூலில் உள்ள முதல் கட்டுரையை சற்று காண்போம்.



"வருணாசிரம மயமான தமிழ் இலக்கியத்தின் பிதாமகர் அகத்தியர்" என்ற தலைப்பில் அமைந்த கட்டுரை இது.

தொல்காப்பியம் என்ற நூலை ஆசிரியர்களும் மாணவர்களும் பொது மக்களும் என அனைவரும் பார்த்திருக்கின்றோம்; மாணவர்களும் அதனை பயில்கின்றார்கள். ஆனால் அகத்தியர் என்ற ஒருவர் எழுதிய "அகத்தியம்" எனும் இலக்கண நூலை இதுவரை யாரும் பார்த்ததாகவோ படித்ததாகவோ செய்திகள் இல்லை" என்னும் உண்மையை முன்வைத்து கட்டுரையைத் தொடங்குகிறார் நூலாசிரியர்.

இருபதாம் நூற்றாண்டில் கே. என். சிவராஜ பிள்ளை, நமச்சிவாய முதலியார் போன்ற அறிஞர்கள் அகத்தியர் வரலாறு பற்றி ஆராய்ந்து நூல்கள் படைத்தனர். இவர்கள் தொல்காப்பியர் வரலாற்றுடன் தொடர்பு படுத்தக்கூடிய அகத்தியர் பற்றிய எவ்விதமான சான்றுகளும் இல்லை என்று கூறியிருப்பதைச் சுட்டிக்காட்டுகிறார்.

அகத்தியர் குறித்த பதிவுகள் எந்த அடிப்படையில் தமிழ் இலக்கண இலக்கிய உலகில் நுழைகின்றன என்ற

சரியான பார்வையோடு இக்கட்டுரை நகர்கிறது.

புராணங்களில் சிவபெருமானின் அருளை பெற்றவர்கள் என்ற கருத்தும், இவர்கள் இமயமலையில் உள்ள கைலாயத்தில் இருப்பவர்கள், வானத்தில் பறந்து வந்து தமிழ்நாட்டில் தமிழை வளர்த்தனர் என்றும் சித்தரிக்கப்படுகின்றார்கள்.

முக்கியமாக மூன்று விஷயங்கள் இங்கு கவனிக்கத்தக்கவை.

1. இமயமலையில் சிவபெருமானின் கைலாயம் உள்ளது எனும் கற்பனை தமிழ் மக்கள் சூழலில் பரவலாக்கம் செய்யப்பட்டு விட்டது.

2. தமிழ் மொழியில் ஆகமத்தை விளக்கும் ஒரு நூலை எழுத திருமூலர் கைலாயத்திலிருந்து வந்தார் என்று சேக்கிழார் பெரிய புராணத்தில் கூறுவது.

3. சிவஞான போதத்தை எழுதிய மெய்கண்டாருக்கு அந்த தத்துவத்தை உபதேசம் செய்தவர் கைலாயத்திலிருந்து வந்த பரஞ்ஜோதி முனிவர் என்ற கருத்து பொதுவாகவே உலவுகின்றது.

ஒன்பது, பத்தாம் நூற்றாண்டுக்கு பின்னர் தமிழ்நாட்டில் இயற்றப்பட்ட தமிழ் இலக்கியங்கள் பெரும்பாலும் (பெரிய புராணம் கம்பராமாயணம் உட்பட) மனுநீதியை அடிப்படையாகக் கொண்டவை ஆகவே வர்ணாசிரமத்தை இவை ஆதரிக்கின்றன என்கிறார் நூலாசிரியர் பொ. வேல்சாமி.

அதுமட்டுமல்ல, பிற்காலங்களில் தருமபுர ஆதீனத்தை சேர்ந்தவர்களும் திருவாவடுதுறை ஆதீனத்தை சேர்ந்தோரும் தங்களை "திருக்கயிலாயப் பரம்பரையினர்" என்று கூறுவதில் பெருமைப்பட்டனர் என்பதையும் சுட்டிக்காட்டுகிறார்.

சைவ ஆதீனங்கள் வைதீகப் புகழை பரப்புவதில் முக்கிய பங்கு வகித்திருக்கின்றார்கள். பெரும்புலமை படைத்த சிவஞான முனிவர் கூட தங்களை சூத்திரர் என்பதை ஏற்றுக் கொண்டு "சற்சூத்திரர்" என்று புனிதப்படுத்திக் கொள்வது இங்கு நோக்கத்தக்கது. சிவஞான போதத்திற்கு உரை எழுதிய அவர் பார்ப்பனர்கள் மனிதர்கள் போல இருந்தாலும் "பார்ப்பனர் எம் மண்ணின் தெய்வங்கள்" என்று பேருரையில்

குறிப்பிட்டிருப்பதை நூலாசிரியர் சுட்டிக்காட்டுகின்றார்.

இறுதியாக கட்டுரையாசிரியர் கீழ்காணும் கருத்துக்களை தொகுத்து வழங்குகிறார்.

சங்க இலக்கியங்களும் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களும் தமிழ் காப்பியங்களும் தொல்காப்பியத்தையே இலக்கணமாகக் கொண்டு உருவாக்கப்பட்டன.

8, 9, 10 ஆம் நூற்றாண்டுக்கு பின் உருவாக்கப்பட்ட நூல்கள் "அகத்தியர் மரபு" என்ற ஒன்றை முன்னிலைப்படுத்துகின்றன.

இவையே சனாதன சாதியத்தின் அடிப்படையில் தமிழ் எழுத்துக்களையும் வகைப்படுத்துகின்றன.

நூலின் அடுத்த கட்டுரையைத் தொடர்வோம்..

- சுபாஷிணி (01-12-2025)

4. சங்க இலக்கியத்தில் ‘மீம்’

— அருள் மெர்வின்

‘மீம்’ (meme) என்ற புதிய சொல்லை 1970-களில் உலகிற்கு அறிமுகப்படுத்தியவர் ரிச்சர்ட் டாக்கின்ஸ் என்ற பரிணாமவியல் வல்லுநர் என்று பலபேருக்குத் தெரிந்திருக்கும். இன்று நாமெல்லாம் இருக்கிறோமென்றால் அதற்கு கடவுள் தவிர ஜீன்களும் காரணம். சரியான சூழ்நிலையும் வாய்ப்பும் கிடைத்தால் ஜீன்கள் இரட்டிப்பாகி இன்னோர் உயிரை உருவாக்கிவிடும். அந்த உயிரிலுள்ள ஜீன்

இரட்டிப்பாகி இன்னொன்று. இப்படிப் பரவுவது ஈயடிச்சான் காபி போல பரவாமல் அங்கங்கே சில மாற்றங்களுடனும் பரவும். அதனால் புதிய உயிரினங்கள் உருவாகும். அவை டைனோசார் போல பெரிய சைஸில் வைரல் ஆனாலும் காலங்களைக் கடந்து தாக்குப்பிடிக்க முடியாமல் காணாமலும் போகும். ஆனால் பரிணாம வளர்ச்சியில் ஜீன்கள் மட்டுமே இப்படி இரட்டிப்பாகிப் பரவ அவசியமில்லை. எது வேண்டுமானாலும் சரியான சூழ்நிலையும் வாய்ப்பும் அமைந்தால் இரட்டிப்பாகி பரவும் என்றார் ரிச்சர்ட் டாக்கின்ஸ். இசை இப்படி பரவலாம், உடையணியும் விதங்கள் இப்படி பரவலாம், ஃபேக் நியூஸ் இப்படி பரவலாம், சித்தாந்தங்களும் கடவுளும் மதங்களும் கூட இப்படி பரவலாம். ஒரு காலத்திற்கு மேல் காணாமலும் போகலாம். பரிணாம வளர்ச்சி ஜீன்களுக்கு மட்டுமே உரித்தானவை அல்ல என்று விளக்க gene போன்றே உச்சரிப்புள்ள புதிய சொல் அவருக்குத் தேவைப்பட்டது. அதனால் meme என்ற புதிய சொல்லை உருவாக்கினார். Meme என்ற சொல்லே me-me என்று இரட்டிப்பாகிவருவது.

இதற்குள் செல்வதற்கு முன் அடுக்குத்தொடர், இரட்டைக்கிளவி பற்றி

ஒரு ரெஃப்ரெஷர் (புத்துணர்வாக்கம்?). ‘கூட்டம் கூட்டமாக’ வந்தார்கள். அந்த கூட்டத்தில் ‘இடித்து இடித்து’ நகர்ந்தார்கள். இவை அடுக்குத் தொடர்கள். ஒரே சொல் ஒரே அர்த்தத்தில் இரட்டிப்பாகிறது. இடித்து நகர்ந்தவர்கள் ‘படபட’வென விழுந்துவிட்டார்கள். ‘சடசட’வென ஆம்புலன்ஸ்கள் வந்தன. இங்கே பட, சட என்ற சொற்களுக்குத் தனியே அர்த்தம் கிடையாது. இவை இரட்டிப்பாகி வந்தால் அர்த்தம் கிடைக்கும். (இந்த இரட்டைக்கிளவி பற்றி தொல்காப்பியத்தில் தகவல் ஏதும் இல்லை. சங்க இலக்கியங்களிலும் இரட்டைக்கிளவி கிடையாது. இது தமிழுக்குள் இறக்குமதி செய்யப்பட்டது.)

ஒரு சொல் ஒரே அர்த்தத்தில் இரட்டிப்பானால் அடுக்குத்தொடர். அர்த்தமில்லாத ஒரு சொல் இரட்டிப்பாகி அந்த இரட்டிப்புக்கு அர்த்தம் கிடைப்பது இரட்டைக்கிளவி. இந்த இணைதல்களெல்லாம் ஓரினச் சேர்க்கை.

இந்த வரிசையில் மூன்றாவதாக இன்னொன்று உள்ளது. இது தொல்காப்பியத்தில் இருக்கிறது. வேறுபட்ட இரண்டு சொற்கள் ஒரே அர்த்தத்தில் இரட்டிப்பாவது. ‘உயர்ந்தோங்கிய’ மலை. உயர்தல்,

ஓங்குதல் என்ற இருவேறு சொற்களுக்கும் ‘ஏறக்குறைய’ ஒரே அர்த்தம்தான். ஆனாலும் ஆணும் பெண்ணும் இணைவது போல் ஓர் அற்புதம் நிகழ்கிறது. ஏறக்குறைய ஒரே ஜீன்கள். புதிய உயிர். இளங்கன்று, இளஞ்சிறுவன், பச்சிலை, நடு மய்யம் போன்ற அன்றாட உபயோகித்திலுள்ள பல சொற்கள் இந்த வகையைச் சேர்ந்தவை. யோசித்துப் பார்த்து ஏகப்பட்டவற்றை நீங்கள் பட்டியலிடலாம். இதன் நீட்சி but ஆனால், catch பிடித்தல் போன்று தமிழை வேற்று மொழிச் சொற்களுடன் திருமணம் செய்து வைப்பது. அடுக்குத்தொடர், இரட்டைக்கிளவி போல் இந்த மூன்றாவது வகை இரட்டிப்புக்கு (வேறுபட்ட இரண்டு சொற்கள் ஒரே அர்த்தத்தில் இரட்டிப்பாவது) ஏதாவது கவர்ச்சிகரமான பெயர் இருக்கிறதா?

இப்படி இரட்டிப்பாவதை ‘மீமிசை’ என்கிறார்கள் சங்கப் புலவர்கள்.

- அருள் மெர்வின் (02-12-2025)

5. வரலாறு என்பது கற்பிதம் - நூலாய்வு 2

— முனைவர் க. சுபாஷிணி

"வரலாறு என்பது கற்பிதம்" என ஏன் இந்த நூலுக்கு தலைப்பு வந்தது என என் மனதிற்குள் கேள்வி ஓடிக்கொண்டே இருந்தது. ஏன் இந்த நூலுக்கு இந்த பெயர் வைத்தீர்கள் என்று நேற்று நூலாசிரியர் தமிழறிஞர் பொ. வேல்சாமி அவர்களிடம் தொலைபேசியில் பேசிய போது கேட்டேன்.



தமிழ்நாட்டின் எந்த ஒரு செய்தியும் துல்லியமாக பதியப்படவில்லை.. காலக் கணக்கு சரியாக வரையறுக்கப்படவில்லை.. செய்திகள் மிகைப்படுத்தப்பட்டு அல்லது குறைவாகத்தான் பார்க்கப்பட்டு பதியப்பட்டுள்ளன என்ற கருத்தை ஒரு மணி நேர விளக்கமாக, சொல்லப்போனால் ஒரு சொற்பொழிவாக தெரிவித்தார். உரையாடலுக்கு இடையே ஏராளமான நூல்களின் பெயர்களையும் தமிழ் அறிஞர்களின் பெயர்களையும் குறிப்பிட்டார். அவற்றின் பெரும்பாலானவற்றை நான் இதுவரை கேள்விப் படவும் இல்லை. அப்படி என்றால் இன்றைய தமிழ் அறிஞர்கள் மேலோட்டமாக தெரிகின்ற சில நூல்களை மட்டுமே மீண்டும் மீண்டும் பேசிக் கொண்டிருக்கின்றோம் என்பதும் பல நூல்கள் பற்றியும் அதனை எழுதிய ஆசிரியர்கள் பற்றியும் நாம் எதையும் பேசுவதில்லை என்பதை மட்டும் தெளிவாக உணர்ந்து கொள்ள முடிந்தது.

சரி.. கட்டுரைகளை தொடர்வோம்...

நூலில் இடம்பெறும் **இரண்டாவது கட்டுரை**

இக்கட்டுரை **ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான சூளாமணியைப் பற்றி**, அதிலும் குறிப்பாக அதன் செய்யுள் இலக்கிய செழுமையையும் அதன் அச்சுப் பதிப்புப் பணியைப் பற்றியும் பேசுகின்றது.

ஐம்பெரும் காப்பியங்களும் ஐஞ்சிறு காப்பியங்களும் சமணர்களாலும் பௌத்தர்களாலும் படைக்கப்பட்டன. அவற்றுள் சூளாமணி 20 ஆம் நூற்றாண்டில் சமய சாதிய அரசியல் காரணங்களால் பின்னுக்கு தள்ளப்பட்டது என்கிறார் நூலாசிரியர். ஆயினும் தெ.போ. மீனாட்சி சுந்தரனார் போன்ற நடுநிலையான தமிழ் அறிஞர்களின் முயற்சியினால் சூளாமணி பற்றிய செய்திகள் இலக்கிய உலகில் வெளிவந்தன.

அவர் கூற்றுப்படி சூளாமணி ஆசிரியரின் இயற்கை வர்ணனை மனிதனோடு இயற்கையை ஒன்று சேர்க்கிறது. மரங்களையும் செடி கொடிகளையும் குகைகளையும் இயற்கை அரண்மனைகளையும் வருணித்து செய்யுள் பாடல்கள் எழுதப்பட்டுள்ளன. தமிழ் மொழியின் அழகை வெளிப்படுத்த கவிதைகள் நிறைந்த ஒரு காவியம் இது என்கிறார்.

சூளாமணியை 19ஆம் நூற்றாண்டில் பதிப்பித்தவர் ராவ் பகதூர் சி.வை தாமோதரன் பிள்ளை அவர்கள். இலங்கையைச் சேர்ந்த அவர் தமிழ்நாட்டிலும் பணியாற்றிக் கொண்டிருந்தார் என்பது தமிழ் பதிப்புப் பணிகள் பற்றிய வரலாற்றை அறிந்தவர்களுக்கு நன்கு தெரியும்.

பல்வேறு ஏட்டுச்சுவடிகளைத் தேடி எடுத்து அவற்றுள் சூளாமணி சுவடியின் பல பாட பேதங்களைப் பெற்று அவற்றை ஆய்வு செய்து முதன்முதலாக சூளாமணி 1889 ஆம் ஆண்டில் சி. வை. தாமோதரன் பிள்ளை அவர்களால் அச்சிடப்பட்டது.

அதற்கு நீண்ட காலங்களுக்குப் பிறகு 1954 ஆம் ஆண்டில் உவேசா நூலகம் இந்நூலை மேலும் உவேசா அவர்கள் கண்டெடுத்த சூளாமணி சுவடி மற்றும் ஏனைய சமண நூல்களையும் ஆய்வு செய்து இரண்டாவது முறையாக சூளாமணி காப்பியத்தை வெளியிட்டது. ஆயினும் மாணவர்கள் நூலின் பாடல்களை எளிதில் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் உரையும் உரை விளக்கங்களும் இந்த பதிப்பில் இடம் பெறவில்லை.

இதனை கருத்தில் கொண்டு சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் 1962 போ.வே

சோமசுந்தரனார், ராமசாமி புலவர் இருவரையும் கொண்டு பொழிப்புரையும் விளக்க உரையும் கதை சுருக்கமும் எழுதி இந்த நூலை வெளியிட்டனர்.

சூளாமணியின் சிறப்பை விவரிக்கும் நூலாசிரியர் பொ. வேல்சாமி அவர்கள், இன்றைய காலம் வரையில் சமண சமயம் சார்ந்த நூல்களுக்குச் சரியான கால வரையறை செய்யப்படவில்லை என்பதை சுட்டிக்காட்டுகின்றார். தமிழ்நாட்டு வரலாற்றில் சுமார் 1300 ஆண்டுகள் பல துறைகளில் செல்வாக்கு செலுத்திய இந்தக் காப்பியங்களின் தாக்கம் தமிழ் பண்பாட்டில் தன் முத்திரையை பதித்துக் கொண்டே உள்ளன. இந்திய மொழிகள் எவற்றிலும் காணப்படாத பல தன்மைகளை உள்ளடக்கி தமிழுக்கு பெருமைப்படுத்திய இலக்கியங்களாக வைத்திருக்கின்றன. இவை இளைஞர்களுக்கு உரிய முறையில் அறிமுகப்படுத்த வேண்டும் என்றும் வலியுறுத்துகின்றார்.

இறுதியில் மு. அருணாச்சலம் போன்ற ஆழ்ந்த தமிழ்ப் புலமை கொண்ட அறிஞர்களும் குண்டலகேசி நீலகேசி போன்ற சமண காப்பியங்களைப் பழித்துப் பேசும் வகையில் தனது இலக்கிய வரலாறு - 10ஆம் நூற்றாண்டு

நூலில் எழுதி இருப்பதைச் சுட்டிக்காட்டுகின்றார் .

பொதுவாகவே இரண்டு வகையான போக்குகள் கடைபிடிக்கப்படுகின்றன.

முதலாவது, சமண சமயம் சார்ந்த நூல்களைப் புறக்கணிப்பது.

இரண்டாவது, தொல்காப்பியம் திருக்குறள் சிலப்பதிகாரம் போன்ற சமண சமயம் சார்ந்த நூல்களை விதண்டாவாதத்தால் அச்சமயம் சார்ந்த நூல்கள் அல்ல என்று விவாதித்து குழப்பி விடுவது அல்லது மு. அருணாசலம் குறிப்பிடுவது போன்று மட்டரகமான நூல்கள் என்று சேற்றை வாரி இறைப்பது. இத்தகைய செயல்கள் தான் இருபதாம் நூற்றாண்டின் பெரும் பகுதியில் சமண இலக்கியங்களுக்கு நிகழ்ந்தன என்று குறிப்பிடுகின்றார்.

இது கவனிக்கப்பட வேண்டிய ஒரு கருத்து. களப்பிறர் காலம் இருண்ட காலம் என எப்படி 20 ஆம் நூற்றாண்டின் தமிழறிஞர்கள் சிலர் எழுதிவிட்டு களப்பிரர்களுக்கு ஒரு தவறான முத்திரையைப் பதித்தார்களோ அதே போல சமண இலக்கியங்களையும் சரியாக அதன் இலக்கிய ஆழத்தை

வெளிப்படுத்தும் வகையில் அல்லாமல் சரியான முறையில் அறிமுகப்படுத்தாத குறை நிகழ்ந்தது என்பதை ஆய்வுலகம் ஏற்றுக்கொண்டு அக்குறையை நிவர்த்திக்கும் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

சூளாமணி மீண்டும் ஆய்வாளர்கள் மட்டுமின்றி பொதுமக்களும் பள்ளி மாணவர்களும் கூட அறிந்து கொள்ளக் கூடிய வகையில் எளிய முறையில் மக்களுக்கு அறிமுகம் செய்யப்பட வேண்டும்.

தொடரும்..

- சுபாஷிணி (03-12-2025)

6. 6174 நாவல்

— அருள் மெர்வின்

“தலைவால் நேராகி தன்வாலே தலையாகி
தன்னிலே தான் கழிய தானேயாய்
நின்றிடுமே
நல்லார வட்டத்துக்குள் நாலே எண்ணாம்"

மேலே உள்ள செய்யுள் ஒரு கணிதச் செய்யுள். உரை கடைசியில்.



எழுதுவதில் எத்தனை பிழைகள் இருந்தாலும் எழுதி வைப்பது முக்கியம் என்று கருதுகிறேன். நாம் படித்தவற்றை, சிந்தித்தவற்றை, யோசித்தவற்றை எங்கேயாவது எழுதி வைக்காமல் வாழ்ந்தால் கஜினி அளவு கூட நம் வாழ்க்கை தேறாது. நேற்று காலை இட்லி சாப்பிட்டோம் என்பதை நாளை காலை மறுபடியும் இட்லி சாப்பிட்டவுடன்

மறந்துவிடுவோம். பத்து ஆண்டுகள் முன் நாம் என்ன வாசித்தோம், என்ன பேசினோம், என்னவாறு சிந்தித்தோம் என்ற ஹார்ட் டிஸ்கைத் தொலைத்துவிட்டு உணர்ச்சிகளை மட்டுமே நம்பி பெரும்பாலானோர் வாழ்ந்துவருகிறோம். "வாலறிவன் நற்றாள் தொழாஅர் எனின் கற்றதனால் ஆய பயனென்கொல்"? அறிவு நம் காலைச்சுற்றிக் கிடக்காவிட்டால் கற்றதனால் கிடைத்த பயன் என்ன? அறிவாக மாறாத, நினைவில் நிற்காத கல்வியால் பயன் என்ன?

12 ஆண்டுகளுக்கு முன் நான் வாசித்த ஒரு புத்தகம் பற்றி முகநூல் நினைவுபடுத்தியது. மற்றபடி அது சுத்தமாக மறந்துவிட்டது. அன்று எழுதியதைத் திரும்ப வாசித்ததும் புத்தகத்தை வாசித்தது பற்றிய நினைவுகள் கோமாவிலிருந்து மீட்டெடுக்கப்பட்டன. புத்தகத்தின் பெயர் '6174'. தமிழ் சைன்ஸ் ஃபிக்ஷன் நாவல். என் மாமா பரிந்துரைத்ததால் அந்த காலத்தில் ஃப்ளிப் கார்டில் ஆர்டர் செய்து வாங்கி வாசித்தேன். வாசித்துவிட்டு அவரிடம் குமரிக்கண்டம் பற்றி சண்டையும் போட நேர்ந்தது. 12 ஆண்டுகளுக்கு முன் இந்த புத்தகத்தை அலமாரியில் வைத்து எடுத்த புகைப்படமும் கிடைத்தது. இந்த

புகைப்படத்திலிருக்கும் எந்த புத்தகமும் இப்போது என்னிடம் இல்லை. வாசித்த நினைவுகள் மட்டும் மறுபடியும் இந்த படத்தை வாசித்தவுடன் வந்தன.

6174 நாவலின் களம் லெமூரியா கண்டம். அதனுடன் இன்டியானா ஜோன்ஸ், டாவின்சி கோட், ஷெர்லாக் ஹோல்ம்ஸ் வகையில் திரைக்கதை. கடல் கொண்ட லெமூரியா கண்டத்திலிருந்து பிழைத்த லெமூரிய மனிதன் காலவெளிகளைத் தாண்டி ரகசியத்தைப் பாதுகாப்பதாக கதை. கூடவே பிரமிடுகள், குவான்டம் அறிவியல், பரிமாணங்கள், ஹீரோ, வில்லன் எல்லாம் உண்டு. சராசரி ஆங்கில நாவல் ஒன்றைத் தமிழில் மொழிபெயர்த்து வாசித்தது போன்ற உணர்வைக் கொடுக்காமல் தடுக்க தமிழ் மொழி சம்பந்தப்பட்ட ட்விஸ்டுகளை நாவல் முழுவதும் வைத்திருப்பார் இந்த நாவலை எழுதியவர்.

இந்த நாவலில் வரும் விஷயங்களில் எதை நம்புவது எதை நம்பாமல் விடுவது என்பது கடினம். உதாரணமாக, மகாராஷ்டிரா மாநிலத்தில் ஆதிகாலத்தில் விண்கல் ஒன்று மோதியதில் மிகப்பெரிய பள்ளம் (crater) ஒன்று உண்டாகி அது இன்று ஏரியாக உள்ளது. இது உண்மை. அந்த ஏரிக்குள் ஒரு கோவில் மூழ்கியிருக்கிறது,

அந்த கோவிலில் தமிழ்க் கல்வெட்டு இருக்கிறது என்பதாக கதை சூடுபிடிக்கிறது.

இந்த நாவலின் 6174 என்ற தலைப்புக்குக் காரணம் கப்ரேகர் என்ற மகாராஷ்டிர மாநில பள்ளிக்கூட ஆசிரியர். பொழுதுபோக்காக பல கணிதவியல் ஆச்சரியங்களைக் கண்டுபிடித்தவர். 6174 என்பது கணிதத்தின் முட்டுச்சந்து. 6,1,7,4 என்ற எண்களை ஏறுவரிசையில் எழுதுங்கள். 1467. இறங்குவரிசையில் எழுதுங்கள். 7641. இறங்குவரிசை எண்ணிலிருந்து ஏறுவரிசை எண்ணைக் கழியுங்கள். 7641 - 1467 = 6174

எந்த நான்கு இலக்க எண்ணை எடுத்துக் கொண்டு இந்த முறையில் விளையாடினாலும் கடைசியில் 6174-இல் வந்து முட்டிநிற்போம். உதாரணமாக, இன்னும் சில நாட்களில் பரலோகம் போகும் 2025-ஆம் ஆண்டை எடுத்துக் கொள்ளுங்கள். 2,0,2,5 என்ற எண்களை ஏறுவரிசையில் எழுதுங்கள். 0225. இறங்குவரிசையில் எழுதுங்கள். 5220. இறங்குவரிசை எண்ணிலிருந்து ஏறுவரிசை எண்ணைக் கழியுங்கள். 5220 - 0225 = 4995. இப்போது 4995-ஐ இறங்கு, ஏறுவரிசைகளில் கழித்துத் தொடர்ந்து கொண்டிருங்கள். 9954 - 4599 = 5355; 5553 - 3555

= 1998; 9981 - 1899 = 8082; 8820 - 0288 = 8532; 8532 - 2358 = 6174. வந்துவிட்டதா? இனிமேல் முட்டுச் சந்துதான். 2026-ஆம் ஆண்டும் இதே முட்டுச்சந்தில்தான் வந்து நிற்கும். 9998-ஆம் ஆண்டு வரை ஜோசியமெல்லாம் யாரும் பார்க்க வேண்டிய அவசியமில்லை. எல்லாம் 6174-இல்தான் முடியும். இந்த எண்ணின் சுவாரசியத்தைக் கண்டுபிடித்த பள்ளி ஆசிரியரின் பெயரால் இதை 'கப்ரேகர் கான்ஸ்டன்ட்' என்றழைக்கிறார்கள். ஆனால், இதே எண் பழந்தமிழ்ச் செய்யுள் ஒன்றில் இருக்கிறது.

“தலைவால் நேராகி தன்வாலே தலையாகி
தன்னிலே தான் கழிய தானேயாய்
நின்றிடுமே
நல்லார வட்டத்துக்குள் நாலே எண்ணாம்"

இந்த செய்யுளின் பொருள் 6174. இந்த செய்யுள் வரும் பழந்தமிழ் இலக்கியம் எது? 6174 என்ற இந்த நாவல்.

- அருள் மெர்வின் (05-12-2025)

7. பாண்டியனும் பத்துப்பாட்டும் - 1

— முனைவர் ப. பாண்டியராஜா

இது கொஞ்சம் நீளமான கட்டுரை. இதனால் இது இரண்டு பகுதிகளாக வருகிறது.

முதற்பகுதி, நெடுநல்வாடையிலும், மதுரைக்காஞ்சியிலும் வரும் சில அடிகளைச் சேர்த்துப் பார்த்து, ஒரு புதுமையான விளக்கத்தைக் கொடுக்க முயல்கிறது.

பத்துப்பாட்டு நூல்களுள் 5, 6, 7 –ஆவதாக வருவன முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை ஆகிய நூல்கள். இவற்றுள் மதுரைக்காஞ்சி என்பது பத்துப்பாட்டு நூல்களுள் மிக அதிகமான அடிகளைக் கொண்டது. மொத்தம் 782 அடிகள்.
தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் என்ற பாண்டிய மன்னனின் வெற்றிச் சிறப்புகளை மாங்குடிமருதனார் பாடியது.

இதற்கு முந்தைய பாடலான முல்லைப்பாட்டைப் பாடியவர் காவிரிப்பூம்பட்டினத்துப் பொன் வாணிகனார் மகனார் நப்பூதனார். மொத்தம் 103 அடிகளைக் கொண்ட இந்த நூல்தான் பத்துப்பாட்டு நூல்களுள் மிகச் சிறியது. மொத்தம் 103 அடிகள்தான்.

மதுரைக்காஞ்சிக்கு அடுத்த பாடல் நெடுநல்வாடை. 188 அடிகளைக் கொண்ட இந்த நூல் மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் பாடியது.

இவற்றுள், மதுரைக்காஞ்சி பாண்டியன் நெடுஞ்செழியனைப் பெயர் சொல்லிப் புகழ்ந்து பாடுவது. எனவே இது புறப்பாடல் வகையைச் சேர்ந்தது.

முல்லைப்பாட்டில்
பாட்டுடைத்தலைவனைப் பற்றிய நேரடியான செய்திகள் இல்லை. ஆனால் அவன் போர்மேல் சென்றிருக்கும் ஓர் அரசன் என்று காட்டப்படுகிறான். அவன் வெற்றியுடன் திரும்ப வரும் நாளுக்காகக் காத்திருக்கும் தலைவி அரண்மனையில் இருக்கும் ஓர் அரசி என்று காட்டப்படுகிறாள். ஆய்வறிஞர்கள் இந்த அரசன் பாண்டியன் நெடுஞ்செழியனே என்று கூறுகிறார்கள்.

நெடுநல்வாடைத் தலைவனும் ஓர் அரசனே. இவனும் போர்மேல் சென்றிருக்கிறான். ஒரு நாள் நள்ளிரவில் அன்றைய போரில் காயம்பட்டிருக்கும் போர்வீர்ர்களைக் காண அவர்கள் தங்கியிருக்கும் பாசறைக்கே அரசன் செல்கிறான். அவனுக்கு வழிகாட்டியாக முன்னர் செல்லும் ஒரு வீரனின் கையிலிருக்கும் வேலின் தலையில் வேப்பம்பூ மாலை சூட்டப்பட்டிருப்பதாகப் புலவர் கூறுகிறார். வேம்பு பாண்டிய மன்னர்களுக்குரியது. எனவே இவன் பாண்டிய மன்னன் என்பது உறுதி. இவனும் மதுரைக்காஞ்சிப் பாண்டியன் நெடுஞ்செழியனே என்பது ஆய்வறிஞர்கள் கூற்று.

மதுரைக் காஞ்சியில் பாண்டிய மன்னனின் பல சிறப்புகள் கூறப்படும்போது, அவனது போர் வெற்றிகளும் குறிப்பிடப்படுகின்றன.

அரும் குழு மிளை குண்டு கிடங்கின்
உயர்ந்து ஓங்கிய நிரைப் புதவின்
நெடு மதில் நிரை ஞாயில்
அம்பு உமிழ் அயில் அருப்பம்
தண்டாது தலைச்சென்று

– மதுரைக்காஞ்சி 64 – 68

சேர்தற்கரிய அடர்ந்த காவல்காட்டையும்,
ஆழ்ந்த கிடங்கினையும்,
உயர்ந்து வளர்ந்த, வரிசையான
குறுவாயில்களைக்கொண்ட 65
நெடிய மதிலினையும், வரிசையான
ஞாயில்களையும்,
அம்பு விடுகின்ற, வேல் வீசுகின்ற
அரண்களையும்,
தடைப்படாமல் மேற்சென்று,

என்பது இதன் பொருள்.

அதுமட்டுமல்ல.

இரு பெரு வேந்தரொடு வேளிர் சாய
பொருது அவரைச் செரு வென்றும்
– *மதுரைக் 55, 56*

சேர, சோழ வேந்தர்களுடன் ஐந்து வேளிர்களும் சேர்ந்து இந்தப் பாண்டியனைத் தாக்கின போது , அந்த எழுவரையும் வென்ற நிகழ்ச்சியைக் கூறும் பகுதி இது.

இதன் பின்னர் இந்தப் பாண்டியன் பாண்டிய நாட்டை மட்டுமல்ல, தென்னகத்தையே ஆளும் சிறப்பினைப் பெற்றிருந்தான்.

இப்போது நெடுநல்வாடைக்கு வருவோம்.

இப்பாடல் ஒரு மலையுச்சியில் கூதிர்கால மேகங்கள் (வடகிழக்குப் பருவ மேகங்கள்) பொழியும் முதல் மழையுடன் தொடங்குகிறது. அதன் பின்னர் மலையை ஒட்டிய பகுதிகள், (வைகை) ஆற்றில் மீன் மேயும் பறவைகள், கழுகுத் தோப்புகள். (மதுரை) நகருக்கு வெளியே இருக்கும் காவற்காடு போன்றவற்றைத் தாண்டி 'மாடம் ஓங்கிய மல்லல் மூதூரை'க் காட்டுகிறது.

பின்னர் புறநகர்ப்பகுதில் குடியிருக்கும் யவனர்களின் பிற்பகல் களியாட்டங்கள் கூறப்படுகின்றன. பின்னர், பாடல் கோட்டையின் மேற்கு வாயிலில் 'நெல்லும் மலரும் தூவிக் கைதொழுது மாலை அயரும்' மங்கையரைக் காட்டுகிறது. பின்னர், இரவில் வீடுகளில் நடக்கும் ஆடல் பாடல் நிகழ்ச்சிகளைக் காட்டுகிறது.

இறுதியில் பாண்டியன் அரண்மனை வாயில் காட்டப்படுகிறது. பாண்டியன் அரண்மனையில் அப்போது இல்லை. (போருக்குச் சென்றிருக்கிறான்) எனவே அடுத்துள்ள அந்தப்புரம் காட்டப்படுகிறது. இங்கு ஒரு வேடிக்கை நடக்கிறது.

புலவர் அரண்மனையைப் பற்றிக் கூறாமல், அது எவ்வாறு கட்டப்பட்டது என்று கூறுகிறார்.

---------- ------ -------- மாதிரம்
விரி கதிர் பரப்பிய வியல் வாய் மண்டிலம்
இரு கோல் குறிநிலை வழுக்காது குடக்கு ஏர்பு
ஒரு திறம் சாரா அரைநாள் அமயத்து
நூல் அறி புலவர் நுண்ணிதின் கயிறு இட்டு
தேஎம் கொண்டு தெய்வம் நோக்கிப்
பெரும் பெயர் மன்னர்க்கு ஒப்ப மனை வகுத்து

– நெடுநல் 72 – 78

இதன் பொருள் –

திசைகள் (எல்லாவற்றிலும்)
விரிந்த கிரணங்களைப் பரப்பின அகன்ற
இடத்தையுடைய ஞாயிறு,
(நாட்டப்பட்ட) இரண்டு கோல்களின்
நிழல்கள் ஒன்றும்வகையில்,
(கிழக்கிலிருந்து) மேற்கே செல்வதற்காக,
ஒரு பக்கத்தைச் சாராத (உச்சியில்
இருக்கும்) நண்பகல் நேரத்தில், 75
(கட்டிடக்கலை) நூலை அறிந்த கலைஞர்
மிகச்சரியாக நூலை நேரே பிடித்து,

திசைகளைக் குறித்துக்கொண்டு,
தெய்வங்களை (ஏறிட்டுப்) பார்த்து(த்
தொழுது),
பெரும் புகழ்பெற்ற அரசர்க்குத்
தகுந்தவகையில் (அரண்)மனையின்
பாகங்களைப் பகுத்துக்கொண்டு

பாண்டியன் அரண்மனைக்கு அஸ்திவாரம் போடுவதற்காக, அரண்மனையின் பல பாகங்களைக் குறிக்கும் வகையில் நுட்பமாகக் கயிறு அடிக்கிறதைப் புலவர் கூறுகிறார். அதாவது, அரண்மனை புதிதாகக் கட்டப்படுவதைப் புலவர் கூறுகிறார். அப்படியென்றால் இதுவரை மன்னன் எங்கு குடியிருந்தான்? அவன் முன்னோர்கள் எங்கு குடியிருந்தார்கள்?

இதில் நாம் ஊன்றிக் கவனிக்க வேண்டியது, இப்பகுதியில் உள்ள கடைசி அடியினைத்தான்.

பெரும் பெயர் மன்னர்க்கு ஒப்ப மனை
வகுத்து

– நெடுநல் – 78

அதாவது, இதுவரை பாண்டியன், மதுரைப்பகுதிக்கு மட்டும் தான் அரசனாக இருந்திருக்கிறான். சேர, சோழ, வேளிர்களை வென்ற பின்னர் அவன்

தமிழகத்திற்கே பேரரசனாக ஆகிவிட்டான். அந்தப் பெரிய பெயருக்கேற்ற வகையில் இருக்கின்ற பழைய சிறிய அரண்மனையை இடித்துவிட்டு மிகப் பெரியதாகக் கட்டுகின்றான் என்பதையே புலவர் இவ்வாறு கூறுகிறார் என்பது புலனாகும்.

மதுரைக் காஞ்சியையும் நெடுநல்வாடையையும் சேர்த்துப் படித்தால்தான் இது நன்கு புலனாகும்.

அடுத்து மதுரைக்காஞ்சியையும், தாலமி (Ptolemy) யையும் சேர்த்துப் பார்க்கும் பகுதி – விரைவில் வரும்.

8. விருப்பமான வெப்பம்

— அருள் மெர்வின்

‘செல்வன்’ என்று பலருக்கு அவர்களது பெற்றோர் இட்ட பெயர் ஒரு சங்ககாலச் சொல். செல்வன் என்றால் எங்கேயாவது செல்பவரா, செல்வந்தரா, புதல்வனா, கல்யாணப் பத்திரிகைகளில் அச்சிடப்படுபவரா?

‘Dunkirk’ என்ற உலகப்போர் சம்பந்தப்பட்ட திரைப்படத்தை நீங்கள் பலமுறை பார்த்திருக்கலாம். ஒருமுறை பார்த்திருக்காவிட்டாலும் பரவாயில்லை. கடற்கரையில் நிகழும் ஒரு வார சம்பவம், கடலில் நிகழும் ஒரு நாள் சம்பவம், வானில் நிகழும் ஒரு மணிநேர சம்பவம் என்று மூன்று சம்பவங்களை ஒரே நேர்கோட்டில் இணைத்திருப்பார்கள். இதே போன்ற டெக்னிக்கை சங்க இலக்கியங்களிலும் உபயோகித்திருக்கிறார்கள்.

சூரியன் ஹெட்லைட் அளவு ஒளியுடன் கடலில் உதித்து உச்சந்தலையைப் பிளக்கும் ஒளியுடன் நடுவானை அடைய

ஆறு மணி நேரம் பிடிக்கும். குழந்தை பிறந்து தொட்டிலுக்குள் கிடந்து கையைக் காலை அசைத்து உடலை உருட்ட முயற்சித்து கடைசியில் அது தானாகவே ஓரிடத்திலிருந்து இன்னோர் இடம் தவழ்ந்து செல்ல ஆறு மாதம் பிடிக்கும். சூரியன் உச்சிக்கு வரும் ஆறுமணிநேரத்தையும் குழந்தை தவழ ஆரம்பிக்கும் ஆறுமாதத்தையும் பொருநராற்றுப்படையில் இணைத்திருப்பார் முடத்தாமக்கண்ணியார். பெயரைக் கேட்டதும் முரட்டு ஆசாமி என்று நினைத்துவிட வேண்டாம். இவர் ஒரு பெண் புலவர். முடவர் என்றும் நினைத்துவிட வேண்டாம். முடத்தாமக்கண்ணியார் என்றால் துப்பட்டா அணிந்தவர் என்று அர்த்தம். முடத்தாமக்கண்ணி = முடிச்சு போடப்படாத கண்ணி. அதாவது, இடது பக்கம் ஒரு முனை, வலது பக்கம் ஒரு முனை என்று கழுத்தில் தொங்கவிடப்படும் மாலை.

‘பவ்வம்’ என்றால் கடல் என்று ஓர் அர்த்தம் உண்டு. பவ்வம் என்று ஆரம்பித்து ‘பவ்வமீமிசை (கடல் மேலே) பகல் கதிர் பரப்பி...’ என்று ஒரு வரியை எழுதிவிட்டார் முடத்தாமக்கண்ணியார். அடுத்த வரிக்கு ‘பவ்வம்’-க்கு ரைமிங்காக சூரியனைக்

குறிக்கும் சொல் அவருக்குத் தேவைப்படுகிறது. ஆனால் அப்படி எந்த சொல்லும் தமிழில் கிட்டவில்லை. யோசிக்கிறார். தமிழால் முடியாதது ஒன்றும் இல்லை.

'வெம்மை' என்பது விருப்பம், வெப்பம் என்று இரட்டை அர்த்தம் கொண்ட தமிழ்ச் சொல். விருப்பம் வந்தால் உடல் சூடாகிவிடும். இதற்கு காரணம் நார்எபினெஃப்ரின் என்ற உடலில் சுரக்கும் ஹார்மோன். 'வெம்மை' வந்தவுடன் இது சுரந்து உடலை 'வெம்மை'யாக்கும். சூரியன் வெப்பமாக இருக்கும். ஆனாலும் அதை மனிதர்கள் விரும்பிதான் ஆக வேண்டும். 'வெம் சூரியன்' என்றால் விருப்பமான சூரியன் அல்லது வெப்பமான சூரியன் என்று இரண்டு அர்த்தங்களில் ஏதாவது ஒன்று வருகிறது. இரண்டு அர்த்தங்களும் வரவேண்டுமென்றால்? வெம்மை x 2 = 'வெவ்வெம்' சூரியன் என்று பவ்வம் என்ற சொல்லுக்கு இணைச் சொல்லை ரைமிங்காக உருவாக்கிவிட்டார் மு.க.யார். 'வெவ்வெஞ்சூரியன்' என்றால் விருப்பம் மற்றும் வெப்பம் தரும் சூரியன். மஞ்சூரியன் என்று யாராவது வாசித்துவிட்டு சிக்கன் மஞ்சூரியனைக் கண்டுபிடித்ததே சங்கத்தமிழர்கள்தான் என்று ரீல்ஸ் போட்டுவிட வேண்டாம்.

“பவ்வமீமிசை பகல் கதிர் பரப்பி
வெவ்வெஞ்செல்வன் விசும்பு படர்ந்து
ஆங்கு
பிறந்து தவழ் கற்ற...”

கடல் மேலே (பவ்வமீமிசை) பகல்
கதிர்களைப் பரப்பி
விருப்பமுடைய வெப்பம் தரும் சூரியன்
(வெவ்வெஞ்செல்வன்) வானத்தில் (விசும்பு)
படர்ந்தது போல
பிறந்து தவழக் கற்ற [குழந்தை]...

‘தவழ்’ என்ற சங்ககாலத் தமிழ்ச் சொல்லை இன்றும் உபயோகித்துவருகிறோம். மேலே உள்ள வரிகளில் தவழ்ந்தவர் கல்லணை கட்டிய கரிகால் சோழன். இந்த வரிகள் உண்மையிலேயே அவருடைய குழந்தைப் பருவத்தைக் குறிப்பிடுபவை. தந்தை இறந்துவிட்டதால் பிறக்கும் போதே மன்னனாகப் பிறந்தவர். சூரியன் உதித்து ஆறே மணிநேரத்தில் தன் முழு சக்தியையும் காண்பிப்பது போல பிறந்த வேகத்திலேயே பெரும்புகழை அடைந்தவர். சிறுவயதிலேயே இரண்டு பெரும் வேந்தர்களை ஒரே போரில் வென்றவர் (...இருபெரு வேந்தரும் ஒரு களத்து அவிய...). ஒரே போர்க்களத்தில் அவிந்த அந்த இரண்டு வேந்தர்கள்

சரத்குமார் நடித்த சேரன் பாண்டியன் என்பார்கள்.

கரிகால் சோழன் சிறுவனாக இருந்தாலும் இந்த இரண்டு வேந்தரையும் எப்படித் தோற்கடித்தார் என்பதைச் சொல்ல முடத்தாமக்கண்ணியார் டைனோசார் உவமைக்கு வருகிறார்.

"ஆளி நன் மான் அணங்கு உடை
குருளை..."

'குருளை' என்ற கடைசியிலுள்ள சொல்லுக்கு அர்த்தம் 'குட்டி'. இதில் எந்த சிக்கலும் இல்லை. 'ஆளி' என்ற சொல்லில் ஆரம்பிக்கிறது இந்த வரி. இது கோவில்களிலிருக்கும் யாளி என்கிறார்கள். கோவில்களிலிருக்கும் யாளி T. Rex வகையைச் சேர்ந்தது என்கிறார்கள். 'ஆளி நன் மான்' என்றால் யாளியிலிருந்து பரிணமித்த சிங்கம் என்றும் ஆளாளுக்குச் சொல்கிறார்கள். ஏதோ ஒரு நல்ல திடகாத்திரமான விலங்கு என்று இப்போதைக்கு வைத்துக் கொள்வோம். அடுத்த சொல் 'அணங்கு'. அணங்கு என்றால் தமிழணங்கே தமிழணங்கே என்ற பள்ளிக்கூட அசெம்ப்ளி பாட்டில் வரும் 'பெண் கடவுளே' என்ற அர்த்தத்தை எடுத்துக் கொள்ளலாம் என்றால் அதில் ஒரு சிக்கல் இருக்கிறது.

மாமன்னர் கரிகால் சோழனுக்கு வரும் உவமை இது. அவர் ஆணாயிற்றே. அதனால் 'அணங்கு' என்பதற்கு வேறு ஏதாவது அர்த்தத்தைக் கொடுத்தாக வேண்டும் என்று... அணங்கு ஒரு வருத்தும் தெய்வம், அணங்கு என்றால் 'வருத்துதல்' என்ற அர்த்ததைக் கொடுக்கிறார்கள். இந்த பாடலை எழுதியதே ஒரு பெண்தான். "ஆளி நன் மான் அணங்கு உடை குருளை..." என்றால் 'ஆளி நன் மான் அணங்கு' போன்ற அதன் குட்டி. இந்த குட்டி என்ன செய்தது?

"ஆளி நன் மான் அணங்கு உடை குருளை...
முலை கோள் விடாஅ மாத்திரை
ஞெரேரென
தலை கோள் வேட்டம் களிறு அட்டு..."

தாயின் மார்பை கெட்டியாகப் பிடித்துக்கொண்டு பால் குடித்துக் கொண்டிருந்த (முலை கோள் விடாஅ) அந்த குட்டி சட்டென்று பாய்ந்து (மாத்திரை ஞெரேரென*) தன் முதல் வேட்டையிலேயே (தலை கோள் வேட்டம்) ஒரு யானையைப் போட்டுத் தள்ளிவிட்டது (களிறு அட்டு)! டைனோசார் முட்டை போடும் விலங்கு. பாலூட்டி கிடையாது. அதனால் யாளி டைனோசராக இருந்திருக்க முடியாது. அல்லது சங்க இலக்கியத்தில் வரும் ஆளி யாளியாக

இருந்திருக்க முடியாது. அல்லது சங்க இலக்கியத்தில் வரும் ஆளி யாளியாக இருந்திருக்கலாம், ஆனால் டைனோசராக இருந்திருக்க முடியாது.

பொருநராற்றுப்படையை சாதாரணமாக ரசித்துக் கடந்துவிடக்கூடாது. காதில் இயர்ஃபோன் மாட்டிக் கொண்டு அதில் அனிருத் போன்றோரின் அதிரடி பாடல்களைப் போட்டுக்கொண்டு பொருநராற்றுப்படையில் கரிகால் சோழன் பற்றிவரும் அடிகளை வாசிக்க வேண்டும். ஒவ்வொரு அடிக்கும் மூளைக்குள் ஸ்பார்க் அடிக்கும். இருநூற்று சொச்சம் வரிகள் உள்ள பாடல்.

முடத்தாமக்கண்ணியார் கரிகால் சோழனை அவ்வளவு ரசித்து வரிகளை அதிரடியாக அமைத்து எழுதியிருப்பார். தான் எழுதியிருப்பது எல்லாம் கரிகாலனைப் பற்றிதான் என்று அவர் ரிவீல் செய்யும் வரி, "...கண்ஆர் கண்ணிக் கரிகால் வளவன்"! தன் பெயருடன் கரிகாலனின் பெயரையும் கோர்த்துவிட்டிருப்பார். யாராவது கேட்டால், "கண்ணுக்கு அழகான மாலையை அணிந்திருப்பவன் கரிகால் வளவன்", என்று அவரது ஆத்தி மாலையைப் பற்றிதானே சொன்னேன் என்பார். விருப்பமான வெப்பம் தரும்

சூரியன். வெவ்வெஞ்செல்வன். கரிகால் வளவன்.

(* 'மாத்திரை ஞெரேரென' பற்றி இன்னொரு பதிவில்.)

- அருள் மெர்வின் (09-12-2025)

9. "நம்பத் தகுந்த ஆய்வாளர்"

– முனைவர் சிவ இளங்கோ

மயிலை சீனி. வேங்கடசாமி, நிறுவனம் சாராத ஆய்வாளர். என்றாலும், நிறுவனம் சார்ந்த ஆராய்ச்சி நெறிமுறைகளுக்கு உட்பட்டே அவரது ஆய்வுகள் அமைந்தன. தமிழிலக்கியம் சார்ந்த வரலாற்றாய்வுகளில் அடிப்படைச் செல்நெறிகளை வகுத்தவர்களில் ஒருவராக மயிலை சீனி. வேங்கடசாமி கருதப்படுகிறார். தமிழரின் பண்டைய நாகரிகம் பற்றியும், பல்லவர்கால வரலாறு பற்றியும் அவர் எழுதிய நூல்கள் முன்னோடியாக விளங்குகின்றன.

தமிழிலக்கிய வரலாற்றாய்வின் தொடக்க காலத்தில் தமிழ் இலக்கியங்களிலும், தமிழ்ப் பண்பாட்டு வரலாற்றிலும் சமணம், பௌத்தம் ஆகியவற்றின் பங்களிப்பு உரிய மதிப்புடன் முன்வைக்கப் படவில்லை. சைவ, வைணவ நூல்களே மத நிறுவனங்களால் பேணப் பட்டமையால் சமண, பௌத்த நூல்கள் பெரும்பாலானவை அழிய

விடப்பட்டன. பல நூல்கள் பதிப்பிக்கப் படவுமில்லை. குறைவான சான்றுகள் இருந்தமையால், தமிழின் முதன்மையான அறநூல்கள் வெளியான களப்பிரர் காலம் இருண்ட காலமாக ஆய்வாளர்களால் கூறப்பட்டது.

அறநூல்களான திருக்குறள், நாலடியார் போன்றவற்றுக்கு சமண, பௌத்த மரபுடனான உறவும் மறுக்கப்பட்டது. மயிலை சீனி. வேங்கடசாமி வெவ்வேறு நூல்களிலுள்ள குறிப்புகளைத் தொகுத்துத் தமிழ் இலக்கியங்களிலும், பண்பாட்டிலும் சமண- பௌத்தச் சமயங்களின் பங்களிப்பைச் சான்றுகளுடன் நிறுவினார். அவருடைய முதன்மைப் பங்களிப்பாக இன்று அவை கருதப் படுகின்றன. (நன்றி: விக்கி)

மயிலை சீனி. வேங்கடசாமி அவர்களின் 125 ஆவது பிறந்தநாள் இன்று.

- முனைவர் சிவ இளங்கோ, புதுச்சேரி
(16-12-2025)

10. மாத்திரை ஞெரேரென (பாகம் - 1)

— அருள் மெர்வின்

அவரைச் சந்தித்து உரையாடுவது எப்போதுமே சுவாரசியமானது. அப்படி ஓர் உரையாடல் இரவு அது. டீவியில் ஏதோ இசை நிகழ்ச்சி ஒன்றைக் காட்டிக்கொண்டிருந்தார்கள். நிகழ்ச்சி முடிந்ததும் அவர் ரிமோட்டைத் தூக்கி டீவியில் எறிந்துவிட்டார்.

நான்: ஏன் ரிமோட் வேலை செய்யலையாக்கும்?

அவர்: டீவியில் போட்டு முடித்த பாட்டைக் கவனித்தாயா?

நான்: பாட்டுதானே? இந்த காலத்துல யாரும் சரியா பாட்டு போடுறதில்லன்னு அந்த காலத்திலேயே எங்க தாத்தாகூட சொல்லியிருக்கார். அவர் காலத்துல டீவியும் கிடையாது, டீவிக்கு ரிமோட்டும் கிடையாது. பாவம், எவ்ளோ மன அழுத்தத்துக்கு ஆளாயிருப்பார்?

அவர்: நான் ஒன்றைப் பேச ஆரம்பித்தால் நீ பாட்டுக்கு தாத்தா, பாட்டி என்றெல்லாம் போகிறாய். தொலைக்காட்சியில் இது போன்ற இசைநிகழ்ச்சிகள் முடிந்த பிறகு இன்னார் இன்னார் என்று கிரெடிட் போடுவதைக் கவனித்தாயா? புல்லாங்குழல் வாசித்தவர், கிட்டார் வாசித்தவர், வீணை வாசித்தவர், டிரம்ஸ் வாசித்தவர் என்று எல்லோரும் ஏதோ கன்னிமரா நூலகத்தில் உட்கார்ந்து புத்தகம் வாசித்தவர்கள் போல போடுகிறார்கள். அதனால்தான் கோபம் வந்தது.

நான்: வாசிச்சாங்கன்னு போடுறது நல்லாதானே இருக்கு. புல்லாங்குழலை ஊதியவர், கிட்டார் கம்பியைச் சுண்டியிழுத்தவர், வீணைக் கம்பியைப் பிடித்து இழுத்தவர், டிரம்ஸை அடித்தவர்... இப்படில்லாமா க்ரெடிட் போட முடியும்?

அவர்: ஒவ்வொரு வாசிப்பிற்கும் தமிழில் ஒவ்வொரு பெயர் இருக்கிறது. குழல் அகவ வேண்டும். யாழ் போன்ற கம்பிக் கருவிகள் முரல வேண்டும். முழவு அதிர வேண்டும். முரசு இயம்ப வேண்டும். சந்தேகம் இருந்தால் சங்கம்பீடியாவை ஃபோனில் திறந்து பட்டினப்பாலை 156-ஆவது வரியை வாசி. "குழல் அகவ யாழ் முரல..." என்று

தொடரும். எத்தனைச் சொற்றொடர்களை இழந்திருக்கிறோம்.

நான்: வெயிட். குழல், யாழ்... வேற எங்கேயோ இதைக் கேட்டிருக்கேனே! எஸ்... "குழல் இனிது யாழ் இனிது என்பதம் மக்கள் மழலைச்சொல் கேளாதவர்". அஞ்சாங்கிளாஸ் டீச்சர் சொல்லிக் கொடுத்த திருக்குறள். எங்க அப்பா அம்மாக்களுக்குச் சொல்லித்தர வேண்டிய குறளை எங்களுக்குச் சொல்லிக் கொடுத்தாங்க. ஆனா நான் ஒண்ணு சொல்லணும். எங்க ஊர்ப்பக்கம் பிள்ளைகளை இன்னிவரை மக்களேன்னுதான் கூப்பிடுவோம். ஃபிரண்டஸை கூட 'மக்களே', 'மக்கா' அப்படீன்னுதான் கூப்பிடுவோம். பழந்தமிழ் வார்த்தைகள் வாழ்றதே...

அவர்: இந்த குழல், யாழ் பற்றி இளங்கோவடிகள்தான் அதிகம் பேசியிருக்கிறார். சிலப்பதிகாரத்தில் கோவலனும் கண்ணகியும் தனிக்குடித்தனம் சென்றவுடன் அவன் கண்ணகியைப் பார்த்து எப்படி வர்ணித்தான்? படித்திருக்கிறாயா? பத்தாம் வகுப்பு ஆசிரியர் சொல்லித்தந்தது நினைவிருக்கிறதா?

நான்: ‘மாசறு பொன்னே, வலம்புரி முத்தே’ன்னு சினிமாப் பாட்டுல எல்லாம் வந்திருக்கே. எப்படி மறக்கும்?

அவர்: மாசறு பொன்னேவுக்கெல்லாம் வரும் முன், “குழலும் யாழும் அமிழ்தும் குழைத்த நின் மழலைக் கிளவி” என்கிறான் கோவலன். அதாவது கண்ணகியின் மழலைப் பேச்சு குழலும் யாழும் அமிழ்தும் குழைத்தது போல் இருக்கிறது என்று ஒப்பிடுகிறார் இளங்கோவடிகள்.

நான்: திருவள்ளுவருக்கும் இளங்கோவடிகளுக்கும் ஏதாவது வாய்க்காத் தகறாறு இருந்திருக்குமோ?

அவர்: போய் அந்த ரிமோட்டை எடுத்துக் கொண்டு வா. மாற்றி எறிந்து விட்டேன்.

நான்: பொறுமை. பொறுமை. நானும் இதெல்லாம் வாசிச்சிருக்கேன். இளங்கோ என்னடான்னா கண்ணகியின் மழலைப் பேச்சை குழலுக்கும் யாழுக்கும் ஒப்பிட்டுச் சொல்றார். வள்ளுவர் என்னடான்னா மழலைப் பேச்சை முன்னப் பின்னக் கேட்டிருக்கிறீரா, மழலைப் பேச்சை குழல், யாழ்ன்னு சொல்லிகிட்டு... அப்படீன்றார். வள்ளுவருக்கு குழந்தைகளை அவ்ளோ

பிடிக்குமா, அல்லது பாட்டு, மியூசிக்கெல்லாம் பிடிக்காதா?

அவர்: இதை விவாதிக்கும் அளவுக்கு உனக்கும் எனக்கும் தமிழ் அறிவு போதாது. இதில் நீ கவனிக்க வேண்டியது வேறு ஒன்று. 'குழல் அகவ யாழ் முரல' என்ற பட்டினப்பாலைத் தொடர், 'குழலும் யாழும்' என்ற சிலப்பதிகாரத் தொடர், 'குழல் இனிது யாழ் இனிது' என்ற வள்ளுவரின் தொடர் போன்ற சொற்றொடர்களின் ஒற்றுமையைக் கவனித்தாயா? முதலில் குழல், அப்புறம் யாழ்.

நான்: ஒருவேளை அந்த கால இசைநிகழ்ச்சிகள்ல முதல்ல பீப்பியை ஊத ஆரம்பிச்சு அப்புறம் மெதுவா யாழை வாசிக்க... சாரி... யாழை முரல வச்சிருப்பாங்களா இருக்கும். ஏஆர் ரகுமான் கூட பம்பாய் பட தீம் மியூசிக்கை புல்லாங்குழல்ல ஆரம்பிச்சு மெதுவா டெவலப் செய்வார்.

அவர்: அப்படி நீ நினைத்தால் இதில் ஒரு திருப்பம் இருக்கிறது. சிலப்பதிகாரத்தில் அறங்கேற்று காதையில் ஓர் இசை ஆசிரியன் பெரிய இசை நிகழ்ச்சி ஒன்றை எப்படி ஆரம்பித்தது நடத்தினான் என்று ஒரு பெரிய விவரம் இருக்கிறது. 'குழலும்

யாழும்’ என்று கண்ணகியின் மழலையை வர்ணித்த அதே இளங்கோவடிகள் அறங்கேற்று காதையில் இசை நிகழ்ச்சி பற்றி எழுதும் போது ‘யாழும் குழலும்’ என்று மாற்றியிருக்கிறார்.

நான்: ‘பாலும் தேனும்’னு சொல்றோம். ‘தேனும் பாலும்’னு சொல்றோம். எல்லாம் ஒண்ணுதானே?

அவர்: ஒன்றில்லை. பாலும் தேனும் என்றால் பாலில் தேனைக் கலப்பது. தேனும் பாலும் என்றால் தேனில் பாலைக் கலப்பது. இதே போலதான் இசையும். ஒலிகளின் கோர்வை. இங்கே தமிழும் ஒலியும் இசைக் கருவிகளும் வேறுவேறல்ல.

நான்: நீங்க வேறல்லன்னு சொல்றது எனிக்கிப் புரியல்ல.

அவர்: ஆழமாகச் செல்லச் செல்லப் புரியும். அரங்கேற்று காதையில் இசை நிகழ்ச்சி ஆரம்பிக்கும் வரிகள், “யாழும் குழலும் சீரும் மிடறும் தாழ்குரல் தண்ணுமை...” அதாவது, யாழில் ஆரம்பித்து, அடுத்து குழல், அடுத்து தாளக் கருவிகள், அடுத்து மிடறு, அடுத்து மெதுவாகத் தாழ்குரலில் தோல் கருவிகள்... இந்த மாதிரி ஆரம்பிக்கும் ஒரு

சினிமாப்பாட்டைப் போட்டுக் காட்டு பார்க்கலாம்.

நான்: அதெல்லாம் போட்டுக் காட்டலாம். எங்க ஆள் பாட்டு கண்டிப்பா இருக்கும். ஆனா அதுக்கு 'மிடறு'ன்னா என்னன்னு நீங்க சொல்லணுமே?

அவர்: மிடறு பற்றி ஆரம்பித்தால் இன்றைய இரவு முடிந்துவிடும். அது மனிதர்கள் எழுப்பும் இசை.

நான்: சரிதான்... இன்னைக்கு இரவு முடியாது. ஏஐ வரும் வரை எல்லா இசையும் மனிதர்கள் எழுப்புறதுதானே?

அவர்: நான் சொன்னதை நீ உள்வாங்கவில்லை. மனிதர்கள் தங்கள் உடலால் எழுப்பும் இசை.

நான்: அட அக்ஷய் குமாரே! பாடுறதுன்னு சொல்ல வேண்டியதுதானே? பாகவதரிலிருந்து அனிருத் வரை எத்தன பேர் தங்கள் சொந்தக் குரல்ல மிடற்றியிருக்காங்க!

அவர்: மிடற்றுதலை வெறுமனே வாயால் பாடுவது என்று சுருக்கிவிட முடியாது. இதைப் புரிந்து கொள்ள நிலம், நீர், நெருப்பு, காற்று, வானம் என்ற ஐந்து

பூதங்களுக்குள்ளும் செல்ல வேண்டும். அதனால்தான் இரவு முடிந்துவிடும் என்று சொன்னேன்.

நான்: பரவாயில்ல. சொல்லுங்க. இத வச்சு நாளைக்கு ஒரு போஸ்ட் போட வசதியா இருக்கும்.

(தொடரும்)

- அருள் மெர்வின் (17-12-2025)

11. மாத்திரை ஞெரேரென (பாகம் - 2)

— அருள் மெர்வின்

ஐவகை பூதங்கள் என்று படித்திருப்போம். நிலம், நீர், நெருப்பு, காற்று, வானம். இந்த ஐந்தும் நம் உடலில் இருக்கின்றன. நிலம் நம் உடல். நீர் நம் வாய் (எச்சில்). நெருப்பு (ஒளி) நம் கண். காற்று நம் மூக்கு. வானம் நம் காது/செவி. ஐம்பூதங்களையும் ஐம்பொறிகளுடன் இணைத்து அவற்றை ஒலி, ஒளி, சுவை, வாசனை, உணர்ச்சி என்ற ஐம்புலன்களுடன் இணைத்துப் பார்க்கும் இந்த ஆச்சரியத்தை சிலப்பதிகாரத்தில் அறங்கேற்று காதை உரையில் அடியார்க்கு நல்லார் அரங்கேற்றுகிறார். தமிழில் ஒலி எழுப்ப வாயும் மூக்கும் தேவை. ஒலி என்றால் ஒலிதானே, அது என்ன தமிழ் ஒலி?

வீட்டிலிருந்து பைக்கில் சட்டெனச் சென்றான், சர்ரெனச் சென்றான், விர்ரென்று சென்றான், ஆம்புலன்ஸில் ஒய்ங்ஒய்ங்கென திரும்ப வந்தான் - இது போலவெல்லாம் சங்ககாலத்தில்

சர்விர்ரென்று வார்த்தைகளை உபயோகித்திருக்கிறார்களா?

நாமெல்லாம் தமிழில் பேச எழுத காரணம் தமிழ் பேசும் பெற்றோருக்கோ, அல்லது தமிழ் பேசுபவர்கள் சுற்றியிருக்கும் இடத்திலோ பிறந்திருப்பதுதான் அடிப்படைக் காரணமாக இருக்க முடியும். இந்த இரண்டு காரணங்கள் இல்லையென்றால் உலகில் ஏன் தமிழைத் தவிர வேறு பல மொழிகள் பேசுகிறார்கள்?! அன்றாட வாழ்க்கையில் தமிழில் பேச, எழுத, அதில் ஸ்பெல்லிங் மிஸ்டேக் போட யார் அனுமதியும் தேவையில்லை. நாளையிலிருந்து தமிழில் பேசவோ எழுதவோ வேண்டுமென்றால் ஒரு ஃபார்மை நிரப்பிக் கொடுத்து உரிமம் வாங்க வேண்டும் என்றால்...?

தமிழ் மொழியைக் கையாளத் தெரிவது வாகனம் ஓட்டத் தெரிவது என்று ஓர் ஒப்பீடை (analogy) எடுத்துக்கொள்வோம். நாம் பேசும் எழுதும் தமிழ் உரிமம் இல்லாமல் வாகனம் ஓட்டும் தமிழ். வீட்டில் கார் இருந்தது, பைக் இருந்தது, அதனால் வாகனம் ஓட்டத்தெரியும் என்ற ஒரே அடிப்படை உரிமையை வைத்துக் கொண்டு ஓட்டிக் கொண்டிருக்கிறோம். கால்கள் இருக்கின்றன... என்று லாரிக்கு குறுக்கே நடக்க முடியாது. தமிழை

உபயோகிப்பதற்கான உரிமம் "யாப்பு". ஒரு வழிப்பாதையில் எப்படி ஓட்ட வேண்டும், இடது பக்கம் எப்படி ஓட்ட வேண்டும், எங்கே வலது பக்கமும் ஓட்டலாம், எந்த லேனில் எந்த வேகத்தில் எந்த வாகனத்தை ஓட்ட வேண்டும், எங்கே வேகத்தைக் குறைக்க வேண்டும், எங்கே முந்தக்கூடாது, முன்னால் ஒரு வாகனம் சென்றால் எவ்வளவு தூரத்தில் பின்னால் செல்ல வேண்டும், நூற்றுக்கும் மேற்பட்ட சாலைக்குறியீடுகளுக்கு என்ன அர்த்தம் என்றெல்லாம் தெரிந்து வாகனம் ஓட்டினால் வாகனத்துக்கும் நல்லது, வாகனம் ஓட்டுபவருக்கும் நல்லது, வாகனங்கள் ஓட்டுபவர்கள் வாழும் நிலத்துக்கும் நல்லது.

'கண்ணீரில்லாமல்...' என்ற தலைப்பில் உயிர்மை பதிப்பகம் 2008-ஆம் ஆண்டில் வெளியிட்ட புத்தகம் ஒன்று கைவசம் இருக்கிறது. சுஜாதா மறைவுக்குப்பின் உயிர்மை இதழில் அவர் எழுதிய சில கட்டுரைகளின் தொகுப்பைப் புத்தகமாக வெளியிட்டிருந்தார்கள். அதில் முதல் கட்டுரை கண்ணீர் சிந்தாமல் யாப்பிலக்கணத்தைக் கற்றுக்கொள்வது பற்றியது. பெரிய கட்டுரைதான் என்றாலும்... இந்த கட்டுரையை மட்டும் வாசித்துவிட்டு யாரும் யாப்பு லைசன்ஸ் வாங்கிவிட முடியாது என்றாலும்... இது ஒரு

குறுக்குவழி அறிமுகம். இதை அவரே சொல்கிறார், "தமிழ்ப் பண்டிதர்களிடம் போனால்... 'எட்டடித்தரவு கொச்சக்கலிப்பா' போன்ற சொற்கள் எல்லாம் கனவில் வந்து பயமுறுத்தும். அதனால் சிறிய எளிய குறுக்கு வழிகளைக் கூறுகிறேன்". அந்த குறுக்குவழிகளைப் புத்தகக் கண்காட்சிகள் சென்று புத்தகத்தை வாங்கி படித்துத் தெரிந்து கொள்ளுங்கள். இப்போது பொருநராற்றுப்படை பற்றிய சென்ற பதிவு தொடர்கிறது.

"முலை கோள் விடாஅ 'மாத்திரை
ஞெரேரென'
தலை கோள் வேட்டம் களிறு அட்டு..."

தாயின் மார்பைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு பால் குடித்துக் கொண்டிருந்த (முலை கோள் விடாஅ) அந்த குட்டி சட்டென்று பாய்ந்து (மாத்திரை ஞெரேரென) தன் முதல் வேட்டையிலேயே (தலை கோள் வேட்டம்) ஒரு யானையைப் போட்டுத் தள்ளிவிட்டது (களிறு அட்டு)!

'மாத்திரை ஞெரேரென' என்ற சொற்றொடர் ஆச்சரியமானது. ஞெரேரென என்ற சொல்லுக்கு டிக்ஷ்னரியில் போடும் அளவுக்கு எந்த

அர்த்தமும் இருந்த மாதிரி தெரியவில்லை. சட்டென, சர்ரென, விர்ரென போன்ற ஒரு சொற்றொடர். சங்க இலக்கியத்தில் உபயோகித்திருக்கிறார்கள். சும்மா உபயோகித்திருக்க மாட்டார்கள். ஞெரேரென பைக்கில் சென்றான் என்பதில் ஓர் ஒலியியல் தந்திரம் இருக்கிறது. கசடதபற யரலவழள என்ற வல்லின இடையின எழுத்துகளை மூக்கைப் பொத்திக் கொண்டு ஒலியெழுப்பாமல் உச்சரித்துப் பாருங்கள். தொண்டையிலிருந்து வாய் வழியாகக் காற்றைச் செலுத்தி இந்த எழுத்துகளை உச்சரித்துவிடலாம். இதே மாதிரி ங,ஞ,ண,ந,ம,ன என்ற மெல்லின எழுத்துகளை மூக்கைப் பொத்திக் கொண்டு ஒலியெழுப்பாமல் உச்சரித்துப் பாருங்கள். மூச்சு முட்டுமேயொழிய உச்சரிக்க முடியாது. எல்லாம் க க க ட ட ட என்று வாய்க்குள் முட்டிக்கொண்டிருக்கும். மூக்கு மற்றும் வாய் என்ற இரு துவாரங்களையும் திறந்து காற்றை ஃப்ரீயாக வெளியே அனுப்பினால்தான் மெல்லினங்களை உச்சரிக்க முடியும். ஞெரேரென-வை மூக்கைப் பொத்தி உச்சரித்தால் கெரேரென இருக்கும். மெல்லினம் என்பது வல்லிய இனம்.

மூச்சுப் பயிற்சி கற்றுக் கொடுக்கிறேன் என்று ஏப்பம் விடக் கற்றுக் கொடுப்பவர்களுக்கு ஜீபே செய்து ஏமாறாமல் வல்லின மெல்லின இடையின எழுத்துகளை ஒரு நாளைக்கு மூன்று முறை மூச்சு விட்டு உச்சரித்தாலே மூச்சுப் பயிற்சியின் எல்லாவிதமான பலன்களும் கிட்டும். சங்க இலக்கியங்களில் நாம் இன்னும் ஆழமாக அனுபவிக்காதது அவற்றின் ஒலியமைப்பு. நம் ஆராய்ச்சிகளெல்லாம் பெரும்பாலும் சங்க இலக்கியச் சொற்களின் சொற்றோடர்களின் அர்த்தங்களைச் சுற்றியே அமைந்திருக்கின்றன. 'ஞெரேரென' என்ற சொல்லுக்கு முன்னால் இன்னோரு சொல் வருகிறது. மாத்திரை. 'மாத்திரை ஞெரேரென'!

யாப்பு புரிய அடிப்படை ஒலிகளுக்கிடையேயான வித்தியாசங்களைப் புரிதல் அவசியம். ஒலிகளிலிருந்து குறில், நெடில். குறில், நெடிலிலிருந்து நேர்நேர் தேமா, நிரைநேர் புளிமா. இப்படி லேயர் லேயராகத் தொடர்வது. தமிழில் எவ்வளவு நேரம் ஓர் எழுத்து ஒலிக்கப்பட வேண்டும் என்பதற்கான அளவீடு மாத்திரை. க என்றால் ஒரு மாத்திரை. கா என்றால் இரண்டு மாத்திரை. க் என்றால் அரை மாத்திரை. சுஜாதாவை மேலே கோர்த்து

விடக் காரணம் மாத்திரைக்கு அவர் தன் யாப்பிலக்கணக் கட்டுரையில் கொடுத்திருந்த சுவாரசியமான வரையறை. ஒருமுறை வாசித்துவிட்டால் யாரும் மறக்க முடியாது.

“குருவிக் கீச்சு, தீக்குச்சி கிழிப்பது ஒரு மாத்திரை. காகம் கரைவது இரண்டு மாத்திரை. ஒரு ஸ்விட்ச் போடும் சப்தம் அரை மாத்திரை. குழந்தை பன்னிரண்டு மணிக்கு அழுவது பன்னிரண்டு மாத்திரை.”

இவை தவிர பீபி, டயாபடீஸ் வந்தபின் நாம் சாப்பிடுவது போல தமிழில் மூன்று மாத்திரை, நான்கு மாத்திரை அளவுள்ள ஒலிகளெல்லாம் உள்ளன. கால் மாத்திரை கூட உள்ளது.

மாத்திரை என்பதற்குப் பலவித அர்த்தங்கள் உள்ளன. மலையாளப் படங்களில் ‘மாத்திரம்’ என்ற சொல்லை அடிக்கடி கடந்திருப்போம். சங்க இலக்கிய மாத்திரைக்கு இந்த மலையாள அர்த்தமும் உள்ளது. கோப்பெருஞ்சோழனும் பிசிராந்தையாரும் ஒருவரை ஒருவர் பார்க்காமல் காதல் கோட்டை போல நட்பிலிருந்ததாகப் பள்ளிக்கூடத்தில் படித்திருப்போம். இந்த பள்ளிக்கூடக்

கதைக்குக் காரணமான வரி, "கேட்டல் 'மாத்திரை' அல்லது யாவதும் காண்டல் இல்லாது" - ஒருவர் ஒருவரைப் பற்றிக் கேட்டு மாத்திரம் இருக்கிறோம், ஆனால் கண்டதில்லை - கோப்பெருஞ்சோழன் பிசிராந்தையார் பற்றி இப்படி புறநானூற்றில் (216) எழுதியிருக்கிறார். வடக்கிருந்து மரணிக்கும் போதும் கவிதை எழுதியிருக்கிறார்.

மாத்திரைக்கான பல அர்த்தங்களுள் ஒன்றுதான் ஒலியளவைக் குறிக்கும் அர்த்தம். அதிலும் சில குழப்பங்கள் உள்ளன. சிலப்பதிகாரத்தில் ஒலி நுணுக்கங்களெல்லாம் வரும் பகுதி அரங்கேற்று காதை. சாதாரணமாகவே ஒன்றும் புரியாது. அதற்கு அடியார்க்குநல்லார் எழுதிய உரையில், "மாத்திரையாவது: இரண்டரை நாழிகையை 'எட்டுக் கூறிட்டு' ஒரு கூறென்றறிக" என்கிறார். இப்போது நாழிகை என்றால் என்னவென்று தெரியவேண்டும். நாழியாயிடுதே என்பார்கள். நாழிகை என்றால் 24 நிமிடம் என்கிறார்கள். இரண்டரை நாழிகள் என்றால் 24 x 2.5 = 60 நிமிடங்கள். அதாவது ஒரு மணி நேரம். ஓரை. Hour. இரண்டரை நாழிகையை 'எட்டுக் கூறிட்டு' அதில் ஒரு கூறு 'மாத்திரை' என்கிறார். 60 / 8 = 7.5 நிமிடங்கள்? 'க' 'ச' 'ட' ஒவ்வொன்றும் ஒரு

மாத்திரை என்றால் 'கற்க கசடற...' திருக்குறளை வாசித்து முடிக்க இரண்டரை மணிநேரம் ஆகும். சிலப்பதிகாரத்தை உவேசா அச்சடித்தபோது கிடைத்த இன்னோர் ஓலைச்சுவடியில் "மாத்திரையாவது: இரண்டரை நாழிகையை 'இருபத்தெட்டுக் கூறிட்டு' ஒரு கூறென்றறிக" என்பதாக உரைபேதம் இருந்திருக்கிறது. 60 / 28 = 2.143 நிமிடங்கள். இப்படிப் பார்த்தாலும் 'கற்க கசடற...' வாசிக்க அரை மணிநேரம் ஆகும்.

"இமைத்தோர் விழித்த மாத்திரை
ஞெரேரென
குணக்கு எழு திங்கள் கனை இருள்
அகற்ற"

மேலே உள்ளவை இன்னொரு புறநானூற்றுப் பாடல் (376) வரிகள். "கண் இமைத்து விழித்த மாத்திரம் ஞெரேரென கிழக்கே (குணக்கு) உதித்த நிலா கடும் இருளை அகற்ற..."

இங்கே மாத்திரையை மலையள 'மாத்திரம்' என்று எடுத்துக்கொள்ளலாம். கண்ணை மூடித் திறந்த மாத்திரத்தில் நிலா உதித்துவிட்டது. அல்லது, கண் இமைக்கும் நேரம் ஒரு மாத்திரை என்பதாக எடுத்துக் கொள்ளலாம். தொல்காப்பியரும் இதையேதான்

சொல்கிறார். அப்படியானால், தமிழில் இரண்டு வகை மாத்திரைகளா?

(தொடரும்)

- அருள் மெர்வின் (18-12-2025)

12. "அண்ணாச்சி - தெக்க வாழும் ஒரு மனிதனின் கதை" - நூல் விமர்சனம்

— ஆலடி எழில்வாணன்

பொதுவாகப் புனைவுக் கதைகளை நான் அதிகம் வாசிப்பது இல்லை. எனக்குத் தெரிந்த நண்பர்களோ அல்லது எழுத்தாளர்களோ என்றால் அவர்களுக்காக வாசிப்பேன். 2010 - 2014 நமது ஐன்ஸ்டீன் பொறியியல் கல்லூரியில் பயின்ற நட்சத்திர மாணவி ராஜலட்சுமி பரமசிவன் தனது முதல் படைப்பான, "அண்ணாச்சி" என்ற கதை நூலை எழுதியுள்ளார். 'சார் எனது முதல் நூலை வாசித்து நீங்கள் விமர்சனம் எழுத வேண்டும்' என அன்புக் கட்டளை இட்டார், "அன்புக்கும் உண்டோ அடைக்குந்தாழ்" என்ற குறளுக்கேற்ப, நானும் இரண்டே நாட்களில் சுமார் 90 பக்கங்கள் உடைய கதையை முழுமையாக வாசித்து முடித்தேன்.



தற்போது அமெரிக்காவில் வசிக்கும் ராஜலட்சுமி, தனது ஊரின் நினைவை, பிரிவை, ஏக்கத்தை மற்றும் தான் வாழ்ந்த சூழலை இந்தக் கதையின் வழியாக அழகாக எழுதியுள்ளார். நெல்லை மாவட்டத்தில் உள்ள முதுகுளம் என்ற ஒரு சாதாரண கிராமம், அங்குள்ள நீர்நிலை, பள்ளி, கோவில், தேவாலயம் மற்றும் உடல் உழைப்பை வாழ்வாதாரமாகக் கொண்டு வாழும் இருதரப்பு மக்கள் என்ற சூழலைத் தனது எழுத்தால் ஓர் அழகிய ஓவியம்

போல் நம் கண் முன்னே வரைகிறார். எழுதுகோலைத் தூரிகையாகக் கையாளலாம் என்பதை இதன் முதுகுல கிராமம் நமக்கு உணர்த்துகிறது.

அண்ணாச்சி, பாட்டி, கிராமத்து இளைஞர்கள், மாணவர்கள், பூசாரி, ஊர் பெரியவர்கள், உறவுகள், முரட்டு குணம் கொண்ட நபர்கள் என வெள்ளந்தியான வெள்ளை உள்ளங்களைத் தனது கதாபாத்திரங்களாக, அழகாக இந்தக் கதையில் கட்டமைக்கிறார். கதாபாத்திரங்களின் பெயரையும், அவர்தம் குணாதிசயங்களையும் வாசிக்கும்போது நமக்கு தெரிந்த சந்தித்த கிராமத்து மனிதர்களோடு ஒப்பிட்டுப் பார்த்து மகிழ்வோம்.

வேறு ஊரைச் சேர்ந்த அண்ணாச்சி முதுகுளத்துக்கு தனிநபராக வந்து குடியேறி ஊர் மக்களின் நன்மதிப்பைப் பெற்று எளிமையாக வாழ்கிறார். அந்நேரத்தில் இரு சமூகங்களுக்கும் இடையே வரும் பிரச்சினையை எப்படி அணுகுவது, எப்படித் தீர்வு காண்பது என்று சிந்தித்து, பின்பு அவரே ஒரு தீர்வை ஏற்பாடு செய்வதை சுவாரசியமான சம்பவங்களோடு சொல்லி, அந்தப் பிரச்சினையைத் தளர்த்துகிறார். அந்தத் தீர்வோடு அண்ணாச்சியின் பழைய

வாழ்க்கையையும், இழந்த உறவுகளையும் மீண்டும் பெற்று அனைவரும் ஒன்று கூடுகிறார்களா ? இதனை ஒரு கைதேர்ந்த எழுத்தாளர் போல எழுதிய ராஜலட்சுமியைப் பாராட்டி மகிழ்கிறேன்.

18 அத்தியாயங்களில் ஒரு கிராமத்து சூழலை சுவாரசியமாகவும், சமூக வேறுபாடானது சிக்கலானது, அது எப்போதுமே கொதிநிலையில் இருக்கும் என்பதை அழகாக விவாதித்து, அந்த சிக்கலைத் தீர்க்க ஊரின் வளர்ச்சியாக ஒரு சர்வதேசத் தொண்டு நிறுவனம் வழியாகத் தீர்வு காண வைத்ததில் எழுத்தாளர் ராஜலட்சுமியின் தனித்துவமும், கிராமத்தின் மீதான அக்கறையும் மிளிர்கிறது. அண்ணாச்சிக்கு உதவியாக, ஆதரவாக, நட்பும் பாசமும் கலந்த ஒரு தாய் ஸ்தானத்தில் வடிவமைக்கப்பட்ட 'பாப்பா ஆச்சி' பாத்திரம் என்னை மிகவும் கவர்ந்த ஒரு அழகிய கவிதை.

நூலில் தான் ரசித்த சில வரிகள்

- மரியாதை இல்லாத எந்த உறவையும் அண்ணாச்சி வளர்த்துக்கொள்ளவும் மாட்டார் முறைத்துக்கொள்ளவும் மாட்டார்.

- ஒடுக்கப்பட்ட மக்களின் உணவின் மீதான பொது சீண்டல்களை பற்றி கவலைப்பட கேள்வி கேட்க யாருமே இல்லையா ?

- ஒரு சம்பவத்தின் வீரியம், அதை யாரு செய்கிறார்கள் என்பதை பொறுத்து தான் பூதாகரமாக வெடிக்கிறது.

- பூசாரி ரெண்டு நிமிசத்துக்கு மேல சாமி ஆடுனது இல்ல.

- நேர்பட உழைத்தால், எல்லா கனவுகளும் சாத்தியமாகும்.

கதையைப் பற்றி முழுமையாகச் சொல்வது விமர்சனத்திற்கு அழகல்ல என உணர்ந்து, Amazon kindle வழியாக வெளியாகியுள்ள இந்நூலின் இணைப்பை இங்கு பதிவிடுகிறேன். கதையை வாசித்து புதிய எழுத்தாளர் ராஜலட்சுமிக்கு ஆதரவு தாருங்கள்.
நூல் இணைப்பு
https://amzn.in/d/74T5CKk

எனது அன்பிற்குகினிய மாணவி ராஜலட்சுமி கல்லூரி நாட்களிலேயே மொழி பற்று மற்றும் சமூக அக்கறை

உடையவர். Anna University Rank Holder சிறந்ததோர் மென்பொருள் பொறியாளராகவும் திகழ்கிறார். இன்று அன்பான இணையார் இரண்டு மழலைகளோடு அமெரிக்காவில் குடியிருந்து, இப்போது ஒரு படைப்பாளியாகப் பரிமாணித்தது எனக்கு மகிழ்ச்சியும், ஆச்சரியமும் தந்தது. எனது நூல்களை மெருகேற்ற, சிறிதும் தயங்காமல் உதவும் குணம் உடையவர் ராஜலட்சுமி. சுமார் 15 ஆண்டுகள் கடந்து ஆசிரியர் - மாணவர் என ஜன்ஸ்டீன் குடும்பமாக திகழ்கிறோம். இக்குடும்பத்திலிருந்து மேலும் ஒரு எழுத்தாளராகப் பரிமாணித்த ராஜலட்சுமியை எழுத்துலகத்திற்கு சக எழுத்தாளராக வரவேற்று, பல படைப்புகள் படைத்து சிகரம் தொட மனதார வாழ்த்துகிறேன்.

- ஆலடி எழில்வாணன் (23-12-2025)

13. தமிழ் மரபு அறக்கட்டளை ஆய்வுப் பயணம் / களப்பணி

— டிசம்பர் 1, 2025 முதல் டிசம்பர் 31, 2025 வரை மேற்கொண்ட பயணங்களில் வழியாக பதியப்பட்ட ஆய்வு மற்றும் தொன்மை தொடர்பான தினப்படி செய்திக்குறிப்புகள் (நாட்குறிப்புகள்) —

க. மலேசியா, இந்தோனேசியாவிற்கு ஓர் ஆய்வுப் பயணம்

— முனைவர் க. சுபாஷிணி

சென்னையில் இருந்து நண்பர் டாக்டர் நா. கண்ணனும் இணைந்து கொண்டார். லண்டனில் இருந்து தோழர் பாஸ்கரும் இப்பயணத்தில் எங்களோடு இணைந்து கொள்கிறார்.

இந்தோனேசியாவின் ஆச்சே மற்றும் தமிழ் மக்கள் புலம்பெயர்ந்து அதிகமாக வாழ்கின்ற "லிட்டில் மெட்ராஸ்" என்று அறியப்படுகின்ற மேடான் நகருக்கும் எங்கள் பயணம் அமைகின்றது.

கடந்த சில நாட்களாக indigo விமான சேவை ரத்து என்று கேள்விப்பட்ட நாள் முதல் கண்ணனுக்கு ஒரு வகையான டென்ஷன். விமானத்தை எடுப்பார்களா இல்லையா என்று சந்தேகத்தோடு இருந்தார். எனக்கு ஏதோ ஒரு நம்பிக்கை.. பிரச்சனை இல்லாமல் நேரத்திற்கு பயணம் அமையும் என்று ஆழ்மனதில் ஒரு நம்பிக்கை. அதுபோலவே பயணமும் அமைந்தது.

கோலாலம்பூர் விமான நிலையம் வந்தடைந்து விட்டோம்.

மலேசியா மண்ணில் மீண்டும் கால் வைப்பது எப்போதும் எனக்கு பல இளமைக்கால நினைவுகளை மீட்டெடுத்து விடும். மனதில் மகிழ்ச்சி நிறைந்து விடும்.

அடுத்தடுத்த நாட்களில் இந்தோனேசியா பயணம் உள்ளது. கடந்த சில நாட்கள் பெய்த கடும் மழையாலும் புயலினாலும் இந்தோனேசியாவின் சுமத்ரா தீவு பேரழிவை சந்தித்துள்ளது. இந்த காலகட்டத்தில் அங்கு செல்வது சரிதானா என்று மனதில் ஒருவகை ஐயம் இருந்தாலும் திட்டமிட்ட பணிகளை மாற்றம் செய்யாமல் தொடர்வோம் என்று பயணத்தை தொடர்கிறேன்.

திரு. சண்முகம் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் தலைவர். விமான நிலையத்தில் வரவேற்று உபசரித்தார்கள். மலேசிய உள்ளூர் தமிழ் அமைப்புகளின் இன்றைய நிலை அரசியல் மற்றும் சமூகம் சார்ந்த பல விஷயங்களை பேசி மகிழ்ந்தோம்.

- சுபாஷிணி (10.12.2025)
கோலாலம்பூர், மலேசியா

இந்தோனேசியாவின் பண்டா ஆச்சே நகர்

தமிழ் மரபு அறக்கட்டளை குழுவினர் -என்னுடன் துணைத் தலைவர் பேராசிரியர் டாக்டர் நா கண்ணன், ஐரோப்பிய குழுவின் லண்டன் நகரில் வசிக்கும் நண்பர் பாஸ்கர் மூவருமாக இன்று இந்தோனேசியாவின் பண்டா ஆச்சே நகருக்குப் பயணிக்கின்றோம். இந்த நகரம் தமிழ் வணிகர்கள் மிக முக்கியமாக வந்து சென்ற பண்டைய வரலாற்று சிறப்புமிக்க ஒரு நகரம். தொடர்ச்சியாக பெருவெள்ளம் புயல் ஆகிய இயற்கை பேரிடர்களால் தாக்குதல்களைத் தொடர்ந்து அனுபவித்து வருகின்ற ஒரு நிலப் பகுதி என்றும் இதனை கூறலாம்.

இந்தோனேசியா சுமத்ரா தீவின் ஆச்சே விமான நிலையம்.

பண்டா ஆச்சே நகரில் இருந்து வடக்கு நோக்கி பார்க்கும் போது நமக்கு அந்தமான் நிக்கோபார் தீவுகள் தெரிவதை நில வரைபடத்தில் காணலாம்.



இந்தோனேசியா நாட்டின் சுமத்திரா தீவின் வடக்கு முனையில் அமைந்திருக்கின்றது ஆச்சே. இன்று மாலை இந்த நகரை வந்தடைந்தோம்.

புலம்பெயர்ந்த தமிழர் - ஆச்சே இந்தோனேசியா

ஆச்சே நகரில் எங்களை வரவேற்ற தமிழ் மொழியை இழந்த தமிழ் இளைஞர் யூதா ராஜாராம் எங்களுடன்.

எங்களை விமான நிலையம் வந்து வரவேற்ற இளைஞரின் பெயர் மாஸ்யூதா. இவர் தமிழ் பூர்வீகத்தைக் கொண்டவர். ஆனால் இந்தப் பகுதியில் வசிக்கின்ற ஏனைய தமிழ் மக்களைப் போல தமிழ் மொழியை இழந்தவர்.

இப்படித்தான் தமிழர் புலம்பெயர்ந்த பல தீவுகளில் தமிழ் மக்கள் தமிழ் மொழியை இழந்துவிட்ட அவல நிலை இன்று கண்கூடாக அமைந்திருக்கின்றது.

மாஸ்யூதா - இது ஒரு ஜாவானிஸ் பெயர். இவரது பெற்றோர்.. தந்தையின் பெயர் ராஜாராம். தாயாருக்கு தமிழ் பெயர் ஒன்றும் இந்தோனேசியப் பெயர் ஒன்றும் இருக்கின்றதாம். தமிழ் பெயர் யூதாவிற்கு மறந்து விட்டது. அம்மாவின் இந்தோனேசிய பெயர் எர்ணாவதி. இவருக்கு ஒரு அக்கா இருக்கின்றார். அவரது பெயர் ரவிதா ரஞ்சனி. குடும்பத்தில் அனைவருமே மலாய்மொழி பேசுகின்றார்கள். தமிழ் பேச்சு வழக்கில் இல்லை. மறைந்து விட்டது.

கடந்த இரண்டு வாரங்களாக மழை, வெள்ளம், பேரிடர் என இப்பகுதி பாதிப்பைச் சந்தித்து இருக்கின்றது என்பதைக் காண முடிந்தது. விமான நிலையத்திலிருந்து நகர மையம் வரும் வரையில் மின்சார விளக்குகள் எங்கும் இல்லை. இருள் சூழ்ந்திருந்தது.

இன்று மழை இல்லை என்பது ஒரு வகையில் நல்ல செய்தி. மக்கள் இயல்பு நிலைக்கு திரும்பிக் கொண்டிருக்கின்றார்கள் என்பதை சாலையில் உள்ள கடைகளில் நிறைந்திருக்கும் பொதுமக்களைக் காணும் போது புரிந்துகொள்ள முடிகிறது.

- சுபாஷிணி (10.12.2025)
ஆச்சே, இந்தோனேசியா

உ. இந்தோனேசியாவின் ஆச்சே நகர் தமிழ் அடையாளங்கள்

— முனைவர் க. சுபாஷிணி

இந்தோனேசியாவின் சுமத்ரா தீவில் உள்ள பண்டா ஆச்சே நகரில் தமிழ் மக்கள் முருகனுக்கு ஒரு கோயிலை 1934 ஆம் ஆண்டு எழுப்பியிருக்கின்றார்கள்.

பரங்கிப்பேட்டையில் இருந்து 19 ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் குடியேறிய தமிழர்கள் இந்த ஆச்சே பகுதியில் வாழ்ந்தனர். அவர்களில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர் தான் ராதாகிருஷ்ணன். அவருடைய தாத்தா பெயர் பரசுராமன் பாட்டியின் பெயர் சின்னம்மாள். அவர்கள் காலத்தில் தான் பரங்கிப்பேட்டையில் இருந்து கப்பலில் வந்து இங்கே குடியேறியிருக்கின்றார்கள்.

அவர்கள் டச்சு கிழக்கிந்திய கம்பெனியின் காலத்தில் ஒப்பந்தக் கூலிகளாக வந்தவர்களாக இருக்க வாய்ப்புள்ளது.

அவர்களது மகன் தண்ணிமலை. இவருக்கு இரண்டு சகோதரிகளும் இருந்தார்கள்.

தண்ணிமலைக்கு நான்கு குழந்தைகள். ஒருவர் ராதாகிருஷ்ணன். மூத்தவர் கிருஷ்ணன். இன்னொரு அக்கா இந்திரகுமாரி. இவர் இங்கேயே படித்துவிட்டு மலாய் பள்ளியில் ஆசிரியராக இருந்திருக்கின்றார். தம்பியின் பெயர் சிவஞானம்.

ராதாகிருஷ்ணனை தவிர மற்ற அனைவரும் 2004 ஆம் ஆண்டு நிகழ்ந்த சுனாமி கடல் பேரழிவில் இறந்து போயினர். அக்கால கட்டத்தில் ஆச்சேயில் வாழ்ந்த ஏறக்குறைய எல்லா தமிழர்களும் இறந்து போயினர். மூன்று குடும்பங்கள் மட்டுமே இன்று எஞ்சி இருக்கின்றன. இடையில் சிலர் மேடான் நகருக்கும் குடி பெயர்ந்து விட்டார்களாம்.

ராதாகிருஷ்ணனுக்குத் தமிழ் பேசத் தெரியாது. அவரது மனைவியின் பெயர் ஜெயஸ்ரீ. அவர் மேடானிலிருந்து இங்கு வந்தவர்.

ஆச்சே நகர் முருகன் கோயில்

தனது தந்தையின் காலத்தில் கட்டப்பட்ட முருகன் கோயிலை இன்னமும் பராமரித்து வருகின்றார் ராதாகிருஷ்ணன். அவருக்கு குழந்தைகள் இல்லை. இங்கு பங்குனி உத்திரம் மட்டுமே விழாவாகக் கொண்டாடப்படுமாம்.



அதற்காக நன்கொடை வாங்குவதற்காக மேடான் மற்றும் பல இடங்களுக்குச் சென்று நன்கொடை வாங்கி வந்து இங்கு கோயில் திருவிழாவை மிகச் சிறப்பாக ராதாகிருஷ்ணன் ஒவ்வொரு ஆண்டும் செய்கின்றார். அவருக்கு உள்ளூர் இஸ்லாமிய மலாய் மக்கள் உதவுகின்றார்கள் என்பது ஆச்சரியம் கலந்த உண்மை.

இந்தக் கோயிலில் பங்குனி உத்திரம் நடைபெறும் பொழுது காவடிகளை எடுத்து ஆற்றங்கரை வழியாக மக்கள் நடந்து செல்லும் பொழுது அவர்களுக்கு உதவியாக உள்ளூர் இஸ்லாமிய மலாய் மக்கள் உடனிருந்து உதவுவார்கள் என்பதையும் ராதாகிருஷ்ணன் எனக்கு அளித்த ஒரு காணொளி பேட்டியில் தெரிவித்தார். அதனைப் பதிவாகி இருக்கின்றேன்.

பரங்கிப்பேட்டையில் இருந்து ஆச்சே வரை அமைந்திருக்கும் தமிழ் தொடர்ச்சியின் சான்றாக இன்று ராதாகிருஷ்ணன் இங்கு வாழ்கின்றார். தமிழ் மொழி மற்றும் பண்பாட்டின் பரவலாக்கும் கிழக்காசிய நாடுகளில் பரவி இருப்பதற்கு ஒரு சான்றாகவும் இதனை நாம் காண வேண்டும்.

இங்கிருக்கும் இந்தப் பழனி ஆண்டவர் கோயில் தமிழ் மக்களின் இந்தோனேசியாவிற்கான தொடர்பினை வெளிப்படுத்தும் ஓர் அடையாளம்.

நொய்சு ஆச்சே தமிழ் கல்வெட்டு

இந்த ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் முறையாக இந்தோனேசியா பயணம் சென்றபோது ஜகார்த்தா அருங்காட்சியகத்தில் பாதுகாக்கப்படுகின்ற லாபூ தோபா கல்வெட்டை நேரில் கண்டு ஆய்வு செய்து அதைப்பற்றிய செய்தியை வெளியிட்டிருந்தேன்.

தற்சமயம் மீண்டும் இந்தோனேசியாவின் சுமத்ரா தீவிற்கு இப்போது வந்திருப்பதால் இங்குள்ள ஆச்சே நகரில் உள்ள அருங்காட்சியகத்தில் பாதுகாக்கப்படுகின்ற தமிழ்

கல்வெட்டினை நேரில் கண்டு அதனை காணொளிப் பதிவாக செய்யும் வாய்ப்பு கிடைத்தது.

'மண்டபம்' என்ற தமிழ்ச்சொல் மட்டும் தெளிவாக தெரியும் வகையில் இந்தக் கல்வெட்டு உள்ளது. அண்மையில் கல்வெட்டியல் ஆய்வாளர் டாக்டர் மார்க்சிய காந்தி அவர்களைச் சந்தித்து பேசிக் கொண்டிருந்த போது அவர் இக்கல்வெட்டின் தமிழ் எழுத்துக்கள் பற்றிய தகவலைப் பகிர்ந்து கொண்டதோடு அதில் உள்ள கல்வெட்டு வாசகத்தையும் அனுப்பி வைத்திருந்தார். நேரடியாக பார்த்தபோது முழுமையாக அவற்றை அடையாளம் காணமுடியவில்லை என்றாலும் மண்டபம் என்ற எழுத்தை தொட்டு பார்த்து வாசிக்க முடிந்தது.

இந்த வாரத்தில் ஆச்சே பகுதியில் கடுமையான மழை மற்றும் வெள்ளம் ஏற்பட்டதால் மின்சார தடை ஏற்பட்டு இருக்கின்றது. ஆகவே இன்று நாங்கள் அருங்காட்சியகம் சென்றபோது அங்கு கண்காட்சி பகுதிகள் திறந்திருந்தாலும் மின்சார விளக்கு இல்லை என்பதால் அங்கு உள்ளே செல்வது சிரமம் என்று அங்குள்ள அதிகாரிகள் தெரிவித்தனர்.

இவ்வளவு தூரம் வந்துவிட்டு பார்க்காமல் செல்லக்கூடாது என நான் என்னை பற்றி அறிமுகம் செய்து கொண்டு இங்கு ஆச்சே வந்த நோக்கமே இந்த கல்வெட்டை பார்ப்பதற்கு தான் என்ற என் விளக்கத்தையும் கூறினேன். இரண்டு அதிகாரிகள் உடனே எனக்கு உதவும் வகையில் மேலும் இருவரையும் அழைத்து அவர்கள் செல்போனைக் கொண்டு வெளிச்சத்தை உருவாக்கி இந்த கல்வெட்டை புகைப்படம் எடுக்கவும்

அதனை ஒரு காணொளி பதிவு நான் செய்வதற்கும் எனக்கு உதவினார்கள்.

இந்த அருங்காட்சியகத்தில் உள்ள அதிகாரிகள் குறிப்பாக திருமதி ஹாவாணி, இளம் தொல்லியல் ஆய்வாளர் ரிஸாப் ஆகியோர் எங்களது ஆர்வத்தைக் கண்டு அருங்காட்சியகம் முழுவதையும் மின்சார விளக்கு இல்லை என்றாலும் ஒவ்வொரு இடமாக அழைத்துச் சென்று செல்போன் விளக்கொளியில் ஒவ்வொன்றையும் காட்டி விளக்கி எங்களுக்கு இங்குள்ள அரும்பொருட்களை பற்றிய அறிமுகத்தை வழங்கினார்கள்.

சோழர் கால செயல்பாடுகளைப் பற்றி நான் விரிவாக அவர்களுக்கு விவரித்தேன். பல தகவல்கள் அவர்கள் அறியாதவை. இந்தியா என்றால் சமஸ்கிருதம் என நினைத்துக் கொண்டிருந்த அவர்களுக்கு

இது தமிழ் கல்வெட்டு என்பதைக் கூறி ராஜராஜன், ராஜேந்திரன் காலத்து வரலாற்றையும் விளக்கினேன்.

அருங்காட்சியக அதிகாரிகள் ஆர்வத்துடன் உரையாடினர். தமிழர்களை இங்கு சந்திப்பதில் பெரும் மகிழ்ச்சி அளிக்கிறது என்று கூறி புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.

ஆச்சே பகுதியின் வரலாறு

ஆச்சே - இந்தோனேசியாவின் சுமத்ரா தீவின் வடக்கு எல்லையில் அமைந்திருக்கும் ஒரு பகுதி. இதன் தலைநகரம் பண்டா ஆச்சே.
இந்தோனேசியாவில் மிக நீண்ட காலமாக தனித்துவமிக்க ஒரு நிலப்பகுதியாக இப்பகுதி விளங்குகிறது.



இப்பகுதியில் மட்டும் பூர்வகுடி இன மக்கள் 10 வகை இனக் குழுக்கள் இருக்கின்றார்கள். அவர்களுள் ஆச்சேனிஸ் இன மக்கள் 70%. இந்த

ஒவ்வொரு இனக் குழுவினருக்கும் தனித்துவம் கொண்ட உடை சடங்குகள் என்பன அமைகின்றன. இஸ்லாமிய மதம் இங்கு வருவதற்கு முன்னரே இங்கு பௌத்த மற்றும் இந்து சமய தாக்கம் மிக ஆழமாக இருந்த பகுதிகளுள் இதுவும் ஒன்று.

ஒரு வகையில் இஸ்லாமிய மதம் இந்தோனேசியா முழுவதும் பரவுவதற்கு இந்த ஆச்சே பகுதி தான் தொடக்கப் புள்ளியாக அமைந்தது என்பது வரலாறு.

தமிழ் தொடர்பு

முதலாம் ராஜராஜனின் கல்வெட்டு சுமத்ராவின் வடக்கில் உள்ள பகுதியை "இலமூரி தேசம்" என்று குறிப்பிடுகிறது. பண்டைய காலத்தில் பௌத்த இந்து கோயில்களாக இருந்த சில, இஸ்லாமிய மத வருகைக்கு பின் பள்ளிவாசல்களாக

மாறின என்ற செய்தியும் நமக்குக் கிடைக்கின்றது. அதில் மிக முக்கியமாக இந்திரபுரி பழைய பள்ளிவாசலைக் குறிப்பிடுகின்றனர்.

இத்தாலிய பயணியான மார்க்கோ போலோ மங்கோலியா சீனாவில் 1292ல் தனது பயணத்தை முடித்துக் கொண்டு கடல் வழி பயணித்து இந்தோனேசியத் தீவுகளுக்கு வந்த போது இப்பகுதிக்கு வந்திருக்கின்றார். அக்காலகட்டத்தில் இங்கு சில அரசுகள் இருந்தன என்பது பற்றி குறிப்பிடுவதோடு அவற்றில் சில பௌத்த அரசுகளாக இருந்தன என்பதையும் தனது குறிப்புகளில் குறிப்பிடுகின்றார்.

இன்று ஆச்சே ஒரு வகையில் வளமான ஒரு பகுதியாகவே அமைந்திருக்கின்றது. இங்கு நிலக்கரி மற்றும் கச்சா எண்ணெய்

உற்பத்தி முக்கியமான பொருளாதாரமாக அமைந்திருக்கின்றது.

விரல் விட்டு எண்ணக்கூடிய வகையில் தமிழ் குடும்பங்கள் இன்று இங்கு வாழ்கின்றார்கள். சுனாமி தாக்கத்தின் போது 2004 ஆம் ஆண்டில் ஏறக்குறைய 2.5 லட்சம் மக்கள் இறந்து போனார்கள் என்பது ஒரு துயரம். அதில் பல தமிழ் மக்களும் இறந்தார்கள் என்பது வரலாறு.

வணிக சுங்கச் சாலைகள்

இந்தோனேசியாவின் வட மேற்கு எல்லை பகுதிக்கு இன்று சென்றிருந்தோம். இங்குதான் அமைந்திருக்கின்றது "இந்திர பிரஸ்தம்" என கிபி 7ஆம் நூற்றாண்டு வாக்கில் புகழ்பெற்று விளங்கிய லமூரி அரசு.

இது பௌத்த இந்து சமயம் சார்ந்த ஓர் அரசு. இப்பகுதியில் இன்று எஞ்சி இருப்பவை கட்டுமான பகுதிகளின் சில எச்சங்கள் எனலாம்.

இன்று நாம் காண்கின்ற கட்டுமான பகுதிகள் நிச்சயமாக வணிகர்கள் இங்கு வந்து தங்கி இருந்து வணிகம் செய்ய வந்தபோது ஏற்படுத்தப்பட்ட சுங்கச் சாலைகள் மற்றும் குடியிருப்புகள் அவற்றோடு பொருட்களை பாதுகாப்பாக வைக்கக்கூடிய கூடங்கள் (warehouse).

மிகப்பழமையான ஒரு வேப்பமரம் ஒன்று கடற்கரைக்கும் கோட்டைக்கும் இடையே இருக்கின்றது. தமிழ் வணிகர்களின் விட்டுச் சென்ற வரலாற்றுச் சான்றாக இதுவும் திகழ்கிறது.

இங்கிருந்து காணும் போது அகண்ட இந்தியப் பெருங்கடல் நம் மனதைக் கொள்ளை கொள்கிறது. பெரும் வணிக கப்பல்கள் கூட்டம் கூட்டமாக இங்கு வந்து தரையிறங்கி இத்துறைமுக நகரில் வணிகம் செய்த காட்சிகளை நம் மனக்கண்ணில் உணர முடிகின்றது.

புத்த சமயம் - ஆச்சே

இந்தோனேசியா ஆச்சே நகரில் கடந்த நூறு ஆண்டுகளில் எழுப்பப்பட்ட நான்கு புத்தர் கோயில்கள் வழிபாட்டில் உள்ளன.

சாக்கிய முனி புத்தர் கோயில், மைத்ரேயி புத்தர் கோயில் ஆகிய இரு கோயில்களுக்கும் நேரில் சென்று வந்தோம்.

புத்த சமயத்தை பின்பற்றிய நாடாக திகழ்ந்த இந்தோனேசியாவில் இந்த ஆச்சே பகுதியும் கடந்த 1500 ஆண்டுகள் கால வாக்கில் பௌத்த கோயில்கள் நிறைந்த ஒரு நகரமாகத் தான் இருந்தது.

காலமாற்றத்தில் இஸ்லாமிய நாடாக இந்தோனேசியா மாறுவதற்குத் தொடக்கப் புள்ளியாக ஆச்சே அமைந்த போது இங்குள்ள பௌத்த விகாரங்களும் படிப்படியாக இஸ்லாமிய கோயில் வளாகங்களாக உருமாற்றம் பெறத் தொடங்கின. அவ்வகையில் இங்கு தற்சமயம் பண்டைய கோயில் கட்டுமானங்களைக் காண முடியவில்லை.

சீன இன மக்கள் இங்கு வாழ்வதால் அவர்களது மத நம்பிக்கைக்கு ஏற்ற வகையில் பௌத்த விகாரைகளைக் கடந்த நூற்றாண்டில் கட்டி எழுப்பி இக்கோயில்களைப் பராமரித்து வருகின்றார்கள்.

- சுபாஷிணி (12.12.2025)
ஆச்சே, இந்தோனேசியா

ஆச்சே - மேடான் நகர்

ஆச்சே நகரில் இருந்து புறப்பட்டு நேற்று இரவு மேடான் நகர் வந்து சேர்ந்தோம்.

இந்தோனேசியாவின் சுமத்ரா தீவில் இரண்டு வெவ்வேறு நேரங்கள் கடைபிடிக்கப்படுகின்றன என்பதை நேற்று தான் அறிந்து கொண்டேன்.

ஆச்சே நகருக்கும் மேடானுக்கும் ஒரு மணி நேர வேறுபாடு இருக்கின்றது. ஒரு மணி நேரம் மேடான் குறைவு.

நேற்று விமான நிலையத்திலிருந்து நகருக்குள் வருவதற்குள் 25 கிலோ மீட்டர் ஒன்றரை மணி நேரம் எடுத்தது. சாலை நெரிசல் ஏராளமான வாகனங்கள். ஜகார்த்தா நகருக்கு அடுத்து இரண்டாவது பெரிய நகர் மேடான்.

இந்த நகரில் தான் ஒப்பந்த தொழிலாளர்களாக குடியேறிய தமிழ் மக்கள் ஏராளமானோர் இங்கு வாழ்கின்றார்கள். இங்கே லிட்டில் மெட்ராஸ் என்ற ஒரு தமிழர் குடியிருப்பு பகுதியும் இருக்கின்றது என்பது சிறப்பு.

- சுபாஷிணி (13.12.2025)
மேடான், இந்தோனேசியா

ங. இந்தோனேசியாவின் மேடான் - தமிழர் குடியேற்றம்

— முனைவர் க. சுபாஷிணி

இந்தோனேசியா மேடான் நகரில் வசிக்கின்ற தமிழ் மக்களின் நலனுக்காக **தமிழ்ப் பள்ளி**யை தொடங்கும் முயற்சியைத் தமிழ் மரபு அறக்கட்டளை, இந்தோனேசியா ஆசிய தமிழ் சங்கத்துடன் இணைந்த வகையில் தொடங்குகின்றோம். அதன் முதற்கட்ட சந்திப்பு கூட்டம் இன்று காலை 10 மணிக்கு மேடான் நகரில் நடைபெற்றது.

ஏறக்குறைய 40000 தமிழ் மக்கள் வசிக்கின்ற இந்த மேடான் நகரில் உள்ள

பெரும்பாலான தமிழ் மக்கள் தமிழை மறந்துவிட்ட துயர நிலை இன்று உள்ளது. இது தொடரக்கூடாது என்பதை மனதில் கொண்டு தமிழ்நாடு அரசின் அயலகத்துறை அமைச்சகத்தின் உதவியுடன் இங்கு நான்கு தமிழ் ஆசிரியர்களை வரவழைக்கும் பணியைத் தொடங்கி இருக்கின்றோம்.

இன்றைய சந்திப்பில் மேடான் நகரின் முக்கிய ஆளுமைகளான டாக்டர் விசாகன் அவர்கள் திரு மதியழகன் திரு சுபேந்திரன் ஆகியோரும் தொலைபேசி வழியாக இப்பகுதியில் முக்கியஸ்தர் திரு சிவாஜி ராஜா அவர்களும் உரையாடினோம்.

தமிழ்ப் பள்ளி உருவாக்கம்

இந்தோனேசியா மேடான் நகரில் தமிழ்ப் பள்ளி உருவாக்கும் பணியின் தொடர்பாக இங்குள்ள பள்ளிகளை ஆராயும்

பணியைக் காலை ஆரம்பித்தோம். அவ்வகையில் தர்ம புத்ரா தனியார் பள்ளி வளாகத்தைப் பயன்படுத்தலாம் என்ற ஒரு எண்ணம் வரவே குழுவினர் அனைவரும் அங்கு சென்று பார்த்தோம்.

மூன்று மாடி அடுக்குகள் கொண்ட இந்தப் பள்ளி தற்சமயம் 30 மாணவர்களுடன் இயங்கிக் கொண்டிருக்கின்றது. இந்தப் பள்ளியில் ஒரு தமிழ்ப் பள்ளியைத் தொடங்கலாம் என்று கலந்து ஆலோசித்தோம்.

ஒரு வகையில் இந்த பள்ளிக்கூடம் வரலாற்று சிறப்புமிக்க ஒன்று. ஏனெனில் 1958 ஆம் ஆண்டில் இது அடிப்படையில் மாரியம்மன் கோயிலாக இருந்து பின்னர் அது பள்ளிக்கூடமாக மாற்றம் கண்டது. மாரியம்மன் கோயில் பின்னர் கம்புங் மெட்ராஸ் பகுதிக்கு மாற்றம் கண்டு இன்று பிரம்மாண்டமான கோயிலாக விளங்குகிறது.

முதலில் தமிழ் கோயிலை உருவாக்கியவர் பெரியவர் திரு மாரியப்பன். இவர் மேடான் பகுதியில் முக்கியஸ்தராக அறியப்படுபவர். அவரே பின்னர் இந்தப் பகுதியில் இருந்த கோயிலை ஒரு பள்ளிக்கூடமாக மாற்றியமைத்து கட்டி இருக்கின்றார். இன்று நாம் காணும் இந்த பள்ளிக்கூடம் அவர் கட்டியது.

குரு பக்தி பள்ளி..

மேடான் நகரில் சனிக்கிழமைகளில் இயங்கிக் கொண்டிருக்கும் தமிழ் பள்ளி.

தமிழ் தெரியாத பெற்றோர். தமிழ் மொழியில் பேசத் தெரியாத குழந்தைகள். ஆனால் ஆர்வத்துடன் தமிழ் கற்க வந்திருக்கின்றார்கள்.

இன்று மாணவர்களுடன் சந்திப்பும் கலந்துரையாடலும் மகிழ்ச்சியான பொழுதும்.

- சுபாஷிணி (13.12.2025)

மேடான் நகர் தமிழ் கோயில்கள்

இந்தோனேசியாவின் மேடான் நகரில் நகர மையத்தில் எங்கள் தங்கும் விடுதி இருக்கும் பகுதியில் இருந்து இன்று காலை நடைப்பயிற்சி சென்றிருந்தேன். நடந்து வரும் வழியில் ஒரு அம்மன் கோயில்

இருப்பது தெரிந்தது. அருகில் சென்று பார்த்தோம்.

நாகம்மன் கோயில்: இந்தக் கோயில் அமைந்திருக்கும் இடத்தைச் சுற்றிலும் மூன்று பெரிய நாவல் மரங்கள் இருக்கின்றன. தரையில் விழுந்து கிடந்த நாவல் பழங்களைப் பார்த்தவுடன் இவை நாவல் மரங்கள் தான் என்பது அடையாளம் கண்டு கொள்ள முடிந்தது.

நாகக் குடை - அதற்குள் நாகம்மாவின் முகம் வைத்து மூல தெய்வத்தை

உருவாக்கி இருக்கின்றார்கள். விநாயகர் முருகன் சன்னதிகளும் உள்ளன. நாகம்மன் இருக்கும் மேடைக்கு வெளியே இரண்டு சிறிய சன்னதிகள் எழுப்பப்பட்டுள்ளன. அங்கே வீரபத்திரனுக்கும் முனியாண்டி சாமிக்கும் சிலைகள் வைக்கப்பட்டுள்ளன.

தமிழ் மக்கள் தாங்கள் தமிழ்நாட்டின் எந்தப் பகுதியில் இருந்து புலம்பெயர்ந்தார்களோ அந்த பகுதியில் தங்கள் குடும்பத்தை மற்றும் கிராம மக்கள் வணங்கிய தெய்வங்களை தாங்கள் புலம்பெயர்ந்த இடங்களிலும் கொண்டு வந்திருக்கின்றார்கள். அத்தகைய ஒரு பண்பாட்டு பயணத்தை இங்கே காண முடிகின்றது.

தமிழ்நாட்டின் ஒரு கிராமத்தில் இருந்த நாகம்மன் வழிபாடும் முனியாண்டி வீரபத்திரன் வழிபாடும் இந்தோனேசியாவின் சுமத்ரா தீவில் உள்ள

மேடான் நகருக்கும் புலம் பெயர்ந்து விட்டது.

புலம்பெயர்ந்து செல்கின்ற மனிதரோடு அவர்களது பண்பாடும் நம்பிக்கைகளும் சேர்ந்து பயணிக்கின்றன!

நகரத்தார் - முருகன் கோயில்

இந்தோனேசியா மேடான் நகரில் நகரத்தார் சமூக மக்கள் எழுப்பி

இருக்கின்ற முருகன் கோயில் இது. தமிழ்நாட்டில் இருந்து புலம்பெயர்ந்த நகரத்தார்கள் பெரும்பாலும் மலேசியா இந்தோனேசியா ஆகிய நாடுகளில் தங்கள் வணிகத்தை பெருக்கி வணிகக் கடைகள், வட்டி வியாபாரம் என்று செழிப்புடன் இருந்தார்கள்.

அவர்கள் புலம்பெயர்ந்த நாடுகளில் தங்கள் முருக் கடவுளுக்குக் கோயில் எழுப்பி மகிழ்ந்தார்கள். அப்படி அவர்கள் புலம்பெயர்ந்த நாடுகளில் ஒன்று இந்தோனேசியாவின் மேடான் நகரம். இங்கு நகரத்தார் சமூகத்து மக்கள் எழுப்பி இருக்கும் கோயிலின் சில புகைப்படங்களை இங்கே காணலாம்.

ஒப்பந்தத் தொழிலாளர்கள்

இந்தோனேசியா மேடான் நகருக்கு அருகே அமைந்திருக்கின்றது பின்ஜாய் என்ற பகுதி. இதுதான் தமிழர்கள் ஒப்பந்தத் தொழிலாளர்களாக முதல் முதலாக வந்து இறங்கிய பகுதி. ஆரம்ப காலத்தில் தமிழர்கள் பெருவாரியாக வசித்த பகுதி என்றும் கூறலாம்.

மேடானில் உள்ள கோயில்களில் மிகப் பழமையான மாரியம்மன் கோயில் 1880 ஆம் ஆண்டில் இந்தப் பகுதியில் தான் கட்டப்பட்டது. இன்று படிப்படியாக மக்கள் காம்போங் கெலிங்க் அல்லது கம்போங் மெட்ராஸ் என்ற பகுதிக்கு இடம்பெயர்ந்து விட்டார்கள் என்றாலும் இங்கும் அதிகமாக தமிழ் மக்கள் வசிக்கின்றார்கள்.

இந்தோனேசியாவிற்குப் புலம்பெயர்ந்த தமிழ் மக்களின் வரலாற்றில் இந்த

பிஞ்சாய் நகர் வரலாற்றில் சிறப்பிடம் பெறுகிறது.

இன்று மாலை இந்த மாரியம்மன் கோயிலின் நிர்வாகத்தினர்கள் கூட்டத்தில் நாங்கள் கலந்து கொண்டோம். வணிகத்திற்காகவும் பின்னர் ஒப்பந்த தொழிலாளர்களாகவும் அந்தத் தமிழ் மக்கள் பற்றிய தகவல்களை இங்கு மானிடவியல் ஆய்வாளராக இருக்கின்ற சிவக்குமார் என்ற உள்ளூர் இளைஞர் எனக்கு மலாய் மொழியில் வழங்கினார்.

தமிழர்களின் தமிழ்நாட்டில் இருந்து புலப்பெயர்வு என்ற துறையில் இவர் ஆய்வு செய்து வருகின்றார் என்பது சிறப்பு.

- சுபாஷிணி (14.12.2025)

உயரமான முருகன் சிலை

இந்தோனேசியா மேடானின் புறநகரில் அமைந்திருக்கின்றது புதிதாக எழுப்பப்பட்டிருக்கும் ஸ்ரீ ராஜராஜேஸ்வரி திருக்கோயில்.

இக்கோயிலில் மலேசியா கோலாலம்பூரில் பத்து மலையில் இருப்பது போன்ற உயரமான முருகன் சிலை ஒன்று எழுப்பப்பட்டுள்ளது. திருவள்ளுவர் சிலையும் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

- சுபாஷிணி (15.12.2025)
மேடான், இந்தோனேசியா

சு. இந்தோனேசியா - களப்பணி

— முனைவர் க. சுபாஷிணி

இந்தோனேசியாவின் ஆச்சே மற்றும் மேடான் ஆகிய நகரங்களில் ஆய்வுப் பயணம் முடித்து இன்று காலை மலேசியாவின் பினாங்கு மாநிலம் வந்தடைந்தோம். இந்தோனேசியாவில் தமிழ் பள்ளிகளுக்குத் தமிழ்நாடு அரசின் அயலகத்துறை ஏற்பாட்டில் முதற்கட்டப் பணியாக நான்கு ஆசிரியர்களையும் ஒரு கலை ஆசிரியரையும் அனுப்பும் திட்டம் தொடர்பாக மேடான் நகரில் எங்களது ஆய்வு இரண்டு நாட்கள் நடைபெற்றது.

இந்தப் பயணம் மற்றும் இதில் நிகழ்த்தப்பட்ட கள ஆய்வுகளின் அடிப்படையில் முதற்கட்டப் பணியாக இரண்டு பள்ளிக்கூடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. இந்தக் களப்பணியில் முற்றும் முழுதும் உடனிருந்து அனைத்து சந்திப்புகளையும் ஏற்பாடுகள் செய்த இந்தோனேசியா ஆசிய தமிழ் சங்கம் மற்றும் அதன் தலைவர் டாக்டர் விசாகன் அவர்களுக்குத்

தமிழ் மரபு அறக்கட்டளையின் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் மேடான் நகரில் கடந்த 300 ஆண்டுகள் கால வாக்கில் புலம்பெயர்ந்த தமிழ் மக்களின் வாழ்க்கை, தோட்டத் தொழிலாளராக மக்களின் செயல்பாடுகள், தமிழ் மக்கள் கட்டிய கோயில்கள் ஆகியன பற்றிய நேரடி கள ஆய்வை நிகழ்த்த வாய்ப்பு அமைந்தது.

1880 ஆம் ஆண்டில் இங்கு **முதல் மாரியம்மன் கோயில்** கட்டப்பட்டது.

1949 ஆம் ஆண்டில் இங்கு **முதல் தமிழ் பள்ளி** தொடங்கும் முயற்சி நடந்தது.

இந்தோனேசியாவில் அமைக்கப்பட்டுள்ள **முதல் திருவள்ளுவர் சிலை** மேடானின் ஸ்ரீ ராஜராஜேஸ்வரி கோயில் வளாகத்தில் அமைந்துள்ளது.

தமிழ் மொழியைப் பேச்சு வழக்கில் இழந்து ஆனால் மலாய் மொழியை அன்றாட பேச்சு மொழியாகக் கொண்ட தமிழ் மக்களோடு உரையாடினோம். நம் தாய்மொழி தமிழ். ஆனால் எங்களுக்குத் தெரியவில்லையே என அவர்கள் மனம் வருந்தி பேசினார்கள்.

புலம்பெயர்ந்த நாடுகளில் மாரியம்மன் கோயில்கள் தனித்தனியாக இருக்கும் தமிழ் மக்களை ஒன்றிணைக்கும் ஒரு மையப் புள்ளியாக அமைவது வழக்கம். இங்கு மேடானிலும் அதே நிலைதான் உள்ளது.

கடந்த சில நாட்கள் இந்தோனேசியாவில் நிகழ்த்திய களப்பணிகள் விரைவில் அங்கு நான்கு தமிழ் ஆசிரியர்களை அனுப்பி வைக்க வேண்டிய முயற்சிகளை விரைந்து முன்னெடுக்க அடிப்படையை வகுத்துள்ளது.

இந்த முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு நல்கிய இந்தோனேசியா வாழ் தமிழ் அன்பர்களுக்குத் தமிழ் மரபு அறக்கட்டளை எங்கள் நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றோம்.

- சுபாஷிணி (15.12.2025)
பினாங்கு, மலேசியா

ரூ. தனிநாயம் அடிகளாரின் ஆவணப்பட உருவாக்கம்

— முனைவர் க. சுபாஷிணி

வெள்ளி விழா கருத்தரங்கம் ஆகஸ்ட் 24ஆம் தேதி நடந்த போது நாம் அறிவிப்பு செய்தது போல டாக்டர் சேவியர் எஸ் தனிநாயகம் பற்றிய ஆவணப்படம் உருவாக்கம் இன்று தொடங்குகிறது.

திருநெல்வேலி வடக்கன்குளம் நோக்கிய பயணம்.

சாத்தூரில் தேநீர்..

வடக்கன்குளம் புனித தெரேசாள் மேல்நிலைப் பள்ளியில் இன்று காலை டாக்டர் எஸ் தனிநாயகம் பற்றிய ஆவணப்படம் பதிவு தொடங்கப்பட்டது.

- சுபாஷிணி (22-12-25)

வடக்கன்குளம் மாதா தேவாலயம்

நேற்று திருநெல்வேலி பேருந்து நிலையத்திலிருந்து ஏறக்குறைய 65 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள வடக்கன்குளம் என்ற சிற்றூருக்குப் பதிவுக்காகச் சென்றிருந்தோம்.

இங்குள்ள மாதா தேவாலயம் ஐரோப்பிய கட்டுமான வடிவமைப்பில் அமைந்தது. இங்கு வீரமாமுனிவர் தனது காலத்தில் வந்திருக்கின்றார் என்பது வரலாறு.

இந்த மாதா கோயில் வளாகத்தின் உள்ளே அலுவலகங்கள், நிர்வாக சபையின் அலுவலகம், பங்குத்தந்தை அலுவலகம் ஆகியவை இருக்கின்றன.

இந்த தேவாலயத்தை ஒட்டிய வகையிலேயே ஏறக்குறைய 100 மீட்டர் தூரத்தில் அமைந்திருக்கின்றது புனித தெரேசாள் மேல்நிலைப் பள்ளிக்கூடம்.

இங்குதான் டாக்டர் சேவியர் தனிநாயகம் அவர்கள் இத்தாலியின் ரோம் நகரில் உள்ள உர்பன் பல்கலைக்கழகத்தில் தனது முனைவர் பட்ட ஆய்வவை முடித்து வந்த பின்னர் ஒரு பள்ளி துணை தலைமை ஆசிரியராக 1940 முதல் 1945 வரை பணியாற்றிய காலம். இதனைக் கருத்தில் கொண்டு பள்ளி வளாகத்தில் அவரது சிற்பம் அமைக்கப்பட்டுள்ளது.

இதில் வேடிக்கை என்னவென்றால்..

இங்குள்ள பாதிரிமார்களுக்கு டாக்டர் சேவியர் தனிநாயகம் அவர்கள் பற்றிய செய்திகள் தெரியவில்லை... ஆனால் நான் விளக்கும்போது ஆர்வத்துடன் கேட்டு அறிந்து கொண்டார்கள்.

தனிநாயகம் அவர்களது உருவச்சிலை இருக்கின்ற பள்ளியில் உள்ள ஆசிரியர்களுக்கும் டாக்டர் சேவியர் தனிநாயகம் பற்றிய எந்த தகவல்களும் தெரியவில்லை..

பள்ளிக்கூடத்தில் உள்ள ஒரு வகுப்பறையில் மாணவர்களுடன் உரையாடினேன்..

அவர்களுக்கு தனிநாயகம் என்றால் யார் என்றே தெரியவில்லை.

அவர்களை அழைத்துக் கொண்டு சிலை உள்ள பகுதிக்குக் கொண்டு வந்து அவர்களுக்கு அவரைப் பற்றி விளக்கினேன்.

அவர்களிடம் இந்தச் சிலையின் கீழே உள்ள செய்திகள் எவற்றை வாசித்திருக்கின்றீர்கள் என்று கேட்டேன்.

ஆண் குழந்தைகளில் ஒருவர் கூட வாசிக்கவில்லை என்பது தெரிந்தது.

பெண் குழந்தைகளில் ஏறக்குறைய 90 விழுக்காடு மாணவர்கள் வாசித்திருக்கின்றார்கள். அவர்களில் ஓர் இருவர் எல்லா செய்திகளையும் வாசித்திருக்கின்றார்கள். அதில் ஒரு பெண் குழந்தை அந்த உருவச் சிலைக்குக் கீழே உள்ள தகவல் பகுதியில் உள்ள எழுத்துப் பிள்ளைகளைச் சுட்டிக்காட்டி இரண்டு இடங்களில் எழுத்துப் பிழைகள் உள்ளன என்பதை குறிப்பிட்டு கூறினார்.

- சுபாஷிணி (23-12-25)

சூ. பொருநை அருங்காட்சியகம் திறப்பு

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் திறந்து வைத்த 'பொருநை தொல்லியல் அருங்காட்சியகம்' 23 டிசம்பர் முதல் பொதுமக்களுக்காக திறக்கப்பட்டது.

இதனையொட்டி கல்லூரி மாணவர்களும், உள்ளூர் மக்கள் என்று பலர் பொருநை அருங்காட்சியகத்தை ஆர்வமுடன் கண்டு ரசித்து வருகின்றனர்.

- காலை 10 மணி முதல் இரவு 7 மணி வரை மக்கள் பார்வையிடலாம்.

- சிறியவர்களுக்கு ரூ.10, மாணவர்களுக்கு ரூ.5, பெரியவர்களுக்கு ரூ.20 கட்டணமாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

- செவ்வாய் கிழமை மற்றும் தேசிய விடுமுறை நாட்களில் விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

- அருங்காட்சியகத்தின் 5D, 7D தியேட்டருக்கு ரூ.25 தனி கட்டணம்

- மக்கள் பார்வையிட வசதியாக நெல்லை ரெயில் நிலையம், நெல்லை பஸ்டாண்ட் பகுதிகளில் இருந்து சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன

தமிழ் மரபு அறக்கட்டளை செயற்குழுவினர் தலைவர் டாக்டர்

சுபாஷிணி அவர்களோடு அண்மையில் புதிதாக திறக்கப்பட்ட பொருநை அருங்காட்சியத்திற்கு சென்று வந்தார்கள். அப்போது தமிழ்நாடு தொல்லியல் துறை தலைவர் டாக்டர் சிவானந்தன் அவர்களை சந்தித்து இந்த அருங்காட்சிய உருவாக்கம் பற்றி கலந்துரையாடினார்கள்.

அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ள அருட்பொருட்களை நேரில் பார்க்க இது நல்லா வாய்ப்பாக அமைந்தது.

அறிமுகக் கூடம், சிவகளை, ஆதிச்சநல்லூர், கொற்கை என நான்கு பிரிவுகளில் அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது.

Galaxy A35 5G

Galaxy A35 5G

Galaxy A35 5G

இங்குள்ள virtual reality மற்றும் 5D காட்சிக்கூடங்கள் வருவோருக்கு ஐந்திணைகள் பற்றிய சிறப்பான தகவல்களை அனுபவமாக வழங்குகின்றன.

13. தமிழ் மரபு அறக்கட்டளை நிகழ்ச்சிகள்

— டிசம்பர் 1, 2025 — டிசம்பர் 31, 2025 நிகழ்வுகள் —

க. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் அறிஞர்கள் அவையம்: ஒரு மனப்பதிவு!

— அர்ஷா மனோகர்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் இன்று (டிசம்பர் 4, 2025) காலை 10 மணிக்கு அண்ணா நூற்றாண்டு நூலக வளாகத்தில் ஏற்பாடு செய்திருந்த 'அயல்நாடுகளில் தமிழரும் தமிழும்' என்ற கருத்தரங்கில் கலந்து கொண்டது எனக்கு பெரும் மகிழ்ச்சியையும் பயனுள்ள அனுபவத்தையும் அளித்தது. இத்தகைய மாபெரும் முயற்சியைச் செய்த உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கு எனது பாராட்டுகளும் நன்றிகளும்!

தமிழ் எதிர்காலப் பாய்ச்சல்: எழுத்தாளர் இந்திரன் அவர்களின் உரை

இந்த நிகழ்வின் மிகவும் சுவாரசியமான மற்றும் அத்தியாவசியமான அம்சம், எழுத்தாளர் இந்திரன் அவர்கள் வழங்கிய தமிழின் எதிர்காலம் குறித்த உரைதான். அவரது புதுமையான சிந்தனை (Out of the Box Thinking) அனைவரையும் கவர்ந்தது.

அவர், தமிழ் பண்பாடு என்பது வெறும் பழைய இலக்கிய மரபுகளில் மட்டும் உறைந்திருக்கவில்லை; வடிவேலுவின் நகைச்சுவை, இளையராஜா மற்றும் ரகுமானின் இசை போன்ற சமகால ஊடகங்கள்தான் உலகெங்கும் உள்ள தமிழர்களை உணர்வுபூர்வமாக இணைத்து வளர்க்கின்றன என்று புதிய கோணத்தை முன்வைத்தார். புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதன் மூலம் தமிழ் மேலும் மேலும் வளரும் என்பதை வலியுறுத்தி, தமிழர்கள் அனைவரும் ஒன்றிணைந்து, தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தித் தமிழை வளர்க்கும் விரும்பத்தக்க எதிர்காலத்தைக் (Preferred Future) குறித்துக் கூட்டுக் கனவு காண வேண்டும் என வலியுறுத்தினார்.

கண்டங்களின் ஆய்வுத் துல்லியத்தை பின்வரும் வல்லுநர்கள் உறுதி செய்தனர்:

முனைவர் எஸ். ஜெயசீலன் ஸ்டீபன் அவர்களின் உரை வீச்சு ஒரு பெரும் புத்துணர்ச்சியை தந்தது. இவர், தமிழ் வணிகர்கள், அடிமைகள் மற்றும் தொழிலாளர்கள் புலம்பெயர்ந்த துல்லியமான வரலாற்றை ஐரோப்பிய ஆவணங்களைக் கொண்டு தரவுகளுடன்

நிறுவியது, ஆய்வாளர்களுக்கு ஒரு முன்மாதிரியாக அமைந்தது.

தமிழ் மரபு அறக்கட்டளைத் தலைவர் முனைவர் சுபாஷிணி அவர்கள் கீழக்காசிய நாடுகளில் தமிழர் புலப்பெயர்வு குறித்த ஆவணப் பதிவுகளைச் சரியான ஆய்வு முறையில் முன்வைத்து, தமிழர்கள் அப்பகுதியின் பண்பாட்டு விரிவாக்கத்திற்கு அளித்த பங்களிப்பை ஆதாரங்களுடன் உறுதி செய்தார். மிகச் சிறப்பான மிக ஆழமான மிக நேர்த்தியான உரையாக அமைந்திருந்தது.

கலாநிதி சி. மௌனகுரு (இலங்கை): சமூற்று நாடக அரங்கு குறித்த அவரது

ஆழமான உரை, நாடகம் எப்படிச் சமூக அவலங்களை வெளிப்படுத்தும் அரசியல் கருவியாகச் செயல்படுகிறது என்பதைத் தெளிவாக விளக்கினார்.

மற்ற உரைகளின் பங்களிப்பு

முனைவர் ர. பூங்குன்றன் அவர்களின் உரை, வரலாற்று ஆய்வுக்குத் தேவையான புதிய ஆவணங்கள் இன்னும் கிடைத்துக் கொண்டே இருக்கின்றன என்பதையும், அவற்றைச் சேகரிப்பதன் மூலம் வரலாற்று ஆய்வை மேலும் செழுமைப்படுத்த முடியும் என்பதையும் சுட்டிக்காட்டினார்.

எழுத்தாளர் முனைவர் வெண்ணிலா: கரும்பத் தோட்டச் சுரண்டல்கள் குறித்த அவரது உணர்வுப்பூர்வமான உரை, பாரதியின் பாடல்கள் சமூகத் தீர்வுக்கு வித்திட்டதை எடுத்துரைத்தது.

முனைவர் குறிஞ்சி வேந்தன், முனைவர் மார்க்சிய காந்தி ஆகியோரின் உரைகளும் புலம்பெயர்ந்தோர் வாழ்வியல், வணிகம், இலக்கியப் பதிவுகள் மற்றும் வரலாற்றுத் தொடர்புகள் குறித்துத் தேவையான தகவல்களை வழங்கின.

நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்த திரு. ஆர். பாலகிருஷ்ணன் இ.ஆ.ப (ஓ.ப) அவர்களின் கருத்து, ஒட்டுமொத்த நிகழ்வின் நோக்கத்தையும் வரையறுத்தது.அவர், "இன்டிமேஷன் (Intimation) வேண்டாம், இன்டெக்ரேஷன் (Integration) தான் வேண்டும்" என வலியுறுத்தினார். அதாவது, உலகெங்கும் உள்ள தமிழர்கள் வெறும் அறிவிப்புகளுடன் நிற்காமல், தமிழ் வளர்ச்சிப் பணிகளில் ஒன்றிணைய வேண்டும் என்பதே அதன் ஆழமான பொருள். உலகெங்கும் உள்ள தமிழர்களை இணைக்கும் பாலமாகவே இந்த நிகழ்வு அமைந்திருந்தது.

ஆய்வுகளின் துல்லியம், வரலாற்றின் உணர்வுப்பூர்வப் பதிவு மற்றும் எதிர்காலத்திற்கான திட்டமிடல் என அனைத்து அம்சங்களிலும் இந்த கருத்தரங்கம் மிக நேர்த்தியாக இருந்தது. இத்தகைய மாபெரும் முயற்சிக்குப் பின்னால் இருந்த திரு. ஆர்.

பாலகிருஷ்ணன் இ.ஆ.ப (ஓ.ப) ஐயா அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழின் மீதான பற்றுள்ள அனைவரும் அவசியம் அறிய வேண்டிய தகவல்களைப் பெற்றதில் மகிழ்ச்சி!

- அர்ஷா மனோகர் (05-12-2025)

உ. நந்தனம் அரச கல்லூரி கருத்தரங்கம்

சென்னை நந்தனம் அரசு கல்லூரியில் இன்று டாக்டர் சேவியர் எஸ் தனிநாயகம் அவர்களது தமிழ்ப் பணிகள், அத்தோடு நாளை கொண்டாடப்படுகின்ற மனித உரிமை நாள் தொடர்பாக மனித உரிமைகள் சட்டங்கள் என்ற தலைப்பிலும் இன்று இரண்டு உரைகள் நடைபெற்றன.

கல்லூரி முதல்வரும் கல்லூரி ஆசிரியர்களும் மாணவர்களும் எங்களைப் பேரன்புடன் வரவேற்று உபசரித்து மகிழ்ந்தனர்.

நந்தனம் கல்லூரியில் படிக்கின்ற மிகப் பெரும்பாலான மாணவர்கள் மிக எளிய குடும்பப் பின்னணியில் இருந்து வருகின்ற மாணவர்கள். அவர்களுக்கு முன்னேற்றம்,

கடும் உழைப்பு, கல்வியில் நாட்டம் சட்ட ஆலோசனைகள் என்ற வகையில் இன்று வழங்கப்பட்ட செய்திகள் அவர்களது தனிப்பட்ட வளர்ச்சிக்கு உதவக்கூடிய வகையில் அமைந்தன என்பதில் எங்களுக்கும் பெரு மகிழ்ச்சி.

- சுபாஷிணி (9.12.2025)

விரிவான உரைகள்

கல்லூரி மாணவர்களுக்கு வரலாறு சார்ந்த விழிப்புணர்வு மற்றம் ஊக்கம் அளிக்கும் நோக்கத்தில் இன்று (09-12-2025) அரசு கலைக் கல்லூரி, நந்தனம், சென்னையில் அக்கல்லூரியின் வரலாற்றுத்துறை சார்பாக பன்னாட்டு கருத்தரங்கம் அரங்கேற்றப்பட்டது. இக்கருத்தரங்கத்தின் ஒரு சிறப்புரையாக "டாக்டர் சேவியர் எஸ். தனிநாயகம் அவர்களின் உலகளாவிய தமிழ் பங்களிப்பு" என்னும் தலைப்பில்

முனைவர் க. சுபாஷிணி, தலைவர், தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு, அவர்கள் உரையாற்றினார். இவ்வுரையானது தமிழ் மரபு அறக்கட்டளையின் வெள்ளி விழா ஆண்டில் தனிநாயகம் அவர்களின் தமிழ்ப்பணிகள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்று முன்மொழிந்த செயல்பாடுகளில் ஒன்றாகும்.

மற்றொரு சிறப்புரையாக முனைவர் கௌதம சன்னா, எழுத்தாளர் மற்றும் வழக்கறிஞர் (சென்னை உயர்நீதிமன்றம்), அவர்கள் "மனித உரிமைகள் பிரகடனமும் இந்திய மனிதனும்" என்கிற தலைப்பில்

ஒரு எழுச்சியுரையை வழங்கினார். நாளை (10-12-2025) உலகமெங்கும் மனித உரிமைகள் தினமாக கொண்டாடப்படுவது குறிப்பிடத்தக்கது. சன்னா அவர்களின் உரை இக்கொண்டாட்டத்தின் பிண்ணனியை விளக்கம் வகையாக அமைந்தது.

முன்னதாக சிறப்புரையாளர்களை வரவேற்ற கல்லூரியின் முதல்வர் முனைவர் தங்கராஜன் அவர்கள் மற்றும் வரலாற்றுத்துறை தலைவர் முனைவர் பீர் முகமது அவர்கள் கல்லூரியின் தொடர்ச்சியான செயல்பாடுகள் மற்றும் இம்மாதிரியான கருத்தரங்குகள் அரங்கேற்றுவதன் வழியாக மாணவர்கள் மத்தியில் கல்லூரியின் மதிப்பு உயர்கிறது என்று வெளிப்படுத்தினாரகள்.

சுபாஷிணி அவர்கள் அறிவுரையாக கூறும்போது கல்விதான் மாணவர்களை

படிப்படியாக உயர்த்தும் என்று தன்னுடைய அனுபவத்தைப் பகிர்ந்தார். அதிலும் குறிப்பாக 20 முதல் 30 வயதுவரையில் கடின உழைப்பு எத்தனை முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை எடுத்துரைத்தார். மேலும் தனிநாயகம் அவர்களை உதாரணமாக குறிப்பிடும்போது அவர் வழியில் அவர் செய்ததை காட்டிலும் இன்று நாம் அதிகமான தமிழ்ப்பணிகள் மேற்கொள்ள முடியும் அதற்கான வாய்ப்புகள் இருப்பதையும் சுட்டிக்காட்டினார்.

ஒரு முன்னால் மாணவனாக தான் இக்கல்லூரியில் வரலாற்றுத்துறைக்காக உரையாற்றுவது பெருமையாக உணர்வதாக சன்னா அவர்கள் நெகிழ்ச்சி அடைந்தார். மேலும் மனித உரிமைகள் பற்றி பேசும்போது நாம் எல்லோரும் மனிதர்கள் தான் என்று நமக்கும் நாம் ஐக்கிய நாடுகள் சபையின் வாயிலாக அடிப்படை உரிமைகளை பிரகடனபடுத்துவதற்கு பின்னால் 2000 ஆண்டுகால உழைப்பு இருப்பதை தெரியப்படுத்தினார். அவ்வகையில் அம்பேத்கர் அவர்கள் இந்தியாவை மனிதர்கள் வாழும் நாடாக மாற்ற வேண்டும் என்பதற்காக வகுத்த சட்டத்திட்டங்களை பற்றி சன்னா அவர்கள் எடுத்துக்கூறினார்.

நல்லதொரு உபசரங்களுடன் கூடிய இக்கருத்தரங்கில் பங்கேற்றது சிறப்புரையாளர்களுக்கு மகிழ்ச்சியை அளித்தது. பல்வேறு துறைச்சார்ந்த ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் இறுதிவரை ஆர்வத்தோடு பங்கேற்று இக்கருத்தரங்கத்தின் மூலம் சிறந்த வரலாற்றுத் தகவல்களை அறிந்து கொண்டனர்.

- மரிய ஜெரின் (09-12-2025)

ங. அயல்நாடுகளில் தமிழரும் தமிழும் - அறிஞர்கள் அவையம்

"அயல்நாடுகளில் தமிழரும் தமிழும் - நிகழ்ந்தனவும் நிகழவேண்டியனவும்" என்பதை பொருண்மையாக கொண்டு அண்மையில் (04-12-25) உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் எட்டாவது அறிஞர்கள் அவையம் நிகழ்வானது அண்ணா நூற்றாண்டு நூலக வளாகம், கோட்டூர்புரம், சென்னையில் கூட்டப்பட்டது. பல வல்லுநர்களின் உரைகளை உள்ளடக்கிய இந்நிகழ்வில் தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பின் தலைவர் முனைவர் க. சுபாஷிணி அவர்களின் உரை "கிழக்காசிய நாடுகளுக்கான தமிழர் புலப்பெயர்வு" என்கிற தலைப்பில் நிகழ்த்தப்பட்டது.

அறிஞர்களின் அவைக்கு தலைமைத் தாங்கி பேசிய உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தலைவர் திரு. ஆர். பாலகிருஷ்ணன் இ.ஆ.ப. (ப.நி.) அவர்கள் இன்றைய காலக்கட்டத்தில் தமிழர் வரலாற்றையும் தமிழின் சிறப்பினையும் எடுத்துரைப்பதற்கு பல்வேறு துறைச் சாரந்த ஆய்வுகளை ஒருகினைப்பதன் முக்கியதுவத்தைக் கூறினார். இத்தகைய ஒருகினைப்பை நடைமுறைப்படுத்த திட்ட வங்கி ஒன்றை செயல்படுத்த இருப்பதாகவும், இதை மனதில் கொண்டு தமிழறிஞர்கள் இதுவரை நிகழ்த்தப்பட்ட ஆய்வுகள் மற்றும் இதன் பிறகு நிகழ்த்தப்பட வேண்டிய ஆய்வுகள் பற்றியப் பரிந்துரையைக் கூறுமாறு கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்வில் ஆவணப் பதிவுகளை முதன்மைப்படுத்தி அதன் வழியாக அயல் நாட்டிற்குச் சென்ற தமிழர் வரலாற்றை விளக்கும் விதமாக முனைவர் எஸ்.

ஜெயசீல ஸ்டிபன் அவர்களின் உரை மற்றும் முனைவர் க. சுபாஷிணி அவர்களின் உரை அமைந்தது.

"தமிழ் வணிகர்கள், அடிமைகள் மற்றும் தொழிலாளர்கள் புலம்பெயர்வு" என்கிற தலைப்பில் தன்னுடைய 45 ஆண்டுகால ஜரோப்பிய ஆவணங்கள் பற்றிய ஆராய்ச்சியைப் பகிர்ந்த ஸ்டிபன் அவர்கள் புலம்பெயர்வுக்கான காரணம், அதைச் சார்ந்த சமூக மற்றும் பொருளாதார சூழல் என்று இவை அனைத்தையும் ஒரு குறிப்பிட்ட வரையறைக்குள் சுருக்க முடியாதென்றும் அவை பல பரிமாணங்கள் கொண்டதென்றும் விளக்கினார். உண்மை நிலையை நேரடி சான்றான ஆவணங்களை ஒப்பீட்டு பார்ப்பதன் மூலமே அறியமுடியும் என்று சான்றுகளை அடுக்கினார். மேலும் அவர் ஆவணங்களில் பிற மொழி பேசுபவர்களின் செய்திகள் சொல்லப்பட்டிருந்தாலும், அவற்றில் தமிழர்கள் பற்றியத் தகவல்களைத் தேடி ஆராய்ந்து நூல்களாக வெளியிட்டிருப்பதாக தன் உரையில் தெரிவித்தார். நிகழப்பட வேண்டியவையாக வீரமாமுனிவரின் படைப்புகள் பல ஜரோப்பிய ஆவணக் காப்பகங்களில் இருப்பதாகவும் அவை

தொகுக்கப்பட்டு வெளியுலகத்தூக்கு அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என்பதை முன்வைத்தார். ஸ்டீபன் அவர்கள் இதுவரை வெளியிட்டுள்ள நூல்கள் இத்துறைச் சார்ந்த ஆராய்ச்சியாளர்களுக்கு ஒரு பெரிய கொடை என்பது குறிப்பிடத்தக்கது.

சுபாஷிணி அவர்கள் தன்னுடைய உரையை தான் சென்ற ஆண்டில் வெளியிட்ட "தமிழர் புலப்பெயர்வு" எனும்

நூலின் சாராம்சமாகத் திரையில் காட்சிப்படுத்தினார். கடந்த 2500 ஆண்டுகளை காலவரையறைச் செய்து ஒவ்வொரு காலக்கட்டத்திற்கும் எவற்றை அடிப்படையாக வைத்து புலம்பெயர்வுக்கான வரலாற்றை ஆய்வு நோக்கில் விரிவுப்படுத்தலாம் என்று வினவினார். தன்னுடைய பயணத்தின் வழியாக அருங்காட்சியங்கள் மற்றும் ஆவணக் காப்பகங்களில் இருந்து கிடைக்கப்பெற்ற நேரடி சான்றுகளை எடுத்துக்காட்டினார். மேலும் 14ஆம் நூற்றாண்டுக்குப் பின் ஏற்பட்ட தமிழர் புலப்பெயர்வுகளைப் பற்றி அறிவதற்கு ஐரோப்பிய ஆவணப் பதிவுகளின் முக்கியதுவத்தைக் கூறி அவற்றிற்கான சில வழிகாட்டி நூல்களையும் பரிந்துரைத்தார். நிகழப்பட வேண்டியவையாக கிழக்காசிய பல்கலைக்கழகங்களுடன் இணைந்த வகையிலான ஆய்வுகளை பட்டியலிட்டார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய பிற தமிழறிஞர்கள் பின்வருமாறு:-

கலாநிதி சி. மௌனகுரு அவர்கள் "ஈழத்து தமிழ் நாடக அரங்கு : தேடல் - கருத்தியல் - அரசியல்" எனும் தலைப்பில் ஒரு சமூக எழுச்சியை கொண்ட நாடகம் சார்ந்த வாழ்வியலை இலங்கையில் இருந்து காணொளி மூலம் நிகழ்த்தினார்.

திரு. இந்திரன் அவர்கள் "தமிழர் எதிர்காலவியல்" எனும் தலைப்பில் வாய்வழி வழக்கில் தொடரப்படும் புலம்பெயர்ந்தோரின் தமிழ் அடையாளங்கள் மற்றும் அவற்றை ஆவணப்படுத்தும் செயல் போன்றவற்றை தொலைநோக்கு பார்வையுடன் தன் உரையில் கூறினார்.

முனைவர் பாரதி சங்கர ராஜூலு அவர்கள் "அமெரிக்கத் தமிழரும் தமிழும்" எனும் தலைப்பில் அமெரிக்க இளம் தலைமுறையினர் தமிழ் கல்வியை அணுகும் முறைப் பற்றிக் காணொளி மூலம் நிகழ்த்தினார்.

முனைவர் மார்க்சிய காந்தி அவர்கள் "அயல்நாடுகளில் உள்ள தமிழ்க் கல்வெட்டுகள்" எனும் தலைப்பில் கிபி 4 ஆம் நூற்றாண்டு வரை அயல்நாடுகளில்

கிடைக்கப்பெற்ற தமிழி எழுத்துகள் பொரித்த கல்வெட்டுகள் மற்றும் பானையோடுகள், அதன்பிறகு கிபி ஒக்கு பின் கிடைக்கப்பெற்ற தமிழ்க் கல்வெட்டுகள் போன்ற தகவல்களை உரையாக நிகழ்த்தினார்.

முனைவர் குறிஞ்சி வேந்தன் அவர்கள் "புலம்பெயர்ந்தோர் வாழ்வியலைப் புலப்படுத்தும் தமிழ்ப் புதினங்கள்: வரலாறும் வளர்ச்சியும்" எனும் தலைப்பில் மலேசியாவில் இருந்து வெளியிடப்பட்ட உண்மை நிகழ்வுகளை உள்ளடக்கிய புதினங்கள் பற்றியும் அவற்றில் குறிப்பிடப்பட்ட மரண வழி பாதை போன்றவற்றையும் விரிவாக எடுத்துரைத்தார்.

முனைவர் ர. பூங்குன்றன் அவர்கள் "கடல்சார் வணிகம்" எனும் தலைப்பில் மெசபோடேமியா சிந்து வணிகத் தொடர்பு தொடங்கி தமிழக நிலப்பரப்பில் சங்க காலம் வரையிலான வணிகத் தகவல்களை எடுத்துக்கூறினார்.

முனைவர் அ. வெண்ணிலா அவர்கள் "கரும்புத் தோட்டத்தினிலே" எனும் தலைப்பில் மகாகவி பாரதியின் வரியில் பிஜி நாட்டுக்கு அடிமையாக சென்ற

தமிழர்களின் துயரத்தை உணர்வுபூர்வமாக வெளிப்படுத்தினார்.

நிகழ்ச்சியின் இறுதியாக பங்கேற்பாளர்களுடன் சில உரையாடல்கள் நடந்தது. அப்போது பர்மா, இலங்கை போன்ற நாடுகளை தாயகமாக கொண்ட தமிழர்கள் தங்கள் கருத்துகள் மற்றும் கேள்விகளை முன்வைத்தனர்.

இந்நிகழ்வில் போது தன்னால் தொகுத்து அறிமுகப்படுத்தப்பட்ட இலத்தின் மொழியில் 1733 ஆம் ஆண்டு வெளிவந்த வீரமாமுனிவரின் திருக்குறள் சார்ந்த படைப்பை நூலாசிரியர் எஸ். ஜெயசீல ஸ்டீபன் அவர்கள் சுபாஷிணி அவர்களுக்கு பரிசாக அளித்தார். இதே நாளில் 2019ம் ஆண்டு ஜெர்மனி ஸ்டுட்கார்ட் நகரில் உள்ள ஜெர்மனியின் மிகப்பெரிய ஆசிய அரும்பொருட்களைப் பாதுகாக்கும் லிண்டன் அருங்காட்சியகத்தில் திருவள்ளுவருக்கு 2 ஐம்பொன் சிற்பங்களை நிறுவி தமிழர்களுக்குப் பெருமை சேர்த்தது தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு.

- மரிய ஜெரின் (14-12-25)

ச. மலேசிய நாட்டின் கிள்ளான் - பாராட்டு விழா

மலேசிய நாட்டின் கிள்ளான் நகரில் இன்று நடைபெற்ற தமிழ் மக்கள் ஒன்று கூடும் நிகழ்ச்சியில் மாலை அணிவித்து சிறப்பு செய்யப்பட்டேன். மலேசிய மண்ணில் கிடைக்கின்ற வாழ்த்தும் பாராட்டுக்களும் மனதிற்கு அதிக உற்சாகத்தைத் தருகின்றன. தாய்நாட்டின் சிறப்பு அது.

கிள்ளான் நகரின் முக்கியஸ்தர் வள்ளல் திரு. ஓம்ஸ் அவர்கள் இந்த நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கினார். உலகத் தமிழ்

பண்பாட்டு இயக்கத்தின் தலைவர் திரு சண்முகம் அவர்கள் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார்.

மலேசிய நாட்டில் செய்யப்பட வேண்டிய ஆய்வுகள் பற்றியும் ஓர் ஆய்வுக் கருத்தரங்கம் மற்றும் ஆய்வாளர்களை உருவாக்கும் பயிற்சிப் பட்டறை பற்றியும் இன்று எனது உரையில் என் கருத்துக்களை முன் வைத்தேன். இக்கருத்துக்கு நல்ல வரவேற்பு கிடைத்தது. 2026 மலேசியாவில் இத்தகைய ஒரு நிகழ்ச்சியை ஏற்பாடு செய்யும் திட்டத்தையும் தொடங்கிவிட்டு வந்திருக்கிறோம்.

தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பின் 2026 ஆம் ஆண்டின் செயல் திட்டத்தில் இந்த நிகழ்வும் முக்கியமான ஒரு நிகழ்வாக அமையும்.

தமிழ் மரபு அறக்கட்டளை நூல்கள் மலேசியா நண்பர்களின் பார்வைக்காக..

- சுபாஷிணி (16.12.2025)

டி. கந்தசாமி நாயுடு கல்லூரி கருத்தரங்கம்

தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு நமது வெள்ளி விழா தொடக்க நிகழ்வில் ஆகஸ்ட் 24ஆம் தேதி இந்த வெள்ளி விழா ஆண்டு முழுவதும் டாக்டர் சேவியர் எஸ் தனிநாயகம் அவர்களது தமிழ்ப்பணிகளை பற்றிய விழிப்புணர்வை தமிழ்நாட்டு கல்லூரிகளிலும் பலகலைக் கழகங்களிலும் பொது மக்களிடையேயும் விரிவாக்கம் செய்யும் பணியை செயல்படுத்தும் என்ற செய்தியை எனது உரையில் வெளியிட்டிருந்தேன்.

அதன் அடிப்படையில் தமிழறிஞர் டாக்டர் சேவியர் தனிநாயகம் அவர்கள் பற்றிய ஒரு நாள் கருத்தரங்கை நாங்கள் முன்னெடுக்கின்றோம் என முதன் முதலில் முன் வந்தவர் சென்னை கந்தசாமி நாயுடு கல்லூரி முதல்வர் முனைவர் முத்துராமலிங்க ஆண்டவர் அவர்கள்.

இந்த ஆண்டு நவம்பர் தொடங்கி முதலில் சென்னை பல்கலைக்கழகத்தில் சிறப்பு சொற்பொழிவு மற்றும் கருத்தரங்கம் ஒன்றை 28 நவம்பர் அன்று நிகழ்த்தினோம்.

அதன் தொடர்ச்சியாக 9 டிசம்பர் அன்று சென்னை நந்தனம் கல்லூரியில் டாக்டர் சேவியர் தனிநாயகம் அவர்களது தமிழ்ப்பணிகள் என்ற தலைப்பில் உரை நிகழ்ச்சி ஒன்றை ஏற்பாடு செய்திருந்தோம்.

இன்று அதன் தொடர்ச்சியாக சென்னை கந்தசாமி நாயுடு கல்லூரியில் ஒரு நாள் கருத்தரங்கமாக டாக்டர் சேவியர் எஸ் தனிநாயகம் அவர்களது தமிழ்ப் பணிகள் என்ற பொருளில் நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அதன் தொடக்க விழாவில் தனிநாயகம் அவர்களது தமிழ்ப் பணிகள் பற்றி சிறப்புரை வழங்கினேன்.

இன்று நாள் முழுதும் நடைபெறுகின்ற இந்த நிகழ்ச்சியில் மாணவர்கள் அறிந்து கொள்ளும் வகையில் பல்வேறு தலைப்புகளில் ஆய்வறிஞர்கள் டாக்டர் சேவியர் தனிநாயகம் அவர்கள் பற்றிய பல்வேறு செய்திகளை ஆய்வுக் கட்டுரைகளாக சமர்ப்பிக்க உள்ளனர்.

இத்தகைய நிகழ்ச்சிகள் மாணவர்களிடையே மட்டுமின்றி பேராசிரியர்கள் மத்தியிலும் டாக்டர் சேவியர் தனிநாயகம் அவர்கள் பற்றிய செய்திகளை கொண்டு சேர்க்கும்.

- சுபாஷிணி (18.12.2025)

சு. அன்னை ரமாபாய் விருது பெற்றார் முனைவர் சுபாஷிணி

TEIDCO Foundation - ஒடுக்கப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட சமூக மக்களின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தும் வகையில் உருவாக்கப்பட்ட அமைப்பு. அதன் ஐந்தாவது மாநில மாநாடு நேற்று காரைக்குடியில் நடைபெற்றது.

தமிழ்நாட்டின் வெவ்வேறு மாவட்டங்களில் சிறு தொழில் மட்டுமன்றி பல்வேறு வகையான உயர் ரக வணிக முயற்சிகளில் இயங்கி செயல்பட்டு வரும் பலரையும் ஒன்றிணைத்து முன்னோக்கி கொண்டு செல்வதில் இந்த அமைப்பு சிறப்புடன் செயல்பட்டு வருகின்றது.

இந்த அமைப்பின் தலைவர் திரு சுந்தரவடிவேல் உலக நாடுகள் பலவற்றில் பணியாற்றி அனுபவம் பெற்ற பொறியாளர். குழுவில் இணைந்து செயல்படும் ஒவ்வொருவரும் மட்டுமின்றி திரு. கோவி பார்த்திபன் அவர்களும் இணைந்து நேற்று நடைபெற்ற இந்த நிகழ்வில் எனக்கு அன்னை ரமாபாய் விருதை வழங்கினார்கள்.

மக்களின் நலனுக்காக சீரிய திட்டங்களை வகுத்து செயலாற்றி வரும் இந்த அமைப்பின் செயற்குழுவினருக்கு எனது நெஞ்சம் நிறைந்த நல்வாழ்த்துக்கள்.

- சுபாஷிணி (21.12.2025)

எ. மதுரை கிளையில் வெள்ளிவிழா சிறப்பு நிகழ்ச்சி

மதுரை மாநகரில் வடக்கு மாசிவீதிப் பகுதியில் செயல்படும் மணியம்மை மழலையர் பள்ளி வளாகத்தில் தமிழ் மரபு

அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பின் வெள்ளி விழா நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. அறக்கட்டளை தலைவர் சுபாஷிணிக்குப் பாராட்டு வழங்கி சிறப்புச் செய்யப்பட்டது.

நான்காம் தமிழ்ச் சங்க செயலாளர் மாரியப்பமுரளி முன்னிலை வகித்தார். நிகழ்ச்சியை சுலேகா பானு ஒருங்கிணைத்தார். கவிஞர் ரவி, வரதராசன், செல்வம் உட்படத் தமிழ் ஆர்வலர்கள் பலர் நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

டிசம்பர் 21, 2025 ஞாயிறு அன்று மாலை மதுரையில் நடைபெற்ற முனைவர் க.சுபாஷிணி அவர்களுக்கான பாராட்டு விழாவில்.

அ. ஐரோப்பியத் தமிழ் ஆவணங்களை உலகமயமாக்கலின் தேவை - சிறப்பு சொற்பொழிவு

23.12.2025 அன்று உலகத் தமிழ்ச் சங்கம், மதுரையில் நடத்தப்பெற்ற சிறப்புச் சொற்பொழிவு நிகழ்ச்சியில்

துணைத்தலைவர் / இயக்குநர் முனைவர் இ.சா.பர்வீன் சுல்தானா அவர்கள் தலைமையுரை ஆற்றினார்.

இந்நிகழ்ச்சியில் ஜெர்மனி, தமிழ் மரபு அறக்கட்டளையின் நிறுவனர் மற்றும்

தலைவர் முனைவர் க.சுபாஷிணி அவர்கள் 'ஐரோப்பியத் தமிழ் ஆவணங்களை உலகமயமாக்கலின் தேவை' என்னும் தலைப்பில் பொழிவுரை ஆற்றினார்.

இந்நிகழ்ச்சிக்கு மதுரை, காமராசர் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் நிருவாகக்குழு உறுப்பினர் பேராசிரியர் பா.மயில்வாகனன் அவர்கள் வாழ்த்துரை வழங்கிச் சிறப்பித்தார்.

இந்நிகழ்ச்சியில் மதுரையை சார்ந்த கல்லூரி மாணவர்கள், 300க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு நிகழ்ச்சியைச் சிறப்பித்தனர்.

உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை
23.12.2025

14. தமிழ் மரபு அறக்கட்டளை செயல்பாடுகள்

க. இணையவழி திசைக்கூடல் நேரலைகள்

விக்கிமீடியாவும் பல்லாடக ஆவணப்படுத்தலும்: விக்கிமீடியர் நீச்சல்காரன்

—விக்கிமீடியர் நீச்சல்காரன்
திசைக்கூடல் – 392 [டிசம்பர் 6, 2025]
https://youtu.be/f8b6vyzTZs0

உ. மரபுக் காணொளி வெளியீடு

இந்தோனேசிய-சுமத்ரா தீவில் உள்ள பண்டா ஆச்சே நகர் தமிழர்கள் – பழனி ஆண்டவர் கோயில்: முனைவர் க. சுபாஷிணி

https://youtu.be/0CZS43iYOtY

இந்தோனேசியா ஆச்சே நகரில் 1934ஆம் ஆண்டு கட்டப்பட்ட பழனி ஆண்டவர் கோயில் இந்தோனேசிய-சுமத்ரா தீவில் உள்ள பண்டா ஆச்சே நகர் தமிழர்கள்

நன்றி: திருமிகு ராதாகிருஷ்ணன், ஜெயஸ்ரீ

நேர்காணல்: முனைவர் க.சுபாஷிணி, தமிழ் மரபு அறக்கட்டளை

சுமத்ரா தீவில் உள்ள பண்டா ஆச்சே பழனி ஆண்டவர் கோவில்
https://youtu.be/54xlnduUJWk

தமிழ் மரபு அறக்கட்டளையின் இந்தோனேசியாவின் வரலாறு, மற்றும் தமிழ்ப்பள்ளி தொடக்கம் குறித்த ஆய்வுப்பயணம் - இந்தோனேசியா ஆசியத் தமிழ்ச்சங்கத்தின் தலைவர் டாக்டர் விசாகன் உரை
https://youtu.be/zUfhnfVsWZg

இந்தோனேசியா பின்ஜாய் நகரின் மாரியம்மன் கோயில் (Sri Mariamman Koil, Binjai, Indonesia)
https://youtu.be/yon9cajbmZQ

மேடானுக்கு தமிழர்கள் புலம்பெயர்ந்த வரலாறு - களப்பணி பதிவு
https://youtube.com/shorts/PD7zgx2jXKA

இந்தோனேசியா ஆச்சே நகர் புத்தர் கோயில் (Vihara Buddha Sakyamuni Banda Aceh)
https://youtu.be/1WikzJoe74w

ஈ. நூல் பரிசளிப்பு

திருக்குறளின் முதல் மொழிபெயர்ப்பு

இலத்தின் மொழியில் 1733 ஆம் ஆண்டு வெளிவந்த வீரமாமுனிவர் படைப்பு. தொகுத்து அறிமுகப்படுத்திய நூலாசிரியர் அறிஞர் எஸ். ஜெயசீல ஸ்டீபன் அவர்கள் கைகளினால் பரிசாக இந்த நூலை பெறுவது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது.

உலகளாவிய தமிழர் புலப்பெயர்வு மட்டுமன்றி தமிழ்நாட்டுக்கு ஐரோப்பியர் வருகை மற்றும் தமிழ்நாட்டில் இருந்து அயல் நாட்டிற்குச் சென்ற தமிழர் வாழ்க்கை வரலாறு ஆகியவற்றை ஆராய்ந்து பல

நூல்களாக வெளியிட்ட சிறப்புக்குரியவர் டாக்டர் எஸ். ஜெயசீல ஸ்டீபன் அவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

- சுபாஷிணி (04-12-2025)

இந்தோனேசியாவில் தமிழ் பள்ளி

நமது இனிய நண்பர் டாக்டர் விசாகன் அவர்கள் இன்று காலை சென்னையில் உள்ள எனது இல்லம் வந்திருந்தார். தமிழ் மரபு அறக்கட்டளை நூல் வெளியீடுகளைப் பார்த்து மகிழ்ந்தார். தமிழர் புலப்பெயர்வு நூல் ஒன்றையும் வாங்கிக் கொண்டார்.

இந்தோனேசியாவில் தமிழ் பள்ளி தொடங்கும் முயற்சியைத் தமிழ் மரபு அறக்கட்டளை தொடங்கி இருக்கின்றோம். அதன் அடிப்படையில் தமிழக அரசுடன் இணைந்து ஆசிரியர்களை மேடான் ஜகார்த்தா ஆகிய நகரங்களுக்கு அனுப்பி வைக்கும் பணியையும் தொடங்கி

இருக்கின்றோம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த திட்டத்தின் செயல்பாடுகளை வருகின்ற காலங்களில் மேலும் பகிர்ந்து கொள்கிறேன்.

- சுபாஷிணி (05-12-25)

அயலகத் தமிழர் நாள்

2026 ஜனவரி 11&12 ஆகிய இரு நாட்கள் புலம்பெயர்ந்த தமிழர்களைக் கொண்டாடும் வகையில் அயலகத் தமிழர் நாள் என்ற விழாவைக் கடந்த சில ஆண்டுகளாக தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகின்றது. அதற்கான ஏற்பாடுகள் தொடங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

கூடுதலாக இந்தோனேசியாவிற்கு ஆசிரியர்களை அனுப்பி வைக்கும் தமிழ் மரபு அறக்கட்டளை மற்றும் ஆசிய தமிழ்ச் சங்கம் தொடங்கிய திட்டம் தொடர்பாகவும் இன்று காலை உரையாடுவதற்காக சென்னை எழிலகத்தில் உள்ள அலுவலகத்திற்குச் சென்றிருந்தோம். என்னோடு இந்தோனேசியாவின் டாக்டர் விசாகன் அவர்களும் உடன் வந்திருந்தார்.

அயலகத் தமிழர் நலத்துறை ஆணையராக தற்சமயம் பொறுப்பில் இருப்பவர் முனைவர் வள்ளலார் இ.ஆ.ப. அவரோடு நிகழ்ச்சி தொடர்பான விஷயங்களையும் இந்தோனேசியாவிற்கு அனுப்பப்பட இருக்கின்ற ஆசிரியர்கள் மற்றும் அதனை ஒட்டி உள்ள அரசாங்க அலுவல்கள் மற்றும் அதிகாரப்பூர்வ செயல்பாடுகள் பற்றியும் இன்று உரையாடினோம்.

எனது தமிழர் புலப்பெயர்வு நூலை அவருக்குப் பரிசளித்தேன். டாக்டர் வள்ளலார் அவர்கள் அவர் எழுதிய திண்டுக்கல்லில் எழுதிய வரலாறு என்ற நூலை பரிசளித்தார்.

- சுபாஷிணி (08-12-25)

தமிழ் சூழலில் மூடநம்பிக்கை ஒழிய..

எனது பல ஆண்டுகள் நட்பு.. தமிழ்ச் சமூகம் முன்னேற வேண்டும் என பினாங்கு அறிவியல் பல்கலைக்கழகத்தில் விளையாட்டுத்துறை உயர் அதிகாரியாகப் பணி ஓய்வு பெற்ற பின்னரும் கூட தொடர்ந்து சமூகப் பணியாற்றிக் கொண்டிருக்கும் நல்ல உள்ளம்.. பினாங்கு மாநிலத்தின் திரு சோமசுந்தரம்.

பினாங்கில் உள்ள தமிழ் மக்கள் மூடநம்பிக்கைகளில் மிக ஆழமாக சென்று கொண்டிருக்கிறார்கள். எனக்கு நல்ல நூல்களை வரும்போது கொண்டு வாருங்கள் என்று கேட்டிருந்தார். குறுகிய கால பயணத்தில் நிறைய புத்தகங்களைக் கொண்டு செல்ல முடியாத சூழலில் அவருக்கு அண்மையில் திரு ஆர் பாலகிருஷ்ணன் எழுதி வெளிவந்த அகஸ்தியர் நூலை வழங்கினேன்.

எவ்வகையில் இந்த அகஸ்தியர் என்ற கருத்தாக்கம் திட்டமிடப்பட்டு தமிழ் சூழலில் எக்காலத்தில் பரவலாக்கம் செய்யப்பட்டது என்பதை விளக்கும் இந்த நூல் நிச்சயமாக தமிழ் சிந்தனையில் இருக்கும் புராண இதிகாச கருத்துகளுக்கு சில தெளிவுகளை வழங்கும் என்ற நம்பிக்கையில்.

- சுபாஷிணி (16.12.2015)

தமிழ் மரபு அறக்கட்டளை வெளியீடுகள்

1. Der Kural Des Thiruvalluvar
   By Dr.Karl Graul (First edition 1856 reprinted - 2019) Euro.25

2. Thiruvalluvar's Prose
   By August Fridrich Cammerer(First edition 1803 reprinted - 2019) Euro 25

3. **திருவள்ளுவர் யார்?** (2021)
   ஞானதம சன்னா ரூ.200

4. **நாகர் நிலச்சுவடுகள் (இலங்கை பயண அனுபவம்)** (2020)
   மலர்விழி பாஸ்கரன் ரூ.100

5. **அறியப்பட வேண்டிய தமிழகம்** (2021)
   தொ. பரமசிவன் நேர்காணலும் கட்டுரைகளும்
   தொகுப்பாசிரியர் - முனைவர்.க.சுபாஷிணி ரூ.80

6. **கீழக்கரை வரலாறு** (2021)
   எஸ்.மஹ்மூது நெய்னா *(இப்போது.காம் இணைபதிப்பு)* ரூ.300

7. **கொங்குநாட்டுக் கல்வெட்டுகள்** (2021)
   துரை சுந்தரம் ரூ.160

8. **கொங்கு நாட்டுத் தொல்லியல் சின்னங்கள்** (2021)
   துரை சுந்தரம் *ரூ.140*

9. **தொல்லியல் நோக்கில் தமிழ்நாட்டுக் கடவுளரும் வழிபாட்டு மரபுகளும்**(2021)
   கோ. சசிகலா ரூ.180

10. **வரலாற்றில் பொய்கள்** (2021)
    தேனிமாழி ரூ.100

11. **விளையாடிய தமிழ்ச்சமூகம்** (2022)
    ஆ. பாப்பா ரூ.300

12. **கல்வெட்டில் தேவதாசி** (2022)
    எஸ் சாந்தினிபி ரூ.150

13. **ராஜராஜனின் கொடை** (2022)
    க. சுபாஷிணி ரூ.180

14. **இலக்கிய மீளாய்வு** (2023)
    தேனிமாழி ரூ.150

15. **கணிதவியல்** (2023)
    ப. பாண்டியராஜா ரூ.180

16. **ராஜேந்திர சோழனின் ஒட்ர நாடு வெற்றி** (2023)
    ஜெ. ஆர். சிவராமகிருஷ்ணன் ரூ.90

17. **வரலாற்று ஆய்வில் களப்பணிகள்** (2023)
    க. சுபாஷிணி ரூ.120

18. **தமிழகத்தில் பௌத்தம்** (2023)
    தேனிமாழி ரூ.120

19. **நிலவியல் நோக்கில் கங்கைகொண்ட சோழபுரம் வரலாறு** (2023)
ஜெ. ஆர். சிவராமகிருஷ்ணன் ரூ.300

20. **நீலக்கடல் முழுதும் கப்பல் விடுவோம்** (2023)
நரசய்யா ரூ.150

21. **பொருள்முதல்வாதப் பார்வையில் ஆதிசங்கரரின் அத்வைதம்** (2023)
அ. கா. ஈஸ்வரன் ரூ.180

22. **பத்துப்பாட்டில் சொல்லோவியங்கள் - தொகுதி 1** (2023)
ப. பாண்டியராஜா ரூ.250

23. **பத்துப்பாட்டில் சொல்லோவியங்கள் - தொகுதி 2** (2023)
ப. பாண்டியராஜா ரூ.250

24. **நக்கீரர் நடைப்பயணம்** (2024)
ப. பாண்டியராஜா ரூ.180

25. **தமிழர் புலப்பெயர்வு உலகளாவிய பயணங்கள்-குடியேற்றங்கள்-வரலாறு** (2024)
க. சுபாஷிணி ரூ.500

26. **கொரியாவில் தமிழ்ச் சுவடுகள்** (2024)
நா. கண்ணன் ரூ.220

27. **வரலாற்று நிலவியல் நோக்கில் சிதம்பரம்-நகரும் நகர்ப்புறமும்** (2024)
ஜெ. ஆர். சிவராமகிருஷ்ணன் ரூ.320

28. **தமிழக நிலப்பரப்பில் பின்வாங்கியகடல்களும் கடல்கொண்டநிலங்களும்** (2024)
ச. சிங்காரநெஞ்சன் ரூ.140

29. **தமிழக நிலப்பரப்பில் பாதை மாறிய ஆறுகள்** (2024)
ச. சிங்காரநெஞ்சன் ரூ.120

30. **சங்க இலக்கியம் எனும் சிந்துவெளி திறவுகோல்** (2024)
தமிழ் மரபு அறக்கட்டளை ரூ.120

31. **மக்கள் வரலாறு: தொடக்கமும் தொடர்ச்சியும் தொகுதி - 1** (2024)
க. சுபாஷிணி ரூ.200

32. **தொல்மனித இனங்களும் மனிதகுல இடப்பெயர்வுகளும்** (2024)
க. சுபாஷிணி ரூ.180

33. **மட்டக்களப்பு: வரலாறு, சமூகம், பண்பாடு** (2024)
ஆ.பாப்பா, மு.இறைவாணி ரூ.280

34. **தமிழ்ப் புத்தாண்டு சர்ச்சைகளும் தீர்வுகளும்** (2024)
தேமொழி ரூ.250

35. **தூரக் கிழக்கில் தமிழ் ஆய்வுகள்: கொரியா** (2025)
நா. கண்ணன், க. சுபாஷிணி, சூ. ஆம்ஸ்ட்ராங் ரூ.250

36. **விண்ணை நோக்கி இலக்கியத்தில் அறிவியல் செய்திகள்** (2025)
தேமொழி ரூ.180

37. **மக்கள் வரலாறு தொடக்கமும் தொடர்ச்சியும் தொகுதி - 2** (2025)
க. சுபாஷிணி ரூ.250

38. **மக்கள் வரலாறு தொடக்கமும் தொடர்ச்சியும் தொகுதி - 3** (2025)
க. சுபாஷிணி ரூ.250

39. **தமிழ் வலசை** (2025)
சிவ இளங்கோ ரூ.150

40. **மின்தமிழும் செம்மொழியும்** (2025)
நா. கண்ணன் ரூ.220

41. **வள்ளுவர் குறள் ஆத்திசூடி முறையில்** (2025)
தேமொழி ரூ.50

42. **Ancient Tamil Corpus:A key to understand the Indus Riddle** (2025)
Tamil Heritage Foundation ரூ.120

43. **மணிமேகலையின் பௌத்தப் பேரறம்** (2025)
அரங்கமல்லிகா ரூ.300

44. **Life and Achievements of Chola Emperor Rajaraja I Redefined** (2025)
Sundhar Bharadhwaj ரூ.450

தமிழ் மரபு அறக்கட்டளையின் பதிப்பக நூல்களை சென்னையில். **டிஸ்கவரி புக் பேலஸ்; ஆழி பதிப்பகம்; எமரால்ட் பதிப்பகம்** ஆகிய இடங்களில் நேரில் வாங்கலாம்

நூல்களை இணையம் வழியாக கீழ்க்காணும் தளங்களில் பெறலாம்:
https://www.commonfolks.in/books/tamil-heritage-foundation

https://wisdomkart.in/books-publication/tamil-heritage-foundation/

தமிழ் மரபு அறக்கட்டளை
Tamil Heritage Foundation

THF

தமிழர் வரலாற்றுக்கு ஓர் அரண்

Electronic Preservation of Tamil Heritage Materials
e-BOOK Series

an international NGO initiative to digitize
old Tamil Books and Palm Leaf Manuscripts
visit: http://www.tamilheritage.org/

தமிழ் ஓலைச்சுவடிகள், நூல் பாதுகாப்பு

பாதுகாப்பற்ற நிலையில், மறுபதிப்பு காணாத பழைய நூல்கள்,
ஓலைச்சுவடிகள் போன்ற தமிழ் முதுசொம்களை மின்பதிப்பாக்கி
தமிழ் வளத்தை நிரந்தரமாக்கும் ஒரு சர்வதேச தன்னார்வ முயற்சி
மேலும் அறிய: http://www.tamilheritage.org/

முதுசொம் முத்திரை
தமிழ்ப்பாதுகாப்பின் அக்கறை

பொங்கல் வாழ்த்து